
# கல்கி

*ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...*

கலக்க வருது
கல்கி
மதுரை மாவட்ட
வாசகர்களுக்கு
நடுப் பக்கத்தில்
கூப்பன்!

KALKI • 15.02.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



# கல்கி

15-02-2009



## சிரிப்பு சூப்பர் ஸ்டார்!

- நடிகர் நாகேஷ் நினைவுகள்

பக்.4

## "விட்டுத்தர மாட்டோம்!"

- சிதம்பரம் தீட்சிதர்கள்

பக்.8

## ஜாலி எலெக்ஷன் : C.T.T.E. காலேஜ்

பக்.26

## கல்பாக்கம் : கேள்விக்குறியாகும் எதிர்காலம்!

பக்.82

## கலக்க வருது கல்கி

மதுரை மாவட்ட வாசகர்களுக்கு நடுப் பக்கத்தில் கூப்பன்!

# பூத்து நிற்கும்



**எஸ்**.வி.சேகர் பேட்டியில் அனல் பறக்கிறதே. பிராமணர்களுக்கு இட ஒதுக்கீடு கோருவதில் நியாயம் இருக்கத் தானே செய்கிறது!

**- என்.காளிதாஸ், சிதம்பரம்**

**கி**ண்டல் காலனியில் 'ஒபாமாவுக்கு வோட்டுரிமை' சிறந்த நகைச்சுவையாய் ஜொலித்தது!

**- இந்திரன், நாகர்கோவில்**

**இ**லங்கைத் தமிழர் பிரச்னைக்காக ஜெ.வும் கலைஞரும் இணைந்து குரல் கொடுப்பதாவது... ம்கூம்... நடக்கிற கதையா இதெல்லாம்?!

**- பி.தேவி, தஞ்சை**

**ஐ**.டி. கம்பெனிகளுக்கு அடிமேல் அடி விழுவது ஏன்? என்ற கேள்விக்கு, தராசின் பதில் நெற்றிப் பொட்டில் அறைந்தாற்போல் இருந்தது.

**- ஜெ.சுகந்தி சங்கர்,**
**அம்மையப்பன்**

**மா**தா அமிர்தானந்தமயி சிறந்த ஆன்மிகவாதி மட்டுமல்ல... கல்வியாளரும்கூட என்பதில் ஐயமில்லை. அதற்கு அவரின் வார்த்தைகளே சாட்சி!

**- ம.ஜானகிராணி, சென்னை - 101**

**எ**ல்லா பிரச்னைகளுக்கும் மனிதன் தான் காரணம் என புத்தமதத் தலைவரான தலாய் லாமா கூறியிருப்பது கவனத்துக் குரியதுதான்.

**- கே.வி.ராமன்,**
**சென்னை - 73**

**க**டை விரித்தோம்; கொள்வாரில்லை! என வள்ளலார் போல வருத்தப்படவேண்டாம்! அய்யன் வள்ளுவன் நாடகத்துக்கு இந்த நிலையா? விரைவில் மாறும்.

**- கருப்பம்புலம்**
**சித்திரவேலு, நெய்விளக்கு**

'**க**ல்பாக்கம் அணு உலையா? அனைவருக்கும் உலையா?' கதிரியக்கக் கசிவு மக்களிடம் உண்டாக்கி உள்ள பாதிப்புகளும், அதனால் இப்பகுதி மக்களுக்கு உண்டாகும் கோலோன் புற்று நோய் பற்றிய செய்தியும் நெஞ்சை உலுக்கின!

**- ஏ.பி.எஸ்.ரவீந்திரன்,**
**நாகர்கோவில்**

**அ**க்னிக்கு அஸ்திவாரம் இட்ட ஆர்.வி.க்கு கல்கி புகழ் அஞ்சலி செலுத்தியதில் ஆச்சரியமில்லை!

**- ஜே.துரைராஜ், சென்னை**

**ர**யில் ராதிகா டு ராடன் ராதிகா

என்பதோடு எழுத்தாளர் ராதிகா எனவும் சேர்த்துக் கொள்ளலாம்.

- சுலோசனா சம்பத், திருவரங்கம்

இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்க, அரசியல் தலைவர்கள் மற்றும் மத்திய அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ள தலையங்கம் மிக அருமை!

- இரா.சக்கரபாணி, மதுரை

அமிர்தம் சூர்யாவின் 'தாமரைக் காடு' - வாசக மனங்களில் பூத்து நிற்கும் க(வி)தை. கதை நெடுக கவிதை வரிகளால் பின்னப்பட்டு, வெகுவாக ரசிக்க வைத்தது.

- ஆர்.ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்

ஜாலி எலக்ஷன் பகுதி ஆரம்பமே கலக்கலாக இருக்கிறது. செங்குன்றம்

# க(வி)தை!

ஆர்.பி.கோத்தி மகளிர் கல்லூரி, சுற்றியுள்ள பல கிராமங்களைத் தத்தெடுத்து, இலவச மருத்துவ முகாம்கள் நடத்துவது, விடுமுறையில் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவது போன்ற செய்திகள் படிக்கும்போது மகிழ்ச்சி தருகின்றன.

- ஆர்.பிருந்தா இரமணி, மதுரை




அம்மாவும் ஐயாவும் ஓரணியில் நிற்பது என்பது பகல் கனவு!

- த.சத்திய நாராயணன், அயன்புரம்


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: **லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்: **சீதா ரவி**

உதவி ஆசிரியர்: **கதிர்பாரதி**

வடிவமைப்பு: **எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்**

தொலைபேசி: 044 - 4343 8888 (30 lines)

தொலைநகல்: 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு: kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு: marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு: subscription@kalkiweekly.com

பிற தகவல்கள்: info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு:
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்):
ஒரு வருடம் : ரூ. 3,800/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.


"அடுத்த பேஷன்ட்" என்று டாக்டர் மணியை அழுத்தியதும், "டாக்டர்" என்று வீறிட்டபடி உள்ளே வருகிறார் ஒரு நோயாளி. உடலை வளைத்து, நெளித்து கைகளால் வயிற்றைப் பிடித்துக்கொண்டே இரண்டு நிமிடங்களுக்கு விதம் விதமாக ஏற்ற இறக்கங்களுடன் 'அம்மா... அம்மா' என்று அலறித் துடிக்க... அரங்கமே கைத்தட்டலில் அதிருகிறது.


சிறப்பு விருந்தினரும் கைதட்டி ரசித்ததுடன், அவருடைய நடிப்பைப் பாராட்டி ஒரு கோப்பை வழங்கினார். அந்த வயிற்று வலி நோயாளி நடிகர் சி.கே. நாகேஸ்வரன். அவருக்குக் கோப்பை அளித்தவர் எம்.ஜி.ஆர். நாகேஸ்வரனுக்கு, அன்றைய சிறப்பு விருந்தினர் எம்.ஜி.ஆர். என்பது தெரியாது. நாகேஷ், "எம்.ஜி.ஆரிடம் பரிசு பெற மேடைக்குச் சென்றபோது, பக்கத்தில் இருந்தவரிடம், 'இவரு யாரு?' என்று கேட்ட எனது அறியாமையை நினைத்து நான் பலமுறை சிரித்திருக்கிறேன்" என்று பின்னாட்களில் சொன்னார்.



கன்னடப் பிராமணக் குடும்பத்தில் பிறந்த நாகேஸ்வரனது குடும்பம் தாராபுரத்தில் வசித்தது. அப்பாவுக்கு மைசூரில் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் வேலை. எஸ்.எஸ்.எல்.சி. முடித்த கையோடு கோவை பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் காலேஜில்







# சிரிப்பு சூப்பர் ஸ்டார்!

இன்டர்மீடியட் சேர்ந்தார் நாகேஸ்வரன். இரண்டாவது வருடப் பரீட்சைக்குச் சில நாட்கள் முன்பாக கடும் அம்மை தாக்கியது. அது குணமடையும் தருவாயில் அடுத் தடுத்த தாக்குதல். பிழைத்ததே பெரிய விஷயம்தான். பால் வடியும் முகத்தில் அம்மை தனது ஆட்டோகிராபைக் கிறுக்கி





**வாழ்க்கையை வெகு யதார்த்தமாக எதிர்கொண்டவர் நாகேஷ். பண விஷயத்தில் அவரை வெகு கறாரான மனிதர் என்று சினிமா உலகில் சொல்வார்கள். ஆனால்...**

விட்டுப் போனது!

மனம் வெறுத்த நாகேஸ்வரன், வீட்டை விட்டு வெளியேறினார். இலக்கிலா வாழ்க்கைப் பயணம் தொடங்கியது. ஹைதராபாத்தில் கூலித் தொழிலாளியாகக்கூட வேலை பார்த்திருக்கிறார்.

யதேச்சையாக எழுதிய ரயில்வே பரீட்சையில் தேர்வாகி, சென்னை தெற்கு ரயில்வே தலைமையகத்தில் கிளார்க் வேலை கிடைத்தது. அங்கேதான் நாடக ஆசை துளிர்விட்டது.

கே.பாலசந்தரின் அறிமுகம் கிடைத்தது. நாகேஷுக்காகவே நாடகங்கள் படைத்தார் பாலசந்தர். நீர்க்குமிழியில் ஹீரோவானார். கே.பி., நாகேஷ் இருவருக்குமே அது ஒரு திருப்பு முனை!

**நா**கேஷின் வாய்த் துடுக்கு வெகு பிரசித்தம். முதல் தடவை சிவாஜியுடன் 'நான் வணங்கும் தெய்வம்' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்த சமயம், செட்டில் சிவாஜி, ''பெரிய நடிகரோடு நடிக்கிறோமேன்னு பயந்து உன் நடிப்பைக் கோட்டை விட்டுடாதே!'' என்று கிண்டலாகச் சொல்ல, நாகேஷ் நச் சென்று, ''சார்! நான் புதுப் பையன்தானேன்னு கூட நடிக்கிற நீங்க உங்க நடிப்பைக் கோட்டைவிட்டுடாதீங்க'' என்று பதில் சொல்லியிருக்கிறார்!

**ந**கைச்சுவை உச்சத்தில் இருந்தபோது, மற்ற நடிகர்கள் போல எட்டுமணி நேர கால்ஷீட் தருகிற வழக்கமில்லை. எட்டு மணி நேரத்தை நாலாகப் பிய்த்து, நான்கு கம்பெனிகளுக்குக் கொடுப்பார்! காலையில் அவரது வீட்டு வாசலில் ஏழெட்டு சினிமா கம்பெனிகளின் கார்கள் காத்துக் கொண்டிருக்கும். எந்தக் காரில் ஏறிக்கொண்டு ஸ்டுடியோவுக்குச் சென்றாலும், மற்ற கார்கள் அதைப் பின்தொடரும். அங்கே வேலை முடிந்ததும், எப்படியாவது தங்கள்

**எஸ்.சந்திரமௌலி**



# நாகேஷ் பற்றி...



**கமல்ஹாசன்:**

"நான் சிவாஜிக்கு அடுத்து நாகேஷிடமிருந்துதான் அதிகம் கற்றுக் கொண்டேன். ஒருவர் யார்? எப்படிப்பட்டவர்? என்பதை விட அவர் விஷயம் உள்ளவர் என்று தெரிந்தால் அவரை மதிக்கத் தெரிந்தவர் நாகேஷ். அவரது உடலைப் பார்த்துவிட்டு ஐந்து நிமிடம்தான் அழுதிருப்பேன். அப்புறம் அவரது அற்புதமான நகைச்சுவைக் காட்சிகள் நினைவுக்கு வர, பக்கத்தில் இருந்தவர்களுடன் அவற்றை நினைவுகூர்ந்து மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தேன். இப்போது இருக்கிறாரே, அந்த உயிரற்ற உடல் போலக் கூட மிகவும் தத்ரூபமாக என் படத்தில் நடித்திருக்கிறார்."

**கே. பாலசந்தர்:**

'நீர்க்குமிழி' படப்பிடிப்பின் முதல் நாள் நாகேஷ் என்னை 'சார், சார்' என்று அழைத்த போது எனக்குச் சங்கடமாக இருந்தது. "இத்தனை நாளும் வாடா போடா என்று பேசுகிற நீ திடீரென்று என்னை சார் என்று கூப்பிட்டால் கிண்டல் பண்ணுவதுபோல இருக்கு" என்றேன். என்னைத் தனியாக அழைத்துக்கொண்டு போய், "நீ இங்கே டைரக்டர்; நான் நடிகன். நான் உனக்கு உரிய மரியாதை தரவேண்டும்" என்றான். நாகேஷ் ஒரு கிரியேடிவ் ஜீனியஸ். காட்சியைச் சொல்லிவிட்டு, ரிகர்சல் பார்க்கிறபோது சொன்னபடி செய்வான். அடுத்து டேக் போகிறபோது தானாகவே இன்னும் ஏதாவது சேர்த்துக் கொண்டு காட்சியைப் பிரமாதப்படுத்தி விடுவான்.

பட ஷூட்டிங்குக்கு அழைத்துக்கொண்டு போய்விட வேண்டும் என்று மற்ற அனைவருக்கும் எண்ணம்.


**வா**ழ்க்கையை வெகு யதார்த்தமாக எதிர்கொண்டவர் நாகேஷ். பண விஷயத்தில் அவரை வெகு கறாரான மனிதர் என்று சினிமா உலகில் சொல்வார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் வெகு எளிமையான மனிதர். "எவ்வளவு பணம் இருந்தாலும் சாப்பிட ஒரு வயிறு தானே?" என்பார்.

அவர், "வயதாகிவிட்டது; நடிப்பு போதும். இனி நடிக்க வேண்டாம்" என்று பலமுறை முடிவெடுத்திருக்கிறார். ஆனால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. காரணம் பல இயக்குநர்களும், "இந்த ரோலை நீங்க பண்ணினாத்தான் நல்லா இருக்கும்; மறுக்காம ஒத்துக்கணும்" என்று நிர்ப்பந்தப்படுத்தும்போது அவரால் மறுக்க முடியவில்லை.

**சி**னிமாவில் பிரபலமாவதற்கு முன்பு, ஆல் இந்தியா ரேடியோவில் மனோரமாவுடன் சேர்ந்து நடித்த 'காப்பு கட்டி சத்திரம்', 'ஜனதா நகர்', 'துபாஷ் வீடு' போன்ற நாடகங்கள் இன்றைய 'கோலங்கள்', 'அரசி' போல ரசிகர்களிடையே பிரபலமாகப் பேசப்பட்டவை.

**சி**னிமா மூலம் கோடிக்கணக்கானவரைச் சிரிக்க வைத்த, சிரிக்க வைத்துக் கொண்டிருக்கும் நாகேஷ், சொந்த வாழ்க்கையில் பட்ட அவமானங்கள், வேதனை






கள், ரணங்கள் ஏராளம். கல்கியில் அவரது அனுபவத் தொடரை எழுதிய காலத்தில், அவற்றைக் கூட தேர்ந்த ரசனையுடன் குரலில் ஏற்ற இறக்கம் கொடுத்து, மீண்டும் நினைவு கூர்ந்தார்!

நாகேஷ் உடல்நலம் குன்றியபோது, ஒருநாள் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தேன். இயக்குநர் கே.பாலசந்தரும் அப்போது அங்கே வந்திருந்தார். தம் நெடு நாளைய நண்பனின் கைகளை வருடிக் கொடுத்தபடி, ''ராவுஜி! எப்படிடா இருக்கே?'' என்று கே.பி. கேட்டபோது, பேச முடியாத நிலையிலும் நாகேஷின் உதட்டோரத்தில் ஒரு புன்னகை. அந்தப் புன்னகை இன்னும் என் மனத்தில் நிழலாடுகிறது.

''நாகேஷ் இன்று நம்மிடையே இல்லை; ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது குடும்பத்தினருக்கல்ல; அந்த மகத்தான கலைஞனை உரிய முறையில் கௌரவிக்கத் தவறிய இந்திய அரசாங்கத்துக்கு'' என்கிறார் நடிகர் ஒய்.ஜி. மகேந்திரா.

உருவத்தை மட்டும் தட்டாத உருப்படியான நகைச்சுவை; வார்த்தை விளை

> 'அன்னை இல்லம்' என்ற படத்தில் நாகேஷ் திக்குவாய்க்காரர்களைக் கேலி செய்து நடித்ததைப் பார்த்துவிட்டு, அவரது பரம ரசிகரான அப்போதைய சென்னை போர்டு அதிகாரி ஜிடிசாஸ்திரி, நாகேஷைப் பிரத்யேகமாக தன் ஆபீசுக்கு அழைத்து, 'இனி உடல் ஊனத்தைக் கிண்டல் செய்து காமெடி பண்ணக்கூடாது' என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். அவரை, ''மறக்க முடியாத ஒரு நல்ல மனிதர் சாஸ்திரி'' என்று பாராட்டுவார் நாகேஷ்.

யாட்டை மட்டுமே நம்பாத வித்தகமான விகடம்... பத்மஸ்ரீ இல்லாது போனால் என்ன? அவர் என்றுமே ரசிகர்கள் போற்றும் ரத்னா!

அட்டை, வண்ணப்படம் : **யோகா**



சிதம்பரம் திகுதிகு வென்றிருக்கிறது. காரணம், உயர்நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, நடராஜர் ஆலயத்தின் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டதுதான். ''ஆலயத்தின் வரவு செலவுக் கணக்கு எதையும் பொது தீட்சிதர்கள் வைத்திருக்கவில்லை. ஆலயத்துக்கு வரவேண்டிய வருவாயும் வசூலிக்கப்படவில்லை. நகைகள் அடிக்கடி களவு போகின்றன. நிர்வாகத்தில் முறைகேடுகள் நடைபெற்றால் செயல் அதிகாரியை நியமிக்க இந்து சமய மற்றும் அறநிலைய ஆணையருக்கு அதிகாரம் உள்ளது'' என்று சொல்லியிருக்கிறது உயர்நீதிமன்றம்.

மூன்று, நான்காம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது சிதம்பரம் ஆலயம். சுந்தரர் நடராஜரைப் பற்றிப் பாடியதுடன், ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று தமது திருமறையைத் துவக்குகிறார்! ஆலயத்தின் நிர்வாகத்தை மீட்டெடுக்க மீண்டும் நீதிமன்றத்தை நாடும் முயற்சியிலிருக்கும் பத்து தீட்சிதர்களிடம் பேசினோம்.

''ஆலயத்தின் வரவு செலவுக் கணக்கு இல்லை என்கிறார்கள். வரவு இருந்தால்தானே! முதலில் பல நூற்றாண்டுகளாக இங்கே இருக்கும் ஆலய நடைமுறையைப் புரிந்துகொள்ள வேண்டும். பதினைந்து சன்னிதிகளில் மூலவர் மற்றும் அம்பாள் சன்னிதிக்குத்தான் அதிகக் கூட்டம் வரும். தினம் இருபது தீட்சிதர்கள் எல்லா சன்னிதிகளுக்கும் பொறுப்பில் இருக்கிறோம். வருடத்துக்கு ஓரிரு நாட்களே எங்களுக்கு மூலவர் சன்னிதியில் பூஜை செய்ய வாய்ப்பு கிடைக்கும். சன்னிதிகளுக்கு பொறுப்பாக இருக்கிற தீட்சிதர்கள், தினசரி ஒரு குறிப்பிட்ட தொகையை ஆலய நிர்வாகத்துக்குச் செலுத்தவேண்டும். நிர்வாகத்துக்குச் செலுத்தியது போக மீதியைத்தான் அவர்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும். மூலவர் மற்றும் ஒன்றிரண்டு சன்னிதிகளைத் தவிர மற்ற சன்னிதிகளில் வரும்படி அவ்வளவாக இருக்காது. எனவே தீட்சிதர்கள் தங்கள் கைக்காசைப் போட்டுத்தான் நிர்வாகத்துக்குப் பணம் கொடுக்க வேண்டும்.



# ''விட்டுத்தர

இப்படி இருந்தால் குடும்பத்தை ஓட்டு வது எப்படி? எனவேதான் தீட்சிதர்கள் நாடு முழுவதும் நடராஜ பக்தர்களைத் தேடிப் போய்,"பிறந்தநாள், திருமண நாள் அன்று அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் அனுப்பு கிறோம்!" என்று கிளம்பி விடுகிறார்கள். சொன்னபடி பிரசாதமும் அனுப்பி விடு கிறோம். இப்படிச் செய்வதன் மூலம் குடும் பத்தை ஓட்ட கொஞ்சம் வரும்படி கிடைக் கிறது. ஆலயத்தில் எங்கும் உண்டியல் கிடையாது. (கட்டண தரிசனம் என்றெல் லாம் காக வசூலிப்பது கிடையாது.)

1987ல் ஆலயத்தை அரசு எடுத்துக் கொள்வதற்குத் தடைவாங்கியபோது, கணக்கு கொடுக்க வேண்டுமென்றார்கள். அப்போதிலிருந்து, நன்கொடையைக் கணக்கிலெடுத்து பணியாளர்கள் சம்பளம், மின்கட்டணச் செலவு காண்பித்து, ஆடிட் டர் சான்றிதழ் பெற்று கணக்கை நீதிமன்றத் துக்கும், இந்து சமயத் துறைக்கும் அனுப் பிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, நிலத்திலிருந்து வருமானம் வசூலிக்கப்படவில்லை என்கிறார்கள். ஆலய நிர்வாகத்தின் நேரடிக் கண்காணிப் பில் நிலங்கள் கிடையாது. ஆலய தாசில்தார் என்று ஒருவர் இருக்கிறார். அவர்தான் வசூல் செய்ய வேண்டும். அப்படி அவர் கொடுக்கும் பணத்தை வைத்துத்தான் மின் கட்டணம் கட்டி வந்தோம். ஆனால் இப் போது அவர் கொடுக்கும் தொகை மிகக் குறைந்துவிட்டது.

நகைகள் களவு போவதாகச் சொல் கிறார்கள். காணிக்கை கொடுக்கும் நகைகளுக்கு ரசீது கொடுக்கப்படுகிறது. மற்றபடி குண்டுமணி நகை காணாமல் போனால்கூட, பொறுப்பிலிருக்கும் தீட்சிதர்கள் மாற்று நகையைச் செய்து தர வேண்டும். இந்து சமயத் துறையின் நகை சரிபார்ப்பு அதிகாரி வருடத்துக்கு ஒருமுறை நகைகளை செக் செய்து சான்றிதழ் தருகிறார். இதைவிட வேறென்ன வேண்டும்?

ஆறு காலப் பூஜை தவறா மல் நடக்கின்றன. அபிஷேகத்துக்கும், பூஜைக் கும் கட்டளைகள்



"தீட்சிதர்கள் தங்கள் கைக்காசைப் போட்டுத்தான் நிர்வாகத்துக்குப் பணம் கொடுக்க வேண்டும். இப்படி இருந்தால் குடும்பத்தை ஓட்டுவது எப்படி?"

# மாட்டோம்!"

– சிதம்பரம் தீட்சிதர்கள்

# சிதம்பர ரகசியமா?

"நீதிமன்றம் உத்தரவு கொடுத்தவுடன் தீட்சிதர்களுக்கு அவகாசம் கொடுக்காமல் அவசர அவசரமாக ஆலய நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டதைப் பார்த்தால், இதில் ஏதோ சிதம்பர ரகசியம் இருப்பது புரிகிறது'' என்கிறார், ஆலயம் தொடர்பான பிரச்னைகளுக்குப் போராடும் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத்.

"கிறித்துவ, முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களில் அரசு மூக்கை நுழைப்பதில்லை. அது போல இந்து ஆலயங்களை அரசின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பல காலமாகப் போராடி வருகிறோம். அரசு நுழைந்தால், அரசியல் நுழைகிறது. தொடர்ந்து, ஊழல், லஞ்சம், கொள்ளையடிப்பது நடக்கிறது. மற்றொரு ஆபத்து, நாத்திக உணர்வு கொண்ட ஆட்சியாளர்கள் என்றைக்கும் ஆலயங்கள் சிறப்பாக இருக்க உதவ மாட்டார்கள். தமிழ்நாட்டில் 38,000 ஆலயங்கள் அரசு நிர்வாகத்தில் இருக்கின்றன. டாஸ்மாக்குக்கு அடுத்தபடியாய் வருமானம் கிடைக்கும் காமதேனுவாகத்தான் அரசு ஆலயங்களை நினைக்கிறது. அறவோர் வாரியம் ஒன்றை அமைத்து, ஆலயங்களை நிர்வகிக்க வேண்டும். தீட்சிதர்கள் தவறு செய்தால் அதைத் திருத்த வேண்டுமே தவிர, அவர்களிடமிருந்து நிர்வாகத்தைப் பறித்துக் கொள்ளக்கூடாது. தீட்சிதர்களும், பக்தர்களிடம் காசு பறிப்பதும், எரிச்சலூட்டும்படி நடந்து கொள்வதும் கூடாது. போகிறபோக்கில் தர்மபுரம், திருவாவடுதுறை மடத்துக் கோயில்களையும் அரசு எடுத்துக் கொள்ளும் ஆபத்து இருக்கிறது. விழித்துக் கொள்வோம்'' என்று எச்சரிக்கிறார்.



* அர்ஜுன் சம்பத்

உண்டு. வேண்டிய சாமான்களை, பொறுப்பிலிருக்கும் தீட்சிதரிடம் உபயதாரர் அல்லது அவர் ஆட்கள் கொடுத்து விடுவார்கள். திருப்பணி என்றால், உபயதாரர் நேரடியாக வந்து, பணிகளுக்குப் பொறுப்பேற்று, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் போகிறார்கள். நாங்கள் பணத்தைக் கையாள்வது கிடையாது.

இடையில் ஆறுமுகசாமியைக் கிளப்பி விட்டு, 'நாங்கள் தமிழுக்கு விரோதிகள் போல' கதை கட்டினார்கள். பெரியபுராணம் அரங்கேறிய இடம் இது. தமிழும், சமஸ்கிருதமும் எங்களுக்கு இரு கண்கள். கனக சபையில் பல நூற்றாண்டுகளாக தேவாரமும், திருவாசகமும் ஓதப்பட்டே வருகின்றன'' என்கிறார்கள் தீட்சிதர்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளல் பச்சையப்ப முதலியார், இறக்கும்போது உயிலில், 'தமக்குப் பின் தமது சொத்துக்களை தில்லை தீட்சிதர்கள்தான் நிர்வாகிக்க வேண்டும்' என்று எழுதி வைத்தாராம். அதன்படி 47 வருடங்கள் சொத்துக்களைப் பராமரித்த தீட்சிதர்கள், பின்னர் ஒரு டிரஸ்ட் அமைக்கப்பட்டவுடன் அதனிடம் ஒப்படைத்தார்களாம். "அப்படிப்பட்ட நம்பிக்கைக்குரியவர்கள் நாங்கள். கடவுள் எங்களுக்குத் தந்த இந்த உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம். இறுதிவரை போராடி மீட்டெடுப்போம்'' என்று உணர்ச்சிபூர்வமாகச் சொல்கிறார் தங்கராஜ் தீட்சிதர்.

**- ப்ரியன்**


கோயில் நகரமாம் "குடந்தை" மாநகரில்
ஆர்ப்பரித்து ஓடும் காவிரி நதிக்கரையில்
அமைய இருக்கும்

# "CAUVERY VIEW" Apartments

மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ள

**BEST**

நிறுவனத்தினரால் வெகு வேகமாக கட்டப்பட்டு வருகின்றது




* ஒன்று மற்றும் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட
மொத்தம் 16 வீடுகள் மட்டுமே விற்பனைக்கு உள்ளன.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்க

## BEST HOUSING

A Unit of Best Group of Companies

70/114, 5th Street, Padmanaba Nagar, Adyar, Chennai - 600 020.

| S. Ramani | R. Venkatachalam | R. Devaraj |
|---|---|---|
| 98400 71735 | 98408 15931 | 98408 55522 |

* Conditions Apply



# கிரேஸியைக் கேளுங்கள்

• எம்.மிக்கேல் ராஜ், விருதுநகர்

**நகைச்சுவை, ஜோக், தமாஷ், சிரிப்பு, புன்னகை இவற்றில் உங்களைக் கவர்ந்த வார்த்தை எது?**

''நாகேஷ்.''

• வாசுதேவன், நவிமும்பை

**ஜாதகப் பொருத்தம் பார்த்துப் பார்த்து செய்த திருமணங்கள் விவாகரத்தில் முடிகிறதே. என்ன செய்ய?**

ஜாதகத்தில் சாதகமாய் 'பத்து - பொருத்தம்' இருக்கா என்று பார்த்த கையோடு, பாதகமாய் விவாக 'ரத்து-பொருத்தம்' இல்லை என்பதையும் இனி பார்த்துத் தொலைக்க வேண்டியதுதான்.

• அ.கஹைல் ரஹ்மான், திருச்சி

**'தவறு செய்யாதவன் மனிதனே இல்லை' என்பது சரியா?**

தவறு. மனிதன் தெய்வத்துக்கும், மிருகத்துக்கும் நடுவில் உள்ள 'middle man' மதில் மேல் மனிதன். தவறே செய்யாது இந்தப் பக்கம் ஆத்தில் சரியாக விழுபவன் தெய்வமாகிறான். திரும்பத் திரும்ப தவறே செய்பவன், அந்தப் பக்கம் சேத்தில் தவறி விழுந்து மிருகமாகிறான். அதனால்தான் தெய்வமான மனிதனுக்குச் சிலை வைக்கிறோம். மிருகமான மனிதனுக்கு விலங்கு பூட்டுகிறோம்.

• என்.சண்முகம், திருவண்ணாமலை

**நீங்க அம்மா பிள்ளையா, இல்லை அப்பா பிள்ளையா?**

சாப்பிடும்போது அம்மாவிடம் கையேந்தும் வாயுள்ள பிள்ளை. காசு கேட்கும்போது அப்பாவிடம் கையேந்தும் கணக்குப் பிள்ளை. மற்ற நேரங்களில் நகைச்சுவையைக் கையேந்திக் 'கொடுப்பார் கைப்பிள்ளை'.

• ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

**பெண்கள் நாட்டின் கண்கள் என்றால், ஆண்கள்....?**

"CONTACT LENS".

• தேவயானி, ஈரோடு

**கிரேசிக்குப் பிடித்தது ஹோட்டல் சாப்பாடா...? வீட்டு சாப்பாடா...?**

ரெசிடென்ஸி ஹோட்டல் அப்பா சாமி ரவியின் வீட்டுச் சாப்பாடு.

• ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி

**அடியார்கள் - அடியாட்கள், இருவருக்கும் என்ன ஒற்றுமை..? என்ன வேற்றுமை..?**

ஒற்றுமையை விதைப்பது அடியார்கள்... வேற்றுமையை

## பெண்களின்

வளர்ப்பது அடியாட்கள். அடியார்கள் சமூகத்துக்கு சேவை செய்வார்கள்... அடியாட்கள் சமூகத்தையே shaveஐ செய்து ஒழித்து விடுவார்கள். அடியார்கள் ஆன்மிகம்... அடியாட்கள் ஆயுதமிகம்.

• ரா.பிரசன்னா, மதுரை

**கனவில் பெண் வந்தால் 'கனவுக்-கன்னி' அதுவே ஒரு 'ஆண்' வந்தால்?**

அது கெட்ட கனவு... கையில் கொம்போடு அந்த ஆண் வந்தால், அவன்தான் அந்த கனவுக் கன்னியின், கனவுக் கணவன். குழலோடு வந்தால் 'கனவுக் - கண்ணன்'. நல்ல சொப்பனம்.

- மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

**பெண்களின் ஆயுதம் 'கரண்டி'. ஆண்களின் ஆயுதம் எது?**

'கரண்டியைத்' தூக்கி அவள் போடும் உத்தரவை, வாதம் செய்யாமல் ஏற்றுக் கொள்வதாக அவன் அளிக்கும் உத்தரவாதம். 'கரண்டிக்கு' பதில் ஆயுதம் Guarantee.

- எஸ்.ராமசாமி, ஈரோடு

**மன்னர்கள் காலத்தில் மக்கள் குறை களைத் தெரிவிக்க கட்டிய மணியை 'புகார் மணி' என்று சொல்லாமல், ஏன் 'ஆராய்ச்சி மணி' என்கிறார்கள்?**

பூம்'புகார் மணியை' கண்ணகி ஒலிப் பதற்குள், ஆராயாமல் கோவலனை அநியாயமாகக் கொன்று விட்டதால் வந்த மாற்றமாக இருக்கலாம்.

- குலசை நஜ்முத்தீன், காயல்பட்டினம்

**கடவுள் எப்போது கொட்டாவி விடுவார்...?**

நமது 'பூனைக் கண்ணை' நாம் மூடிக் கொண்டால், அவர் 'கொட்டாவி' விட்டபடி தனது 'ஞானக் கண்ணை' மூடிக் கொள்வார். ❑





# கல்கி



2009 பிப்ரவரி 15
ஸர்வதாரி மாசி 3
மலர் : 67
இதழ் : 29

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

## தீரர் கோபாலசாமி!


நவீன் சாவ்லா பற்றிய குற்றச்சாட்டை பா.ஜ.க. எழுப்பியது அரசியல் காரணங்களுக்காக இருக்கலாம். ஆனால், குற்றச்சாட்டுகளில் உள்ள உண்மையை சாவ்லாகூட மறுக்கவில்லை. இந்தச் சூழலில், தலைமை தேர்தல் கமிஷனராக அவர் அடுத்து பொறுப்பேற்க உள்ளார் என்பதுதான் நாட்டை எதிர்நோக்கும் நெருக்கடியேயொழிய, கோபாலசாமி எடுத்துள்ள நடவடிக்கை அல்ல!


சாவ்லா, எமர்ஜென்ஸி கால அத்துமீறல்களுக்காக கண்டனம் செய்யப்பட்டவர். 'மனித நேயமற்ற, அதிகார மமதையுடன் கூடிய' அவரது நடத்தையை ஷா கமிஷன் கண்டனம் செய்தது. அதன் பிறகு இருபதாண்டுகள் சென்றும் அரசு அதிகாரியாகத் தொடர்ந்தவர், காங்கிரஸ் எம்.பி.க்களுடைய தொகுதி நிதியிலிருந்து தமது குடும்ப அறக்கட்டளைக்கு நன்கொடை பெற்றுள்ளார்! காங்கிரஸ் அரசாங்கத்தால் ஏராள நிலமும் ஒதுக்கப் பெற்றவர்!

இத்தகைய ஒருவர் தேர்தல் கமிஷனராகச் செயல்படுவதில் மிகப் பெரிய அபாயம் இருக்கிறது. அவரது மேற்பார்வையில் நடக்கக்கூடிய தேர்தல், நியாயமான முறையில் நடக்குமா?

சாவ்லா நீக்கப்பட வேண்டும் என்கிற தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையரின் நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள், அவருக்கு அத்தகைய சிபாரிசு செய்யும் உரிமை இல்லை என்கிறார்கள். தேர்தல் கமிஷனர்கள் மூவரும் சம அதிகாரம் படைத்தவர்கள் என்று பழைய உச்சநீதிமன்றத் தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி வாதிடுகிறார்கள்.

கறைபடியாத அதிகாரி என அனைவராலும் ஏற்கப்பட்டுள்ள கோபால சாமி, இவ்விஷயத்தில் அத்துமீறி எந்தவிதமான சொந்த லாபமும்






காண முடியாது.

தேர்தலுக்கு இரண்டு மாதங்களே உள்ள நிலையில் ஒரு நெருக்கடியை கோபாலசாமி ஏற்படுத்தியுள்ளார் என்கிற குற்றச்சாட்டும் சரியல்ல. பா.ஜ.க. அளித்த புகாரின் பேரில், சாவ்லாவிடம் ஜூலை 2008ல் விளக்கம் கேட்டிருக்கிறார் கோபாலசாமி. எட்டுமுறை நினைவூட்டிய பிறகு, மிகத் தாமதமாக, கடந்த டிசம்பர் 10ம் தேதிதான் பதில் அளித்துள்ளார் சாவ்லா. அந்த விளக்கமும் திருப்தி தராததால்தான், அதனை பதவி நீக்க சிபாரிசுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார் கோபாலசாமி. குடியரசுத் தலைவர் அதனைக் கவனமாகப் பரிசீலித்து, தமது பொறுப்புமிக்க குறிப்புடன் அரசுக்கு அனுப்பியிருந்தால், இன்று எழுந்துள்ள சர்ச்சைக்கே இடமிருந்திருக்காது. அரசே பரிசீலித்துத் தீர்மானிக்கட்டும் என்று பிரதீபா பாடீல் முடிவெடுத்ததால், சாவ்லாவை எடைபோடும் பொறுப்பு, அவருடைய அறக்கட்டளைக்கு நன்கொடையும் நிலமும் வழங்கிய கட்சியினிடமே வந்து சேர்ந்தது!

சாவ்லா பேரிலுள்ள குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்குப் பதிலாக, "அவர் மீது நடவடிக்கை எடுக்க தலைமை தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் இல்லை, அதற்கு அரசியல் சாசனம் இடந்தரவில்லை" என்று சட்ட அமைச்சர் வாதாடுவது தேச துரோகம். மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கும் மோசடி.

கோபாலசாமி அத்துமீறியிருந்தால் அதற்கான விமர்சனத்தைப் பெறட்டும். ஆனால், அதர்மத்தை, அநீதியைத் தவிர்க்கவே அவர் அத்துமீறினார் என்பதே அவர் பலம்; தீரம்!

நவீன் சாவ்லாவோ, தர்மத்தைக் கைவிட்டு, தார்மிக நெறிகளையும் மீறியதுடன், கேட்ட விளக்கத்தை விரைந்து தராமல் மாதக் கணக்கில் தாமதித்தது, எப்படியும் ஏப்ரலில் கோபாலசாமியின் பதவிக்காலம் முடிந்துவிடும் என்கிற தைரியத்தில்தானே!

இந்த உண்மைகளை உணர்ந்து, நடுநிலையுடன் நாட்டவருக்கு எடுத்துச் சொல்லுவதே அரசியல் சாசன ரீதியாக உருவாகக் கூடிய நெருக்கடியைத் தவிர்க்கும்; நாட்டுக்கு நலன் பயக்கும். ஆட்சியில் உள்ளவர்கள், சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாக வளைத்து விளக்கமளிப்பதன் மூலம், தேச நலன் நிச்சயம் பாதிக்கப்படும்.



# போட்டோ போட்டி முடிவு



1.02.09 இதழில் அறிவித்த போட்டோ போட்டிக்கு நூற்றுக்கணக்கான 'கமெண்ட்ஸ்' அனுப்பி அசத்தியுள்ளீர்கள். அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட 'கமெண்ட்ஸ்' இதோ. இவர்களுக்கு புத்தகம் பரிசாக அனுப்பப்படுகிறது.

## டாலருக்கு ஒரு கிலோ அரிசி!



ஒபாமா மகள்: ஈராக்ல பேரழிவு ஆயுதத்தைக் கண்டுபிடிச்சுட்டீங்களா புஷ் அங்கிள்...?

புஷ்: கண்டுபிடிச்சுட்டேன்... ஒளி... ஒளி... 'ஷூ'தான் அது!

-எம்.ஆர். மூர்த்தி, மும்பை.



புஷ்: (ஒபாமாவின் மனைவியிடம்) பளிச்சுன்னு இப்படி சிரிச்சுக்கிட்டிருக்காரே மிஸ்டர் ஒபாமா. உங்களால் அவருக்குப் பிரச்னையே இல்லையா?

- லலிதா செல்லப்பா, பம்மல்.

''ஒபாமாவுக்கும் ஒசாமாவுக்கும் வித்தியாசம் தெரியாத பயலுக நிறையப் பேர் இருக்காங்க. எதுக்கும் அவரைக் கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருக்கச் சொல்லுங்க.''

- இரா. சம்பத்குமார், சென்னை-18.



''எங்க அப்பாகிட்ட உங்களுக்குப் பிடிச்சது என்ன அங்கிள்...?''

''பேச்சுதான்...! பேசித் தீர்க்க வேண்டிய விஷயத்துல பேசாம நான் கெட்டேன்; நடக்கவே முடியாத விஷயங்களைக் கூட, நம்பற மாதிரி பேசியே உங்க அப்பா ஜெயிச்சாரே..!

- எம். சம்பத், வேலாயுதம்பாளையம்



''அங்கிள்... இங்க யாரும் ஷூவெல்லாம் தூக்கி எறிய மாட்டாங்க... தைரியமா நிமிர்ந்து நடங்க...''

- பி.என். ஜெய்குமார், திருவாரூர்-2.



புஷ்: டாலருக்கு ஒரு கிலோ அரிசி போடும் திட்டம் ஏதாவது கைவசம் வெச்சுருக்கீங்களா?

- கோ.முருகேசன், சென்னை.

# Spring Cleaning!

*- Cover Story*





# BILLU

## Back with a Bang!

# DOCTOR Knows Best!

**Now on Sale**
**Rs.10/- Only**

# GOKULAM

*THE Magazine for Children*

**February 2009 Rs.10/- Only**

# கன்ஃபார்ம்

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

அதிகாலை எட்டரை மணிக்குக் கதவு தட்டப்பட்டது.

ஹாலில் படுத்துக் கிடந்தவன், சலிப்போடு எழுந்து கதவைத் திறந்தால், எதிரே பக்கத்து ஃப்ளாட் பாப்பா.

"தா, ஒனக்கு ஃபோன் வந்திருக்கு. சீக்கிரமா வந்து பேசித் தொலை. வீட்டைப் பூட்டிட்டு நா ஆஃபீஸுக்குக் கௌம்பணும்" என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

நான், "கொஞ்சம் இரு. மூஞ்சியைக் கழுவிட்டு வந்துர்றேன்" என்றதற்கு, "கழுவினாலும் ஒம் மூஞ்சி அப்படியே தான் இருக்கும். விருட்டுனு வா நா கௌம்பணும்" என்று துரிதப்படுத்தினாள்.

அவள் பின்னாலேயே போய் நான் ரிஸீவரையெடுத்தால், மறுமுனையில், கிளர்ச்சியூட்டுகிற பெண் குரல், "ஞான் திருவனந்தபுரத்துலருந்து பேசறேன்" என்றது.

ஆஹா, நம்ம அத்தை பொண்ணு!

"ம்" என்று மட்டுமே மறுமொழி தந்துவிட்டு, அந்தக் குரல் தந்த கிறக்கத்திலும், குரலுக்குரியவளின் முகம் மனசுக்குள் மலர்ந்து தந்த மயக்கத்திலும் நான் வார்த்தைகளற்றுப் போக, விரைவாய் அவள் விஷயத்தைச் சொல்லிவிட்டு ஃபோனை வைத்துவிட்டாள்.

பக்கத்திலே நின்றபடி என்னுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த இவள், "பொம்பளைக் குரல் மாதிரி இருந்துச்சு?" என்று ஆழம் பார்த்தாள்.

"ஆமா. என்னோட முறைப் பொண்ணு" என்றேன்.

"முறைப் பொண்ணா! எங்கேயிருந்தோ?"

"எங்கேயிருந்துன்னா ஒனக்கென்ன? நீ வீட்டைப் பூட்டிட்டு ஆஃபீஸுக்குக் கௌம்பு."

"ஆஃபீஸுக்கு லேட்டாப் போனாப் பரவாயில்லை. சொல்லேன் ப்ளீஸ், உண்மையிலேயே முறைப் பொண்ணா?"

"ஆமா ஆமா ஆமா. என்னோட அத்தை பொண்ணு. திருவனந்தபுரத்தில ஒரு மல்ட்டி நேஷனல் கம்பெனில எக்ஸிக்யூட்டிவ்வா இருக்கா. இங்க மெட்ராஸ்ல ஒரு செமினார்க்காக நாளைக்கு வர்றா. ஐயாதான் அவளுக்கு எஸ்கார்ட். நாளைக்கு ஃபுல் டே ஐயா அவளோடதான்."

ஜாலி மூடில் நான் வெளியேறினேன்.

ராத்திரி அப்பாவிடம், "அப்பா அர்ஜென்ட்டா எனக்கொரு செல் ஃபோன் வாங்கணும்" என்றேன்.

"வாங்கு" என்றார்.

ஹ்ம். அனுமதியா தேவை எனக்கு? ஆயிரங்களல்லவா தேவை!

"நம்ம வீட்ல ஒரு லாண்ட்லைன் ஃபோன் வைக்கணும்ப்பா" என்றேன்.

"எல்லாம் வைக்கலாம்" என்று ஒப்புதல் அளித்தார்.

"வேலை வெட்டியில்லாம நீ ஊரைச் சுத்திட்டிருக்காம சட்டுபுட்டுன்னு ஒரு வேலையைப் பார்த்து செட்டில் ஆகு. ஒம் மொத மாதச் சம்பளத்துல ஜாம் ஜாம்னு வாங்கலாம்" என்றார்.

நண்பர்களின் நள்ளிரவு அரட்டை

அரங்கத்தில், அடுத்த நாள் வரப் போகிற அத்தை மகள் பற்றி மூச்சே விடவில்லை.

விஷயம் தெரிந்தால் பசங்க பொறாமையில் பொருமுவார்கள்.

ஹிடன் அஜெண்டா ஒன்று போட்டாலும் போட்டுருவாங்க...

ஆனால் ஞாபகமாக ஒரு நண்பனிடம் ரூட் போட்டு ஓசிபைக் வாங்கிக் கொண்டேன்.

இன்னொருவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, இருபத்து நாலே இருபத்து நாலு மணி நேரத்துக்கு என்று சொல்லி அவனுடைய செல் ஃபோனைக் கைப்பற்றிக்

# ஆயிடுச்சு!



கொண்டேன்.

**அ**னந்தபுரி எக்ஸ்பிரஸ் வழக்கம் போல ஒரு மணி நேரம் லேட்.

பரவாயில்லை. காதலிக்காகக் காத்திருப்பதில் ஒரு த்ரில் இருக்கத்தானே செய்கிறது! காத்திருந்தேன்.

ரயில், ப்ளாட்ஃபார்முக்குள் பிரவேசித்தபோது, 'வழி விடு வழி விடு வழி

விடு, என் தேவி வருகிறாள்' என்று முணுமுணுத்தபடியே, கூட்டத்தை விலக்கிக் கொண்டு செகண்ட் ஏ.ஸி.யைச் சமீபித்தேன்.

அவளாக இறங்குகிற வரை எனக்குப் பொறுமையில்லை. பெட்டிக்குள்ளே அத்து மீறி நுழைந்து அத்தை மகளைப் பார்த்து, ''ஹாய்'' என்றேன். பதிலுக்கு அவள் அதிரடியாய் என் கையைப் பற்றிக் குலுக்கி, என்னைப் பரவசப்படுத்திப் பரலோகத்துக்குப் பார்சல் பண்ணிவிட்டாள்.

''மன்னர் 'ஏ' பிரிவு பாதுகாப்புல இருக்காரா... என்ன சொல்ற நீ?''

''அந்தப்புரத்துல பத்திரமா இருக்கார்னு சொன்னேன்!''



– பி.ஜி.பி. இசக்கி

ஸிம்ப்பிளாய் ஒரேயொரு சின்ன ஸூட்கேஸ்.

பைக்கின் முன் பகுதியில் பெட்ரோல் டாங்க்கின் மேலே வைத்துப் பட்டும் படாமலும் அணைத்துக் கொண்டேன், ஸூட்கேஸை.

''பைக் புதுசாத் தெரியுது?'' என்று ஆச்சர்யப்பட்டாள்,

''ஜோரா இருக்குல்ல?'' என்று காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டேன்.

''பத்தே நாள்தான் ஆச்சு டெலிவரி எடுத்து.''

''ம்.''

''வீட்டுக்குத்தானே?''

''யார் வீட்டுக்கு?''

''ம்? நம்ம வீட்டுக்குத்தான்.''

''ஸாரிடா (டாவா? அடடா, ரொம்ப ரொம்ப நெருங்கி வந்துட்டாளே!) இப்பவே லேட் ஆயிடுச்சு. ஸெமினார்க்கு லேட் ஆயிடும். டைம் இருந்தா ஈவ்னிங் பார்ப்போம். பார்க் ஷெராட்டன் ஹோட்டலுக்குப் போகணும். அங்கேயே போய் ரெஃப்ரஷ் பண்ணிக்குவேன். கொஞ்சம் ஃபாஸ்ட்டா போ.''

ஃபாஸ்ட்டா போவதற்கு நமக்குச் சொல்லியா தரணும்?

''கெட்டியாப் புடிச்சிக்க'' என்றேன்.

ஆஹா, பிடித்துக் கொண்டாள்.

இண்டு இடுக்குகளில் புகுந்து புறப்பட்டு வளைந்து நெளிந்து சாகசம் பண்ணினேன். மவுண்ட்ரோடு வழியாய்ப் போனபோது, ஸ்பென்ஸர் ப்ளாஸாவைக் காட்டி,

''இந்த பில்டிங்லதான் நம்ம ஆஃபீஸ் இருக்கு'' என்றேன்.

''ம்'' என்றாள்.

''ஃபோர்த் ஃப்ளோர். ஃபுல் ஏ.ஸி.''

''ம்''

''ஒனக்காக இன்னைக்கு ஃபுல் டே லீவ் போட்டுட்டேன்.''

''ம்.''

மோட்டார் சைக்கிளில் மேகங்களுக்கு மேலாய் மிதந்து போவது போலிருந்தது.

அஞ்சு நட்சத்திர ஹோட்டலில், அவளை உள்ளே அனுப்பிவிட்டு லாபியில் உட்கார்ந்திருந்தேன், அரை நித்திரையில், ஒஸி ஏ.ஸி.யில்.

ரெண்டு மணி சுமாருக்கு லாபிக்கு வந்தவள், ''எங்களுக்கு ஸெமினார் ஹால்லயே லஞ்ச் ஸர்வ் பண்ணுவாங்க. நீ சாப்பிட்டியோ

என்னமோன்னு பாக்கத்தான் வந்தேன்.''

''இதுக்காகவா இவ்ளோ தூரம் வந்தே? என்னோட செல் ஃபோன்லயே கேட்டிருக்க லாமே? அடேடே என்னோட நம்பர் ஒனக்குக் கொடுக்கவேயில்ல பார்த்தியா! சொல்றேன், ஸேவ் பண்ணிக்கிறியா?''

''பரவாயில்லே. இப்பத் தேவையில்லையே. இங்கேயே ரெஸ்ட்டாரன்ட் இருக்கு. புஃபே லஞ்ச் பிரமாதமாயிருக்கும்.''

''இருக்காதா பின்னே?''

''சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு. நா உள்ளே போய்ட்டு வந்துர்றேன்.''

ஹோட்டலிலிருந்து வெளியேறி, எதிர்வாடையில் கோலாகலமாய் நடந்து கொண்டிருந்த கையேந்தி பவனில், ஆம்லெட்டோடு ஃபுல் மீல்ஸை ஒரு பிடி பிடித்துவிட்டுத் திரும்பி வந்து சோஃபாவில் சரிந்தேன்.

ஸெமினார் முடிந்து அஞ்சே முக்காலுக்கு வெளியே வந்தாள்.

''வீட்டுக்குப் போலாமா?'' என்றதற்கு, ''ஐயையோ, ட்ரெய்னுக்கு லேட்டாயிடும்'' என்று கையை உதறினாள்.

''அடுத்த தடவை வர்ற போது வீட்டுக்கு வர்றேன். மாமாகிட்டேயும் அத்தைகிட்டயும் ஸாரி சொல்லிடுடா. இப்ப நேரா சென்ட்ரலுக்கு விடு.''

'பெர்மனென்ட்டா நம்ம வீட்டுக்கே வந்துவிடப் போகிறவள்தானே என் அத்தை மகளே!'

சென்ட்ரலுக்குப் போகிற வழியில் பேச்சு கொடுத்துக்கொண்டே போனேன்.

''செமினார் சீக்கிரம் முடிஞ்சிருந்துன்னா சத்யம் காம்ப்ளெக்ஸ்ல ஒரு இங்கிலீஷ் படத்துக்கு உன்னைக் கூட்டிட்டுப் போகலாம்னு பார்த்தேன்.''

''ம்''

சென்ட்ரலில் 'ட்ரிவேண்ட்ரம்' மெயிலில் செகண்ட் ஏ.ஸி. கோச்சில் சார்ட்டைக் கூர்ந்து பார்த்துவிட்டுப் பெருமூச்சு விட்டாள்.

''அப்பாடா, கன்ஃபர்ம் ஆயிடுச்சு. வெய்ட்டிங் லிஸ்ட் அஞ்சுல இருந்தது. கன்ஃபர்ம் ஆகாதோன்னு பயந்துட்டே இருந்தேன்.''

''எதுக்கு அப்படி ரிஸ்க் எடுத்த? காலையிலேயே என்கிட்ட சொல்லியிருந்தா ஈஸியா எமர்ஜென்ஸி கோட்டா ரிலீஸ் பண்ணியிருக்கலாம்ல?''

''ம்.''

''மன்னா... எதிரி நம்ம மகாராணியைக் கடத்திட்டுப் போறான்.''

''தப்பிச்சிட்டான்னு நினைச்சேன். வசமாயில்ல மாட்டிக்கிட்டான்...''



- எம். மிக்கேல் ராஜ்

ஏ.ஸி. பெட்டியில் ஏறிக்கொண்டாள். கூடவே நானும் ஏறினேன்.

ரயில் கிளம்ப சில விநாடிகளே இருக்கிறபோது விடைபெற்றுக் கொண்டு நான் கீழே இறங்கவிருந்தபோது, அவள் கைப்பையைத் திறந்தாள்.

ரெண்டு நூறு ரூபாய்த் தாள்களை எடுத்து என்னுடைய சட்டை பாக்கெட்டில் திணித்தாள். ''பெட்ரோல் செலவுக்கு வைச்சுக்க'' என்றாள். ●

# சர்ச்சை

இளவழகி! கேரம் விளையாட்டில் உலக சாம்பியனாக வெற்றி வாகை சூடி தமிழ்நாட்டுக் குப் பெருமை சேர்த்தவர். சமூக ரீதியா கவும் பொருளாதாரத்திலும் மிகமிகப் பின் தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த இளவழகி, பெரும் சவால்களைச் சந்தித்து இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார். தொடர்ந்து தேசிய அளவிலும், உலக அளவிலும் பரிசுகளை வாங்கிக் குவித்துக் கொண்டி ருக்கும் இளவழகி, தன்னை ஒரு தொலைக் காட்சி நிறுவனமும், பிரபல குளிர்பான நிறுவனமும் ஏமாற்றி விட்டதாக, காவல் துறை ஆணையரிடம் புகார் கொடுத்து பரபரப்பைக் கிளப்பியிருக்கிறார். வியாசர் பாடி குடிசைமாற்று வாரியக் குடியிருப்பில் பத்துக்குப் பத்து வீட்டில் வசிக்கும் இளவழகி என்ன சொல்கிறார்?

''சென்ற பிப்ரவரியில் பிரான்ஸில் நடைபெற்ற உலக கேரம் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்று சென்னை திரும்பிய நேரம் அது. ராஜ் தொலைக் காட்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்னை அணுகி, ''மகளிர் தினத்தன்று ஒளிபரப்ப தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக வசனம் பேசி, பேட்டி கொடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண் டார்கள். நானும் கேரம் ஆடிக்கொண்டே வெற்றி வாய்ப்புக்கான நம்பிக்கையை வலியுறுத்துவது போல் பேசியதைப் பதிவு செய்து கொண்டார்கள். ஆனால், மகளிர் தினத்தன்று அது ஒளிபரப்பப்பட்ட தாகத் தகவல் இல்லை. அதன் பிறகு பல போட்டிகளில் கலந்துகொள்ள வெளியூர்களுக்குச் சென்றுவிட்டேன்.

இந்த நிலையில் ராஜ் தொலைக் காட்சியில் நான் நடித்த பெப்சி விளம் பரப் படம் வருவதாக என் தோழிகள் சொன்னபோது அதிர்ச்சியடைந்தேன். நான் கேரம் ஆடிக்கொண்டே தன்னம் பிக்கை குறித்துப் பேசுவதும், அதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் டோனி, ''ஊக்கம் பெற பெப்சி குடியுங்கள்'' என்று சொல்வது போலவும் அந்த விளம்பரம் அமைந்திருந்தது. காட்சி எடுக்கப்பட்டபோது, என் இரு பக்கங் களிலும் நான் வாங்கிய கோப்பைகளும் கேடயங்களும் இருந்தன. கிராஃபிக்ஸில் அதை அப்படியே மாற்றி பெப்சி பாட்டில் களை வைத்து விட்டனர். கடந்த செப் டெம்பர், அக்டோபரில் மட்டும் அறுநூறு முறைக்கு மேல் இந்த விளம்பரம் ஒளி பரப்பப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக எனக்குத் தெரிந்த வழக்கறிஞர்களான நமோ நாராயணனையும், மணிவண்ண னையும் கலந்தாலோசித்தேன். அதைத் தொடர்ந்துதான், ''முறைகேடாக, என் சம்மதமின்றி, என்னை ஏமாற்றி இந்த விளம்பரம் ஒளி பரப்பப்பட்டது என்றும், தக்க நடவடிக்கை



# “ஏழை என்பதால் ஏமாற்றுகிறார்கள்!”

## –கொதிக்கும் இளவழகி

எடுக்க வேண்டும் என்றும் காவல் ஆணையரிடம் புகார் கொடுத்தோம்.

நான் ஏழை; எனக்காக யாரும் குரல் கொடுக்க மாட்டார்கள் என்றுதானே என்னை ஏமாற்றுகிறார்கள்'' என்று இளவழகி சொல்லும்போது குரல் கம்மிப் போகிறது.



✱ மணிவண்ணன்

நேரடியாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்காமல், ஆணையரிடம் புகார் கொடுத்தது ஏன்? வழக்கறிஞர் மணிவண்ணனைக் கேட்டோம். ''நஷ்ட ஈடு கோடிகளில் கேட்கும்போது, சிவில் வழக்குகளில் நீதிமன்றத்தில் லட்சக் கணக்கில் முத்திரைத் தாள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். அதற்கு இளவழகி எங்கே போவார்? எனவேதான் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 406, 425ன்படி (மோசடி, நம்பிக் கைத் துரோகம்) தொலைக்காட்சி மற்றும் குளிர்பான நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்திருக்கிறோம். இந்த இரு நிறுவனங்களுக்கும் அக்டோபர் மாதம் நாங்கள் விளக்கம் கேட்டு அனுப்பிய நோட்டீஸுக்கு இதுவரை எந்தப் பதிலும் இல்லை. இளவழகிக்கு நீதி கிடைக்க இறுதி வரை போராடுவோம்.''

இளவழகிக்கு மத்திய, மாநில அரசுகளோ அல்லது பொதுத்துறை நிறுவனங்களோ, விளையாட்டுத் திறமைக்காக வேலை வாய்ப்பு கொடுக்கவில்லை என்பது மற்றொரு வருத்தமான செய்தி. இப்போது பிரமிட் சாய்மிரா நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். தொலைக்காட்சி உரிமையாளர்கள் தற்போது ஆளும் கட்சியில் இருக்கிறார்கள். ''விசாரணை நடக்கிறது'' என்கிறது காவல்துறை. இதற்கிடையில், ''பெரிய மனிதர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். போட்டுத் தள்ளி விடுவோம்'' என்று தொலைபேசியில் இளவழகிக்கு மிரட்டல்கள் வருவதாகவும் சொல்கிறார்.

பொதுவாக விளம்பரப் படங்களை அதற்கான ஏஜென்ஸி நிறுவனங்களே தயாரிக்கும் என்ற நிலையில், ராஜ் டீ.வி. பேட்டி எவ்வாறு விளம்பரமாக உருமாறியது? ஏன் அனுமதி பெறவில்லை? ராஜ் டீ.வி. தரப்பில் விளக்கம் கேட்க முயன்றோம்.

அதன் தலைமை செயல் அலுவலர் சுரேஷ் ஐயர் சொன்ன ஒற்றைவரி பதில்: ''நோ கமெண்ட்ஸ்!''

- ஸ்ரீநி



சொல்வாசம் 5

தஞ்சாவூர்க்கவிராயர்

# காதலின் வண்ணங்கள்


நம் காதலுக்கு
காலம் ஒரு
பாழடைந்த அரண்மனையைப்
பரிசாக அளித்திருந்தது.

அதன் சுவர்களில் கிறுக்கிய
நமது பெயர்களை
எப்போதேனும்
பார்த்துச் சென்றாயா?
என்னைப்போல
உறைந்து நின்றாயா?

அப்போதெல்லாம்
ஆளரவமற்ற
அரண்மனைத் தனிமையில்
சரியும் உன் தாவணியை நான்
ஒழுங்குபடுத்துவேன்!

எனக்குப் பிடித்த உன்
இரட்டைப் பின்னல்
உன் பாட்டிதான் போட்டுவிட்டாள்
என்பாய்-
அந்த வெளிர் சிவப்பு
ரிப்பன் முடிச்சுகள்
உன் பாட்டியின்
விரல்களாய் விரிந்து
உன்னைத் தொடவிடாமல்
பயமுறுத்தும்!

உன் முகத்தை என்
இரு கரங்களிலும்
ஏந்துகையில்
உன் கண்களின்
குழந்தைமை கண்டு
கூசிப்போவேன்!



உன்னை முத்தமிட முயலும்
ஒவ்வொரு முறையும்
'ஐயோ வௌவால்கள் பார்க்கின்றன?'
என்று காரணம் காட்டி
ஓடியே போவாய்!

வழக்கமாக நாம்
பேசிமகிழும் இடம் காட்டி
இங்கேதான் ராஜாவும்
ராணியும் சல்லாபிப்பார்கள்
என்று வழிகாட்டி
சொல்வதைக் கேட்டு
சுற்றுலாப் பயணிகள்
வியப்படைவார்கள்! நீ
வெட்கமடைவாய்!

கடைசீ நாளன்று
நீ தந்த முதல்முத்தம்
காலத்தோடு உருண்டு
ஒத்தடமாய்
மாறிவிட்ட அதிசயத்தை
என் சொல்வேன்!

பாழடைந்த அரண்மனையின்
கூடகோபுரங்களுக்கு வெளியே
தொல்பொருள் துறையால்
பராமரிக்கப்படும் நினைவுச் சின்னம்
என்ற பலகை நிற்கிறது!

காதலின் வண்ணங்கள் பூசி
அந்தக் கூடகோபுரங்களை
காலமெல்லாம்
பராமரித்து வருகிறேன் நான்
என்பதை எப்படிப்
புரியவைப்பது இந்தப்
பார்வையாளர்களுக்கு?



* உஷா

''வேர் ஈஸ் த பார்ட்டி எங்க வூட்ல பார்ட்டி
வெல்கம் த பார்ட்டி எங்க காலேஜ்ல பார்ட்டி''
என்று ஒரு பக்கம்...
''வாங்கய்யா வாத்தியாரய்யா
வரவேற்க வந்தோமய்யா
வாங்கய்யா வாத்தியாரய்யா
வாங்கய்ய்ய்ய்யா....'' (அதென்ன வாத்தியாரய்யா? எடிட்டருக்கும் சப் - எடிட்டர்ஸுக்கும் ஸ்டூடண்ட்ஸ் புண்ணியத்துல கிடைச்ச கௌரவம்) என வெரைட்டியான வணக்கத்தைப் போட்டு வரவேற்றனர் பெரம்பூர் C.T.T.E. (Chevalier T.Thomas Elizabeth) காலேஜ் கேர்ள்ஸ்!

'உருகுதே மருகுதே' என உஷா உருகி உருகிப் பாடி, ஆடிட்டோரியக் காற்றை அமிர்தமாக்கி நிகழ்ச்சியைத்




# கும்த லக்கு கும்மாவா C.T.T.E. ன்னா சும்மாவா?



துவக்கினார். ஜாலி எலெக்ஷனின் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸை சொல்லி உங்க காலேஜ் மிஸ் பிரபலம் யாரு; என்ன காரணம் கூறு என்றபடி வாக்குச் சீட்டுக்களை வாரி வழங்க, எலெக்ஷன் ஆரம்பித்தது. கூடவே காலேஜ் காமெடி கலாட்டாவும் சேர்ந்து கல்லா கட்ட ஆரம்பிச்சுடுச்சு. அந்தப் பாற்கடல்ல இருந்து உங்க டேஸ்டுக்கு சில துளிகள்:





● விளக்க ராணி...

## மிஸ் கான்ஃபிடன்ட்


'நான்தான் இந்த காலேஜ்ல பிரபலம்'னு டிக்ளேர் செய்து வோட்டு வேட்டையில் ஃபாஸ்ட்டா இறங்கி, மிஸ் கான்ஃபிடன்ட்டாக 'வாம்மா மின்னல்' போல ஓடி ஆடி ஒய்யாரமாய் போஸ் கொடுத்தவர்.



## நாக்க மூக்க - சயின்ஸ் சாங்?

எந்த காலேஜ் பசங்களும் விடமுடியாதபடி என்ன மந்திரமிருக்கு இந்த நாக்க மூக்கல? நாக்க மூக்க பாட்டு ஒரு சயின்ஸ் சாங். நாக்கு... இரைப்பை, வயிறோட சம்பந்தப்பட்டது. மூக்கு நுரையீரலோட உடன்பிறப்பு. இதெல்லாம் சரியாயிருந்தா மூளையும் இதயமும் முக்காபுல்லா வேலை செய்யும்னு அதுக்கு அர்த்தம்.

*(போதும்பா... உங்க விளக்கம்! இப்பவே கண்ணைக் கட்டுது)*



* திலகவதி (காலேஜ் பி.ஆர்.ஓ)



* தமிழ் மகள்



'ஃ'கோட

அண்ணன்தான் கானா

எம் பாட்டுல ':.'

வந்தா... அரங்கமே

எகிறிடும் தானா!

## வாடி ரோஜா ஓடிப் போகலாம்!

'உங்களுக்கு டைரக்ட் ஸ்பீச்ச எப்படி இன்டைரக்ட் ஸ்பீச்சா மாத் தறதுன்னு சொல்றேன் குறிச்சுக்கங்க' என ஜயசுதா அளித்த விளக்கவுரை:

இதான் direct speech:

I am walking on the road. இதைத் தமிழ்ல indirect speech ஆக இப்படி மாத் தணும், ''செம ஃபிகர் போகுது மச் சான்...''





* சூர்ய குமாரி

''ரோஜாப்பூ ஒடிந்தால் வாடிப் போயிடும்.

இதை வாடி ரோஜா ஓடிப் போவோம்''ன்னு அழகா இன்டைரக்ட் ஸ்பீச்சாவும் மாத்த லாம்.

*(எந்த ஸ்கூல்லமா கிராமர் படிச்சீங்க?)*

## கார்த்திகாவின் நவீன குறள்

அடித்தலுள் அடித்தல் சைட் அடித்தல்
அவ்வடித்தல் பஸ் ஸ்டாண்டில்
அடிக்கப்படும்.

நாம் நோக்கி ஃபிகர் நோக்காவிடில்
நாம் நோக்கி என்ன பயன்?

*(இது என்ன ஜென்ட்ஸ் காலேஜா?)*



***C.T.T.E.கல்லூரியின் முதல்வர் ஹனிபா கோஷ் சொல்கிறார்...***

''பொருளாதார வளர்ச்சி குறைவான வட சென்னையின் மையப் பகுதியில், மாதவரம் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ளது எங்கள் C.T.T.E. மகளிர் கல்லூரி. பெரம்பூர், அயனாவரம், வியாசர்பாடி, திருவொற்றியூர், மணலி, மாத்தூர், மாதவரம், மூலக்கடை, கொடுங்கையூர் முதலிய பிற்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள பெண்களை உயர்த்தும் நோக்கத்துக்காகவே இக்கல்லூரி துவக்கப்பட்டது.''

***இக்கல்லூரியின் சிறப்பம்சம் என்ன?***

''கல்வியோடு, கூடுதல் திறனுக்கான வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுதான். மனநலத்துக்குத் தியானம். உடல்நலத்துக்கு உடற்பயிற்சிகள், வாழ்க்கை மேம்பாடு அடைய

வேற... காலேஜ் டீன், ஸ்ரீதேவி மேடம் கூட, ''தலைமைப் பண்புகள் பல நிறைஞ்ச பொண்ணு லிட்டியா, எல்லார்கிட்டேயும் ஒரே மாதிரி கல கலப்பா பழகுவா, யார்கிட்டேயும் எந்த பேதமும் பார்க்க மாட்டா''ன்னு சர்டிஃபிகேட் கொடுத்தாங்க. கல்கி ஆசிரியர் சீதா ரவி, கிரீடம் சூட்டி பூச்செண்டு கொடுத் தார்.

வெல்டன் லிட்டியா...



* பேராசிரியர் மல்லிகா, காலேஜ் டீன் ஸ்ரீதேவி செல்வராஜ், கல்கி ஆசிரியருடன் மிஸ் பிரபலம்.



* லிட்டியா ஹோப்மேன்

## மிஸ் பிரபலம் யாரும்மா?

''ஓஹோ அவளா நீயி?'' எனக் கேட்பது போல, ஆரம்பம் முதலே துறுதுறு வென (iron மாத்திரை ரொம்பச் சாப்பிடு வீங்களோ?) துள்ளி ஓடிக் கொண்டிருந்த லிட்டியாதான் பதிவான ஓட்டுகளில் எண்பது சதவிகிதம் பெற்று C.T.T.E. கல்லூரி யின் மிஸ் பிரபலமாக முடி (கிரீடம்) சூட்டிக் கொண்டார். லிட்டியான்னா அழகுன்னு ஓர் அர்த்தம் இருக்காமே!

லிட்டியா ஹோப்மேன் பற்றி ஒட்டு மொத்த காலேஜ் பொண்ணுங்களுமே ஏகத்துக்கும் புகழ் பாடினார்கள். அட நீங்க

ஐ.ஏ.எஸ். பயிற்சி மையம் என மூன்றுக் கும் முக்கியத்துவம் அளிக்கிறோம்.''

**சென்ற தலைமுறைக்கும், இந்தத் தலைமுறைக்கும் இடையேயான வேறு பாட்டை உணர்கிறீர்களா?**

''சென்ற தலைமுறை மாணவிகளுக்குக் கல்வி மட்டுமே முதன்மையாக இருந்தது. இந்தத் தலைமுறை மாணவிகள் கல்லூரிப் படிப்போடு, பல துறைகளிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டு வெற்றியடைய வேண்டிய சூழலும் தேவையும் இருக் கின்றன. இவை மாணவிகளின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.''

**குரு-சிஷ்யை உறவு இக்காலத்தில் எப்படி உள்ளது?**

''கண்டிப்பைவிட கனிவுடன் நடத்தி னால் மாணவிகளை நன்னெறிப்படுத்த முடியும் என்பதை உணர்ந்திருப்பதால் சுமுகமாக இருக்கிறது. இந்தச் சுமுகம் கல்லூரியிலும் நடைமுறையிலுள்ளது.''

**- நளினி சம்பத்குமார்**

படம் : **குமார்**

**மனசெல்லாம் சங்கீதம்!**
**கேம்பஸ் கதை 60-ம் பக்கம்**

5

# அன்றாட வாழ்வின் அபி!

இன்றைய கால கட்டத்தில், கணவன் - மனைவிக்கு இடையிலான தீவிர பிரச்னைகளுக்கு ஒரு மனநல மருத்துவரையோ, குடும்ப நல ஆலோசகரையோ சந்தித்து, ஆலோசனை பெறுவதே புத்திசாலித்தனம். அவர்கள் இத்தகைய பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்று அறிந்தவர்கள்; பலருடைய பிரச்னைகளைத் தீர்த்து வைத்த அனுபவம் பெற்றவர்கள். சார்பு இல்லாத நடுநிலைப் பார்வை இருக்கும்.

யார் பக்கம் தவறு இருந்தாலும், அதை அவர்களிடம் நேரிடையாகச் சொல்லும் போதுகூட, சம்பந்தப்பட்டவர்களுக்கு தவறுகளை எடுத்துச் சொல்லி, புரியவைப்பதுதான் அவர்களின் நோக்கமாக இருக்குமே தவிர, குற்றம் சாட்டும் தொனி இருக்காது.

**கா**தல் கல்யாணங்கள் பெருகிவிட்ட இந்தக் காலத்திலும், பல பெற்றோர்கள் தங்கள் மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் செய்து வைப்பதை, தங்களுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான கடமையாக நினைக்கிறார்கள். சமீபத்தில் வெளிவந்த 'அபியும் நானும்' திரைப்படம் ஞாபகம் வருகிறதா? அதில் சினிமாவுக்கே உரிய மிகை இருந்தாலும் இந்திய சிந்தனையின் மேரேஜ் சைகாலஜி 'கப்'பென்று பதிவாகியுள்ளது!

**நி**ஜ வாழ்க்கைக்கு வருவோம். திவ்யா ஒரு புத்திசாலிப் பெண். தன் அப்பா சொல்கிற எல்லாவற்றுக்கும்- சரியோ, தவறோ, பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ - அம்மா தலையாட்டுவதைப் பார்த்துவிட்டு, 'ஏன் நம் அம்மா இப்படி இருக்கிறாள்? அவளுக்கென்று விருப்பு, வெறுப்புகள் கிடையாதா? அப்பா கூட நல்லவர்தான்; ஆனால், அவர் தான் சொல்வதையெல்லாம் அம்மா கேட்க வேண்டும் என்று நினைக்கிறாரே தவிர, அம்மாவுக்கென்று சில உணர்வுகள் உண்டே? அவை பற்றி எல்லாம் ஏன் கவலைப்படுவதே இல்லை?' என்று யோசித்தாள். சிந்திக்க ஆரம்பித்த வயதில், 'நாம் நன்றாகப் படித்து, நல்ல வேலைக்குப் போக வேண்டும். சொந்தமாக நாலு காசு சம்பாதிக்க வேண்டும்; சுதந்திரமாக வாழ வேண்டும்' என்கிற, காலத்துக்கேற்ற கனவு உருவாயிற்று அவளுக்குள்.

அதற்கேற்ப, படித்து முடித்தவுடனேயே பிரபலமான பன்னாட்டு கம்பெனியில் வேலை கிடைத்தது. ஐந்து இலக்கச் சம்பளம். முதல் மாதச் சம்பளத்தில் அம்மாவுக்கு ரிச்சாக ஒரு பட்டுப் புடைவை வாங்கிக் கொடுத்தாள்; அப்பாவுக்கு ஒரு லேட்டஸ்ட் ஃபேஷன் சூட்.

வாழ்க்கையில் ஒரு புதிய, மகிழ்ச்சியான அத்தியாயம் ஆரம்பித்திருப்பது போல உணர்ந்தாள். இந்நிலையில் திவ்யாவின் ஜாதகம் ரெடியானது.

# ஹாய் டார்லிங்!



''நோக்கியாவுல வேலை பார்க்கிற ஒரு பையனுக்கு, உன்னோட ஜாதகம் பொருந்தியிருக்காம்; எப்போ பெண் பார்க்க வரலாம்ன்னு கேட்கறாங்க?'' என்று அப்பா சொல்லவும், வந்ததே கோபம் திவ்யாவுக்கு. ''யாரைக் கேட்டு என் ஜாதகத்தை அவங்களுக்குக் கொடுத்தீங்க? என்னைப் பெண் பார்க்கறேன்னு இந்த வீட்டுக்குள்ள யாரும் வரக்கூடாது... சொல்லிட்டேன்!'' கோபமாகப் படபடத்தாள். திவ்யாவின் அப்பாவும், அம்மாவும் ஒருவர் முகத்தை ஒருவர் ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டார்கள்.

இரண்டு வாரங்கள் இன்டர்வெல். இந்த முறை அம்மா மெதுவாக ஆரம்பித்தாள்: ''திவ்யா! நீ பாட்டுக்கு முரண்டு பிடிச்சா எப்படீம்மா? எங்களுக்கும் வயசு ஆகிட்டே போகுது! காலாகாலத்துல உனக்கு ஒரு கல்யாணத்தைச் செஞ்சு முடிச்சிட்டா எங்களுக்கும் நிம்மதியா இருக்குமில்லையா? அதையும் கொஞ்சம் புரிஞ்சுக்கயேன்!'' என்ற சென்டிமென்டல் அணுகுமுறை திவ்யாவைக் கொஞ்சம் இளகச் செய்தது. ''சரி! பெண் பார்க்க வரச் சொல்! ஆனால் இரண்டு கண்டிஷன்கள்! ஒன்று பெண் பார்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஒரு பெரிய படை திரட்டிக்கொண்டு வரக்கூடாது; நீங்களும் நம் தரப்பிலிருந்து கும்பல் சேர்க்கக்கூடாது. என்னை பாடச் சொல்லிச் சித்ரவதை செய்யக்கூடாது; இரண்டாவது கண்டிஷன், அவர்களுக்கு என்னைப் பிடித்துப் போய் ஓ.கே. சொன்னாலும், எனக்குப் பையனைப் பிடிச்சாதான் கல்யாணம்'' என்றாள்.

**• டாக்டர் விஜய் நாகஸ்வாமி •**



**பெண் பார்க்கும் படலம் திவ்யாவுக்கு பெரும் எரிச்சலூட்டுவதாக இருந்தது. அத்தனை பேருடைய கவனமும் தன் மேலிருப்பதை அசௌகரியமாக உணர்ந்தாள்.**

ஏதோ இந்தமட்டிலும் சம்மதித்தாளே என்று பெற்றோருக்குத் திருப்தி.

இவ்வளவு நிபந்தனைகளுக்கும் ஊடே பெண் பார்க்கும் படலம் திவ்யாவுக்குப் பெரும் எரிச்சலூட்டுவதாக இருந்தது. அத்தனை பேருடைய கவனமும் தன் மேலிருப்பதை திவ்யா அசௌகரியமாக உணர்ந்தாள். பெண் பார்க்க வந்த இளைஞனின் அம்மா ஏதோ பேசிக் கொண்டே இருந்தாள். பையன், திவ்யாவிடம் தனியே பேசவேண்டும் என்று சொல்ல, இருவரும் தனியறைக்குச் சென்றார்கள். திவ்யாவை நேருக்கு நேராகப் பார்க்காமல், தன்னைப் பற்றியும், தன் வேலையைப் பற்றியும் பேசி அவளை இம்ப்ரஸ் செய்ய முயன்றானே தவிர, திவ்யாவைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை.


பிள்ளை வீட்டார் சம்மதம் தெரிவித்தாலும், திவ்யா அந்தப் பையனைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டாள். அடுத்த சில மாதங்களில் இன்னும் சில தடவைகள் கிட்டத்தட்ட இதே போன்ற பெண் பார்க்கும் அத்தியாயங்கள் அரங்கேறின. ஒவ்வொரு முறையும் திவ்யா ''பிடிக்கவில்லை'' என்றே கூறி வந்தாள்.

ஒருநாள், ''திவ்யா! நீ வேறு யாரையாவது மனசுல நெனைச்சுக் கிட்டு இருக்கியாம்மா?'' என்று நேரடியாகவே கேட்டுவிட்டார் அப்பா. அமைதியாகவும், ஆழமாகவும் தன் அப்பாவையும், அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அம்மாவையும் ஒரு பார்வை பார்த்தாள் திவ்யா.

(அழைப்பு தொடரும்)

எழுத்தாக்கம்: **எஸ்.சந்திரமௌலி**

குறிப்பு : இத்தொடரில் இடம் பெற்றுள்ள படத்துக்கும் தொடருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!


இப்பவும் கேட்ப்பாங்களா?
"திருவோட்டுல எதுக்குப்பா என் பேரைப் போட்டிருக்கே?"
"இந்த ஏரியாவுல யார் தர்மம் நல்லா இருக்குதோ அவங்களை இப்படித்தான் கௌரவிப்பேன்!"
-அம்பை தேவா
"என் கல்யாணத்தன்னிக்கு, ஒரு முட்டாள்தனமான காரியம் செஞ்சேன்!"
"ஒரே நாளுல நிறைய முட்டாள்தனமான காரியமா?"
-சிவ.சீத்தாராமன்

**ஹாய்! போனவாரம் ஃபேஷன் ஜோதிடத்தில் ஆறு ராசிக்காரர்களோட குணங்களைப் பார்த்திருப்பீங்க. சரியா இருந்ததா? இதோ மற்ற ராசிக்காரங்களுக்கு இந்த வாரம்...**

**துலாம் :** இவர்களுக்குப் பிடித்ததே துணிகள்தான். ரொமான்டிக்காக ட்ரஸ் பண்ணுவார்கள். லேஸ் வைத்த ஸ்கர்ட், டாப்ஸ், ஃப்ளோரல் (பூப்போட்ட)டிஸைன் ஸ்கர்ட்... என கவிதையாகத் தோன்றுவார்கள். செண்ட் இல்லாமல் வெளியில் கிளம்ப மாட்டார்கள். ராசி கலர்கள் நீலம், டார்க் ரோஸ் மற்றும் கறுப்பு!

**விருச்சிகம் :** நல்ல பர்ஸனாலிட்டி. காந்த சக்தித் தோற்றம். எதை அணிந்தாலும் எதிராளி சரண்டர்! கறுப்பு கலர் மிக அதிகமாக வாங்குவார்கள். ஹை ஹீல்ஸ் காலணி மீது அபார மோகம். சன் க்ளாஸ் விதவிதமாகப் போடுவது இவர்களின் ஸ்டைல் ஸ்டேட்மெண்ட். அழுத்தமான சிவப்பு, பிரௌன் மற்றும் கறுப்பு லக்கி கலர்ஸ்.

**தனுசு :** சுதந்திரப் பிரியர்கள்! கம்ஃபர்டபிளாக, ஸ்போர்டியாக இருக்க வேண்டும் என்பதுதான் ட்ரஸ் கண்டிஷன். சாயம் போன ஜீன்ஸ், ஓவர் சைஸ் டீ ஷர்ட் மற்றும் ஜாக்கெட்டுகளில் இவர்களைப் பார்க்கலாம். ஸ்லிம்மாக, உயரமாக இருப்பார்கள். ட்ராவல் என்றால் குஷியாகக் கிளம்பி விடுவார்கள். பர்ப்பிள் இவர்களின் ஃபேவரிட் கலர். ஆலிவ் மற்றும் டீப் ப்ளூ இவர்களின் லக்கி நிறங்கள்.

**மகரம் :** இயற்கையாகவே நன்றாக ட்ரஸ் பண்ணுவார்கள். கறுப்பு இவர்களின் லக்கி கலர். இதைப் போட்டால் வெற்றிதான். டிஸைனர் பிராண்ட்தான் போடுவார்கள். பார்ட்டி, விழா எங்கு போனாலும் இவர்களின் ட்ரஸ் பேசப்படும். க்ரே, டார்க் பிரௌன் கலர்களில் ட்ரஸ் போட்டாலும் ஹிட்தான்!

**கும்பம் :** எது லேட்டஸ்ட் ஃபேஷனோ அதைப் போடுவார்கள். பல சமயம் இவர்களே லேட்டஸ்ட் ஃபேஷனை உருவாக்குவார்கள். 'டல்' என்பதே இல்லாதவர்கள். சுறுசுறுப்பாக ஃப்ரெஷ்ஷாகத் திரிபவர்கள். டிஃப்ரண்டாக இருக்கணும் என விரும்பி ட்ரஸ் போடுவார்கள். பொதுவாக மிக்ஸ் அண்ட் மாட்ச் போடப் பிடிக்கும். ஸ்கை ப்ளூ, பர்ப்பிள், மற்றும் க்ரே லக்கி கலர்ஸ்.

**மீனம் :** கனவுலகில் மிதக்கும் சொகுசுப் பிரியர்கள். ஷிஃபான், ஜார்ஜெட் என்றால் பிடிக்கும்! மீன் என்பதாலோ என்னவோ 'ஸீ க்ரீன்' மிகவும் பிடித்த கலர்! தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், ராசிக் கற்கள் மீது அபார நம்பிக்கை! வெள்ளை, க்ரீன், க்ரீம் இவர்களின் ராசி கலர்கள்!

**- லதா சேகர்**



# கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு!

- ஃபேஷன் ஜோஸியம்

# காற்று வரும் பருவம்!

4

**கோ**விந்து படியிறங்கினான். தெருவே இருள் மிதப்பாகக் கிடந்தது. வானத்தில் நீலம் மறைந்து கருமை கூடித் தெரிந்தது. காற்றில் ஈரவாடை. மழைக்கான மசக்கையோடு வானம். 'இதோ கொட்டப் போகிறேன். கொட்டப் போகிறேன்' என்று பாச்சா காட்டிக் கொண்டிருந்தது. காற்றிலும் குளுமை கூடிற்று! 'ஐஸ்... ஐஸ்... பால் ஐஸ்... சேமியா ஜவ்வரிசி பால் ஐஸ்...' டப் டப்பென்று தட்டிக் கொண்டு வருபவன் குரல் கம்மிற்று. மோடம் போட்டு விட்டால் அவன் பிழைப்பு அம்புட்டுதேன். அஞ்சு பைசாவுக்கு ரெண்டு ஐஸ் கொடுத்தான். அவன் பின்னாடி கையை நீட்டிக்கொண்டு ஓடி வருகின்ற சிறுசுகளுக்கு உடைந்த ஐஸ்

''இன்னைக்கு ஒரு போடு போடப் போறது!''

''வரட்டும். வறண்டுதானே கெடக்கு.''

வாயில் இருந்த பீடியைச் சுண்டி, சாக்கடையில் விசிறியடித்தான்.

''தெக்க நல்ல மழயாம்; நம்ம ஆத்துலெ கூட செந்தண்ணி தெரண்டுச்சாம்.''

''கொத்துக்காரரப் பாக்கப் போறேன்.''

''ம். போங்க.''

ஐஸ்காரன் சைக்கிளில் இருந்து ஐஸ் பெட்டியைக் கழற்றினான். தம் கட்டித் தூக்கி மடேரென்று தெருவில் கவிழ்த்தி வான். ஆவி எழும்ப ஐஸ் தண்ணி தெருவில் சிதறிற்று. அதை மிதித்து விளையாட ஏழு எட்டு வாண்டுகள். கூச்சலும் குதியாட்டமுமாக இருந்தது.

கோவிந்து சற்று நகர்ந்திருப்பான்.


தருவான். இன்னைக்கு முழு ஐஸ் தருகிறான். எங்கிருந்தோ மண்வாசனை. காற்றுச் சுழி தாவித் தாவி எழும்புகிறது. கோவிந்துவின் நடை மெல்லத் தளர்ந்தது. பழனிப் பயதேன் ஐஸ் விற்பது. பம்மல் சமயம் அறுப்புக்குப் போய்விடுவான். திடீரென்று புல் அறுத்துக் கொண்டிருப்பான். கோவிந்தைப் பார்த்ததும் சிரித்தான்.

''கையிலெ ஒரு கொடைய கிடய வெச்சிக்கிடலாமுல்லெ.''

''இருக்கட்டும்.''

''ஒரு நிமிஷம் வந்துட்டுப் போயேன்'' என்று முத்துச்சாமி பிள்ளை திண்ணையில் இருந்து எழுந்து கொண்டார். கோவிந்து அவர் வீட்டு வாசலுக்குப் போனான். ''உள்ளே வா'' என்று சற்று நகர்ந்தார். சின்ன நடைபாதை. பெரிய மர பெஞ்சு. அதில் உட்காரச் சொன்னார். உட்கார்ந்தான். ''அவசர ஜோலி இல்லியே'' என்றார். கோவிந்து தலையை ஆட்டினான். வீட்டுக்குள் ஒரு பார்வை பார்த்துக் கொண்டார்.

''என்ன மாமா?''



''சொல்றேன்'' என்று ஒருகணம் யோசனை செய்தார்.

''நம்ம மீசை மாயாண்டித் தேவர் உன்னைக் கலந்தாரா?''

''என்ன விசயமா?''

''குஸ்தி, கம்பு விளையாட்டுனு.''

''ஆமா.''

''அதானே பாத்தியா! ஏதாவது தொரட்டுப் பண்ணணும்னே திரியுறானுங்கப் பானா. நம்ம சொன்னா சடவாப் போயிடுது. உன்னை மாதிரி வாலிபப் பசங் களை எல்லாம் வளைச் சுப் போட்டு உசுப்பேத்தி வுடுறான்.''

''புரியலெ மாமா.''

''அதான் வடக்குத் தெருவுக்காரன் களோட மோதணும்னு பாக்குறான். அதுக்குத் தோதாத்தான் ஒண்ணு ஒண்ணா நடக்குது. அவுனுங்க நம்ம பொட்டப்புள்ளை களைப் பார்த்துக் கண் ணடிக்குறானுங்களாம். நம்ம சீனியாபுள்ள மவன் செஞ்ச அக்குறும்பு தெரியுமுல்லெ.''

''ம்.''

''அவனை எல்லாம் என்னா செய்யுறது. இப்படி தெண்டம் கட்டிப்போட்டு அலையுறான். வுடுவானுங்களா? நம்ம பயலுக மேலேயும் குத்தம் இருக்குப்பா. இதச் சொன் னாக்கா கோபம் மட்டும் வந்திடும்.''

முத்துச்சாமி பிள்ளை சம்சாரம் கோமதி யம்மாள் வீட்டுக்குள் இருந்து தலையை நீட்டிப் பார்த்தாள். சிறிது தயங்கி நின்றாள். பின்பு சரசரவென்று நடந்து வந்தாள்.

''யாரது கொழுந்தனாரா?''

**பாரதிபாலன்**

''இதுவேற. நம்ம கோவிந்து'' என்றார் முத்துச்சாமி பிள்ளை.

''மீசை மாயாண்டித் தேவர், கோவிந்து வையும் இழுத்திருக்கார்.'' இதைச் சொல்லும்போது முத்துசாமி பிள்ளையின் முகம் சிவந்திற்று. உடம்பை அசைத்து உட்கார்ந்து கொண்டார். அந்தப் பளுவில் பெஞ்சு அசைந்திற்று.

''நமக்கெதுக்குய்யா ஊர்வம்பு?''

''கம்பு விளையாட வாங்கன்னார். நான் பாக்கலாமுன்னேன்.''

''வேண்டாம்யா.''

''அது சரி.''

''உங்க மாமா சொன்னதுக்குத்தேன் உனக்கு வடக்கே தோட்டம் தொரவு இருக்குனு பயப்படுறீயான்னாராம்.''

''தேவரா?''

''வேற யாரு. இப்ப அவருதேன் முறுக்கிக்கிட்டு நிக்கிறாரு. செல்லமுத்துப் பிள்ளை, சீனியா பிள்ளை, மாரியப்பன் செட்டி, மூக்கையா ஆசாரி எல்லாம் ஒண்ணா நிக்குதுக.''

''ஒத்துமையாத்தானே இருந்துச்சு.''

''எவனோ எங்கிட்டோ இருந்துகிட்டு சாவி கொடுக்குறான்யான்னா...''

''இப்பக்கூட உப்புக்கோட்ட விளக்கு மண்லெ இருக்கீங்க...''

''அதான் சொல்றேன் கோவிந்து. வயிறு எரிஞ்சு சொல்றேன். இனி இந்த ஊர்லெ இருக்க முடியாது.''

''அப்படி எல்லாம் பேச வேணாம்.''

''பின்னச் சொல்றான் பாத்தியா? வடக்கே என் தோட்டம் தொரவு இருக்காம். அதைக் காப்பாத்திக்க நான் அவனுங் களுக்கு வால் பிடிக்கிறனாம்.''

''வுடுங்க.''

''இல்லை. இதெல்லாம் ஒரு பேச் சாங்குறேன்? போங்கடான்னுட்டு போயிடு வேன். மனுஷங்க குத்திக்கிட்டு நிக்க வேண்டாம்னு சொன்னா எடக்காப் பேசுறான் பாரு...''

''வாரேன் மாமா'' என்று எழுந்து நகர்ந் தான்.

**கொ**த்துக்காரர் வீட்டுக்குப் போகும் தெருவுக்குத் தாவி நடந்தான். உதிர்ந்து கிடக்கும் முருங்கைப் பூ, வேப்பம்பூ, காகிதப் பூ இவையெல்லாம் காலடியில் பட்டு விடாமல் நடந்தான்.

தெரு சந்தில் கடைசி வீடு. பெரிய முருங்கையும் வாழையும் இருக்கும் வீடு. வாசலுக்கு அருகில் போய் நின்றான். இன்று தெருவில் ஒருவருமில்லை.

''கொத்துக்காரர் இருக்காரா?''

# கொத்துக்காரன் கொத்தவரங்காய் மாதிரித்தான்

கிட்ட அவுக ஆள அடிச்சுப் போட்டானு வளாம்!''

''ஒண்ணெத் தொட்டு ஒண்ணுதேன்.''

''தேவையா?''

''நீங்க எல்லாம் ஜோலி தொந்தரவுனு தெக்க வடக்கனு போயிடுங்க. இங்க வேண்டாம். இந்தூர்லெ இனி மனுசப்பய இருக்க முடியாது.''

''உங்க மாமா சொல்றது நெஜம்தேன்.''

''நீங்களே இப்படிச் சொன்னா எப்படி மாமா? ஏழு எட்டுத் தலைமுறையா இந்த

''அவரு இல்லை. அந்தம்மா இருக்கு...''




கோவிந்து தயங்கி நின்றான்.

''உள்ற போங்க.''

கோவிந்து ஒரு படியில் கால் வைத்தான். உள்ளே அடுப்புப் புகை படைபடையாய் கிளம்பிக் கொண்டிருந்தது. ஊதுகுழலில் அடுப்பூதும் சப்தம் கேட்டது. திண்ணையில் ஒரு சவளைக் குழந்தை.

''குட்டிப் புள்ளக்கா. யாரோ வந்திருக் காங்க.''



படக்க ஓடி வந்தாள். கோவிந்துவைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது.

''வாங்க கொழுந்தனாரே...''

கோவிந்து படியேறினான். உள்ளே சென்றதும் இரண்டு திண்ணைகள். இரண்டும் நிறைந்து கிடந்தன. ஒன்றில் வைக்கோல். தவிட்டுக் கூடைகள். புண்ணாக்குக் குவியல். அழுக்குப் பாய். ஒட்ட உடைசல். மற்றொரு திண்ணையில் நெல் காயப் போட்டிருந்தது. அந்த நெல்லை ஒதுக்கினாள். பரபரவென்று உள்ளங்கையால் போட்டுக் குவித்தாள். ஓடிப்போய் ஒரு ஜமுக்காளத்தை தூக்கிக் கொண்டு வந்தாள்.

''இதெல்லாம் எதுக்கு?''

''வராதவுக வந்திருக்கீங்க!''

''நான் என்ன விருந்தாளியா?''

''அப்படித்தான் இருக்கட்டுமே... காப்பி வாங்கியாரட்டுமா?''

''அட! என்னது?''

''முதல்ல உட்காருங்க...''

கோவிந்து தயங்கியபடி திண்ணையில் உட்கார்ந்தான்.

''நடவுக்கு சொல்லிட்டு வரச் சொன்னார்.''

''த. வந்திருவார்.''

''அவர் வரட்டும் சொல்லுங்க.''

## இருப்பான். விதியோட முடிச்சு இப்படித்தானே இருக்கும்...

''.................''

''உன்ற போங்க... இருக்காங்க. ஏய் குட்டிப் புள்ளக்காவ்.''

குட்டிப் பிள்ளை எழுந்து வந்தாள். முழங்கால் தெரிய இழுத்துச் சொருகி இருந்த சேலையைக் கீழே இழுத்து விட்டாள். சேலை முந்தானையில் ஈரம். பட

''மதினியைப் பார்த்து ரொம்பத்தான் கூச்சப்படுறீக!''

''இல்லெ.''

''பின்ன! நான் என்ன செய்யப் போறேன் உங்களை...'' என்று சிரித்தாள்.

கோவிந்துவும் சிரித்தான். அவளைப் போல் அவனால் சிரிக்க முடியவில்லை. அவள் சிரிப்பே அலாதியானது. சிரிப்பதற்காகவே சில பிறவிகள் எடுத்திருக்கிறது. அவளுக்கு எப்போதுமே சிரிப்புத்தான். எங்கு பார்த்தாலும் சிரிப்பாள். சிரிக்க

வேண்டும் என்று சிரிக்கின்ற ரகமில்லை அவள். உள்ளம் பொங்கினால் சிரிப்பாள். அவள் உள்ளம் எப்போதுமே பொங்கிக் கொண்டுதான் இருக்குமோ! எதைப் பார்த்தாலும் பொங்கிவிடும். எல்லா வற்றிலும் பிரியமாகவே இருப்பாள். தன் மீதே அவளுக்குப் பிரியம் ஜாஸ்தி. ஏழுக்கோ எட்டுக்கோதான் திரும்பியிருப் பாள்.

அவள் மனம் கெட்டி. தன்னை அலங் காரப்படுத்திக் கொள்ளவேண்டும். எப் போதும் பளிச்சென்று இருக்க வேண்டும்.



கிளறிக் கிளறிக் கொத்தும்
சேவலாய்
உன்னை
நினைக்க நினைக்க
கொத்தும்
உன் நினைவுகள்

பளபளவென்று விடிய படி இறங்கி னாலும், கொண்டையும், கோத்துக் கட்டிய கனகாம்பரமும் இருக்கும். களை யெடுப்புக்காரி என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். மினுமினுவென்ற தோல். முகம், மூக்கு, கண், உதடு எல்லாமே கோடு போட்டு வரைந்த மாதிரி இருக்கும்.

கொத்துக்காரன் கொத்தவரங்காய் மாதிரித்தான் இருப்பான். 'விதியோட முடிச்சு இப்படித்தானே இருக்கும்' என்று ஒன்றிரண்டு வாய் உளறிக் கொண்டிருந்தது. 'முயற்சி செய்து பார்க்கலாம்' என்று ஏழு எட்டு கள்ள மனசுகள் துணிந்தன. அவள் சிக்கவில்லை. ஆனால், கோவிந்திடம் கனிவாள்.

''ஆள் எளச்சிட்டீங்க.''

கோவிந்து சிரித்தான்.

''வெளையாட்டுக்குச் சொல்லலெ நெஜம்தான்.''

''வர்றேன்.''

''யப்பா! எப்படா தப்பிக்கலாம்னு...''

''ஜோலி இருக்கு...''

''ராவுலெ கண்ட கண்ட எடத்துப் பக்க மெல்லாம் போவாதீக.''

கோவிந்து திடுக்கிட்டான்.

''ஒரு நா ஜாமத்துலெ தொரட்டி முக்குகிட்ட பார்த்தேன். ஒச்சாத் தேவர் வூட்டுலெ துவரைக்கு மண் பிடுச்சுட்டுத் திரும்பினோம்.''

''என்னையா?''

''உங்களையே தான். தெரியாதா எனக்கு? பூச்சி பொட்டை இருக்குற எடத்துக்கு எதுக்கு?''

''நெனவு இல்லை.''

''மறந்திட்டீ களாக்கும்?''

அவன் விழி தடுமாறிற்று. உள்ளே உதறல்.

''பாத்துக்கிட்டுத்தானே இருந்தேன். சட்டுனு கத்திரித் தோட்டத்துலெ தாவி யாச்சு.''

''வரட்டுமா?''

''தப்பிக்கப் பாக்குறீகளா! வெச்சுக் கறேன்'' என்று சிரித்தாள். அவன் படியிறங் கினான். கால் இரண்டும் நடுங்கிற்று. வீடு வரை நடக்க முடியுமா? வெடவெடவென்று வீதியில் இறங்கி நடந்தான். அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

*(காற்று வீசும்)*

அருள்வாக்கு

# கட்டுப்பாடு!



**வா**க்குக் கட்டுப்பாட்டை அநுஷ்டானத்தில் கொண்டுவர வேண்டும். கணக்காகப் பேச வேண்டும். பிறர் மனசைப் புண்படுத்தாத பேச்சே பேச வேண்டும். தன் ஆத்மாவை உயர்த்திக்கொள்ள உதவுகிற விஷயங்களையே பேச வேண்டும். எண்ணத்தைக் கட்டுப்படுத்துவது கஷ்டம். அது இப்போது நம்மால் முடியாமல் போனாலும் பாதகமில்லை. ஆனால், எண்ணியதை எல்லாம் பேசிப்பேசி இப்போது செய்து வருகிற உற்பாதத்தை நாம் நிச்சயம் குறைக்க வேண்டும். பேச்சில் கணக்காயிருக்கணும் என்று இப்போது நான் பேசுகிறேனே, இதில்கூட நானே "கணக்காயிருக்கணும்". இல்லாவிட்டால் பேச்சு சுவாரஸ்யம் இழுத்துக் கொண்டுபோய், இதிலிருந்தே வியர்த்தமான சர்ச்சைகள் கிளம்பக்கூடும். அதோடுகூட வளவளவென்று சொல்வதால் இது மனசிலும் சுருக்கென்று தைக்காமல் பிசுபிசுத்துப் போய்விடும்.

படிப்படியாக நம் சொற்கள், செயல்கள், சிந்தனைகள் எல்லாவற்றிலும் ஒரு வரையறை, கணக்கு வேண்டும். முடிவில் மனோ, வாக்கு, காயங்களின் கட்டுப்பாடு வேண்டும். மனம் சிந்திப்பது, வாக்கு பேசுவது, காயம்தான் காரியம் செய்வது. இவை எல்லாம் கட்டுப்பாட்டின் கீழ் வந்தாலே ஆத்ம க்ஷேமகரமாகும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

# காதலும் கைவிலங்கும்!


நான்கு முறை திரும்பத் திரும்ப மாற்றி எழுதிய பிறகே நாவலைக் கையில் வாங்கிக்கொண்டது பதிப்பகம். டி.ஹெச்.லாரன்ஸுக்குப் புரியவில்லை. ஏன் இத்தனை தயக்கம் இவர்களுக்கு? அப்படி என்ன எழுதக்கூடாததை எழுதி விட்டேன்? கொலை பாதகச் செயல்களையா புரிகிறான் என் கதை நாயகன்? ஊர், உலகத்தில் நடக்காததையா நான் எழுதிவிட்டேன்?

லாரன்ஸின் மீது நிறைய விமர்சகர்கள் சீறியிருக்கிறார்கள். எல்லோரும்தான் காதல் கதை எழுதுகிறார்கள். நீ மட்டும் ஏன் எப்போதும் கோணலாகச் சிந்திக்கிறாய்? ஏன் காதலைக் கொச்சைப்படுத்துகிறாய்? காதலின் புனிதத்தை ஏன் இப்படிக் கெடுக்கிறாய்? படிக்கக்கூட வேண்டாம். உன் புத்தகங்களைத் தொட்டாலே பாவம். சீச்சீ, நீயும் ஒரு பிறவியா?





லாரன்ஸின் நூல்கள் பரவலாகத் தடைசெய்யப்பட்டன. வெளிவந்த சில நாவல்களும் முழுமையானதாக இருக்கவில்லை. கத்தரி போட்டு விளையாடியிருந்தார்கள். யார் எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். எனக்குக் கவலை இல்லை என்று




தான் இருக்க நினைத்தார் லாரன்ஸ். முடியவில்லை. கூர்மையான விமரிசனங்கள் அவரைக் கிழித்துக் கொண்டே இருந்தன. கண்காணாமல் எங்காவது ஓடிப் போய்விடலாமா என்று தலையைப் பிடித்துக்கொண்டு கத்தினார். திடீர் திடீர் என்று காணாமல் போனார்.

இறந்து பல ஆண்டுகள் கழிந்த பிறகு, திடீரென்று கண்மண் தெரியாமல் கொண்டாட ஆரம்பித்தார்கள். இங்கிலாந்து மட்டுமல்ல, உலகம் முழுவதும். அந்த நாவல், Sons and Lovers. 1913ல் வெளிவந்தது. கிட்டத்தட்ட லாரன்ஸின் சுயசரிதை என்று இந்த நாவலைச் சொல்லிவிட முடியும். தாயார் படுக்கையில் விழுந்த போது, லாரன்ஸ் இந்த நாவலை எழுத ஆரம்பித்திருக்கிறார். இவர் நாவலை முடிக்கும் முன்பே அம்மா இறந்து விட்டார். லாரன்ஸின் ஆன்மாவாக மட்டுமல்ல, இந்த நாவலின் ஆன்மாவாகவும் ஒரு தாயே இருக்கிறார்.

ஜெர்ட்ரூட் என்னும் பள்ளி ஆசிரியை, வால்டர் மொரேல் என்னும் சுரங்கத் தொழிலாளர் மீது காதல் வசப்படுகிறார். ஆஹா! இவரை அடைந்தது என் பாக்கியம் என்று அகமகிழ்கிறார் ஜெர்ட்ரூட். அன்பே, தேனே என்று சிறிது காலம் கொஞ்

சிய வால்டர், ஜெர்ட்ரூடை விட்டுவிட்டு சாராயத்தை நாடிப் போகிறார். முன்னரே அவர் ஒரு மொடாக்குடியர் என்பது தெரியவருகிறது. காதல் செத்துப் போகிறது. கனவுகள் சிதைகின்றன.

கணவரை மறந்து விட்டு, குழந்தைகள் மீது கவனத்தைக் குவிக்கிறார் ஜெர்ட்ரூட். மூன்று மகன்கள், ஒரு மகள். மூத்தவன் வில்லியம் வெளிதேசம்




சென்று படிக்கிறான்; சம்பாதிக்கிறான். பரவாயில்லை மகன் கரையேறிவிட்டான் என்று ஜெர்ட்ரூட் பெருமூச்சு விடுவதற்குள் வில்லியம் இறந்துவிடுகிறான். இந்த இடத்தில்தான் இரண்டாவது மகன், பால் அறிமுகமாகிறான். உதவாத கணவன், இறந்துபோன மகன், புரியாத எதிர்காலம்! மூன்றும் சேர்ந்து அழுத்த, ஜெர்ட்டூட், பாலை அரவணைத்துக் கொள்கிறார். 'மகனே நீயாவது இருக்கிறாயே' என்று அவனிடம் அன்பைக் கொட்டுகிறார்.

பால் தன் அம்மாவை உயிருக்கும் மேலாக நேசிக்கிறான். பார்த்துப் பார்த்து கவனித்துக் கொள்கிறான். அம்மாவைத் தவிர இன்னொரு உலகம் இல்லை என்று பால் முடிவு செய்திருந்த சமயம், மிரியம் குறுக்கிடுகிறாள். குறுகுறுப்பான அழகிய பெண். புத்திசாலியும் கூட. எனக்கேற்ற பெண் இவள்தான் என்று பால் முடிவு செய்கிறான். ஆனால், ஜெர்ட்ரூடால் மிரியமை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இங்கேதான் சிக்கல் தொடங்குகிறது. தன் மகனை இன்னொரு பெண்ணுக்கு விட்டுத்தர ஜெர்ட்ரூட் விரும்பவில்லை.

பால், மிரியம் காதல் முறிந்து போகிறது. பால் தடுமாற ஆரம்பிக்கிறான். பெரும் குழப்பங்கள் அவனை அலைக்கழிக்கின்றன. நான் மிரியமிடம் கொண்டது மெய்யான காதலா? என் அம்மாவை விட அவளை நான் அதிகம் நேசிக்கிறேனா? காதல் என்றால் என்ன? காதல் ஏன் இப்படி ஒருவனை அடிமைப்படுத்துகிறது? அடிமைப்படுத்தும் ஓர் உணர்வு எப்படி காதலாக இருக்க முடியும்? காதல் ஒருவனை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் அல்லவா?

பால் மீண்டும் காதல் வசப்படுகிறான். மீண்டும் முறிவு. பெரும் தத்துவ விசாரணைகளில் மூழ்கிப் போகிறான். ஒரு சிறந்த மகனாக இருக்க முடிந்த தன்னால், ஏன் ஒரு சிறந்த காதலனாக இருக்க முடியவில்லை என்னும் கேள்விக்குப் பதில் தேட ஆரம்பிக்கிறான்.

டி.ஹெச். லாரன்ஸும் இதுபோன்ற பல எண்ணற்ற கேள்விகளை எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்ந்திருக்கிறார். பைபிள், பௌத்தம், அமானுஷ்யம் என்று எங்கெங்கோ சுற்றியலைந்திருக்கிறார். லாரன்ஸின் நாவல்களில் காதல் ஒரு முக்கியக் கதாபாத்திரம்; சோகமும். காதல் பற்றி இப்படிச் சொல்கிறார். 'காதலை அடைய, பல்வேறு துயரங்களைக் கடந்து சென்றாக வேண்டும்.'

மருதன்

**மூலிகை என்றதும் நமக்கு அடர்ந்த காடும் மலையும்தான் நினைவுக்கு வரும். ''அவ்வளவு மெனக்கெட்டுப் போக வேண் டாங்க. எங்க காலேஜுக்கு ஒரு விசிட் வாங்க. நூற்றைம்பது வகையான மூலிகைகளை ஒரே இடத்துல பார்க்கலாம்'' என்று அழைப்பு விடுத்தார் ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்.**



● கௌரி



● அல்வதி

அண்மையில் இங்கு தேசிய மூலிகைக் கருத்தரங்கு நடைபெற்றது. முதல் நாள் அனைத்துக் கல்லூரிப் பிரதிநிதிகளும், மறுநாள் கிராமப்புறப் பெண்களும் கலந்து கொண்டிருந்தனர்.

''தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலேயே மூலிகைத் தோட்டம் அமைந்துள்ளது இங்கு மட்டுமே இன்சுலின் செடி தோட்டம் போட்டுள்ளோம். பாலைக்கள்ளி என்கிற அபூர்வ மூலிகை, மகப்பேறு ஊக்கி. கர்ப்பப் பையினை வலுவாக்கும். திசுக்களைப் புதுப்பிக்கும். இதனை ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிலும் மெக்சிகோவிலும் உணவுப் பொருளாகவே உண்கின்றனர். Caralluma எனப்படும் பாலைக் கள்ளியின் திசுக்கள், புதுப்பித்தலுக்குத் துணைபுரிவது குறித்து ஆய்வுகள் செய்து, அதில் வெற்றி கண்டுள்ளோம். எங்கள் கல்லூரியில் சோற்றுக் கற்றாழைச் சாறு அரவை எந்திரம் வாயிலாக சோற்றுக் கற்றாழைச் சுவைநீர் தயாரித்து ஆய்வு செய்துள்ளோம்!'' என்கிறார் உயிர் அறிவியல் துறையின் புலத் தலைவர் பிருந்தா.

''உயிர் அறிவியல் துறையாளர்கள் Zinc எனப்படும் துத்தநாக பஸ்பம் தயார் செய்து வெற்றி பெற்றுள்ளனர். மூலிகை ஆய்வில் இதனை ஒரு மைல் கல் எனக் குறிப்பிட

# சுவைக்கும்



லாம். சோற்றுக் கற்றாழை, நாயுருவி மற்றும் பல மூலிகைகளை அதனதன் விகிதங்களுடன் கலந்து ஏழு முறை புடம் போட்டு சுத்திகரித்து பஸ்பம் தயார் செய்துள்ளோம். நச்சுத்தன்மை இல்லை.



• பிரேமா



• பிருந்தா



எலிகளுக்கு இதனைப் புகட்டி வெற்றி கண்டுள்ளோம். மனித உடலில் எளிதில் சேரக்கூடிய (Nano particle) Yasadha Pashma எனப்படும் துத்தநாக பஸ்பத் துகள்களாகத் தயாரித்து எங்கள் ஆய்வினை நிறைவு செய்துள்ளோம்!'' எனச் சொல்கிறார் கல்லூரி முதல்வர் முனைவர் கே.பிரேமா.

கருத்தரங்குக்கு வந்திருந்த கிராமத்துப் பெண்களான கௌரி, அஸ்வதி இருவரும் மூலிகைகள் குறித்து சொன்ன மருத்துவ டிப்ஸ், பல பி.ஹெச்.டி. பெற்றிருப்பார்களோ

# சோற்றுக் கற்றாழை!

என வியக்க வைக்கும் வகையில் இருந்தன.

● காடுகரை வேலி ஓரங்களில் காணப்படும் 'பெரண்டை' வயிறு உபாதைகளுக்குக் கைகண்ட மருந்து. 'பெரண்டைத் தொவையல்' அரைச்சு சாப்பிட்டா, மூட்டுவலி, பித்தம், வயிறு பெரட்டல், வயிறு பொருமல் எல்லாம் வந்த எடம் சொல்லாம ஓடிப் போயிடும்!

● தூதுவளையில தொவையல், இல்லாட்டி தோசையில போட்டுச் சாப்பிட்டா தொண்டைச் சளி, மார்புச் சளி ரெண்டும் அறுத்துக்கிட்டு வெளியேறிடும். தூதுவளை ரசம் ரொம்ப நல்லா இருக்கும். மொடக்கத்தான் இலையைப் பறிச்சு, காலம்பற நீராகாரத்தோட கரைச்சு மூணு நாள் தொடர்ந்து குடிச்சு வந்தா 'பித்த மயக்கம்' மொத்தமா தெளிஞ்சு போகும்.

● மொசுமொசுக்கைனு ஒரு மூலிகை. அதனோட இலைகள் சொனை போல இருக்கும். அரிசி மாவு, மொசுமொசுக்கை இலை சேர்த்து அரைச்சு 'அடை' சுட்டுச் சாப்பிட்டா, இருமல், சளி இருந்த எடம் தெரியாம மறைஞ்சு போயிடும்!

**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

## www.nsto101zeries.com

புத்தரின் போதனைகளை இந்தியாவிலிருந்து கடன்பெற்ற ஜப்பான், அதை உலகுக்குக் கவிதையாய் மாற்றித் தந்திருக்கிறது.

ஹைக்கூ கவிதைகளைப் போலவே ஜென் கதைகளும் மனித வாழ்வை ரசனைக்குரியதாக மாற்றும் மகத்தான இலக்கியங்கள்.

உதாரணத்துக்கு ஒன்று...

மானின் என்ற ஜென் துறவியைப் பார்ப்பதற்காக கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் வந்திருந்தார். அந்தப் பேராசிரியருக்கு ஜென் தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசை.

பேராசிரியரின் விருப்பத்தைப் புரிந்து கொண்ட துறவி, முதலில் அவருக்குத் தேநீர் வழங்கி உபசரித்தார். பேராசிரியரின் கோப்பை தேநீரால் நிரம்பி வழிந்தது. ஆனாலும் துறவி கோப்பையில் தேநீர் ஊற்றுவதை நிறுத்தவில்லை.

பொறுமையிழந்த பேராசிரியர், ''போதும் நிறுத்துங்கள்... கோப்பை நிறைந்துவிட்டது. நிறைந்த கோப்பையில் மேலும் ஊற்ற முடியாது என்று தெரியாதா உங்களுக்கு?'' என்று கேட்டார்.

புன்னகைத்த மானின், ''நீங்களும்கூட தேநீர்க் கோப்பை மாதிரிதான். ஏற்கெனவே கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் உங்கள் மனம் நிறைந்துவிட்டது. இடம் காலியாக இல்லாத உங்கள் மனத்துக்குள் என்னால் எப்படி ஜென் தத்துவத்தை நிரப்ப முடியும்?'



இதுபோன்ற 101 ஜென் கதைகள் இந்த தளத்தில் படிக்கக் கிடைக்கின்றன. ஜென் கதைப்பிரியர்களுக்கு தின்னத் தின்னத் திகட்டாத விருந்து...

## www.ahajokes.com

அவளொரு அழகிய கன்னிகை. தன் காதலனிடம் சொன்னாள், 'நாளை எனக்குப் பிறந்த நாள்.' வாழ்த்து சொன்ன காதலன், மறுநாள் காலையில் அவளது ஒவ்வொரு வயதுக்கும் ஒரு ரோஜாப் பூவைப் பரிசளிப்பதாய்ச் சொன்னான்.

மறக்காமல் பூக்கடைக்குச் சென்று இருபத்தொரு பூக்களை அவள் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஆர்டர் செய்தான்.

காதல் பரிசை எதிர்பார்த்துக் காத்திருந்த காதலிக்குக் கடுங்கோபம். அவர்களின் காதல் அப்போதே முறிந்து போனது.

காரணம் என்ன?

வாடிக்கையாகத் தன்னிடம் பூ வாங்கும் இளைஞனைச் சந்தோஷப்படுத்த நினைத்த பூக்காரன், கூடுதலாக ஒரு டஜன் பூக்களைச் சேர்த்து அனுப்பிவிட்டான்.



சிரிக்கவும் சிந்திக்கவும் இப்படி பலநூறு நகைச்சுவைத் துணுக்குகளோடு காத்திருக்கிறது இந்தத் தளம்.

## www.varalaaru.com

'சரித்திரம் தேர்ச்சி கொள்' என்றார் பாரதி. என்னதான் தமிழர்கள் பழம்பெருமை பேசினாலும், வரலாற்றின் மீது அவர்களுக்கு அக்கறை என்பது மட்டும் இருப்பதேயில்லை. காதலர்களின் பெயர் களை எழுதி வைக்கும் இடமாகத்தான் கல்வெட்டுக் களைக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை யில் வரலாற்றை நேசிப்பவர்களுக்கு ஆறுதலளிக் கும் தமிழ் இணையதளமாக இது திகழ்கிறது. தமிழக வரலாற்றுத் தளங்கள், சங்க இலக்கியம், கல்வெட்டு அறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணி யனின் கட்டுரைகள், சரித்திரக் கதைகள், ஆய்வுப் பயணங்கள், புகைப்படங்கள் என்று மாணவர் களுக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ள தளம்.

- ஸாந்த்



'வலை'யோடு விளையாடு

# ஒரு கோப்பை தேநீர்!



# நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
# நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் மாவட்டத்துக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள், படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- மாவட்டத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொடர்பு எண்... ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதம் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 15.2.2009

---

**கல்கி - மாதம் ஒரு மாவட்டம்**

**<u>மதுரை மாவட்டம்</u>**

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்

☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

---


**மதுரை மாவட்ட வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடிதங்களை அனுப்பும் கடைசி தேதி : 15.2.2009-ஆக மாற்றப்பட்டுள்ளது.**

# நடக்குமென்பார்;














**மேஷம் : நெய்விளக்கு ஏற்றுங்க** - புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கடல் கடந்து செல்லும் யோகம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். கல்வி வளம் மேன்மை பெறும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாழன்தோறும் குருவுக்கு நெய் விளக்கு ஏற்றி வழிபட்டு வர நற்பலன் பெருகும்.

**ரிஷபம்:விமானம் ஏற ரெடியா?** - எண்ணிய எண்ணங்கள் ஈடே றும். தெய்வ அனுகூலம் ஏற் படும். சுபகாரியப் பேச்சுவார்த்தை கைகூடும். தந்தைவழிச் சொத்து கள் வந்துசேரும். வெளிநாடு செல்வீர்கள். சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபட்டு வர நற்பலன் பெருகும்.

**மிதுனம் : அக்கறையா படிங்க** - எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படவும். யாரிடமும் வாக்கு வாதம் தவிர்க்கவும். வாகனங் களில் செல்லும்போது கவனம். உடல் ஆரோக்கியமாக இருக்கும். கல்வியில் அக்கறை தேவை. வியாபாரத்தில் மந்தநிலை நீடிக் கும். வியாழன்தோறும் குருவுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வரச் சங்க டங்கள் தீரும்.

**கடகம் : வேலை தேடி வரும்**- திருமணக் காரியம் கைகூடும். வராத பணம் வந்து சேரும். உடல் நிலையில் முன்னேற்றம் காணப் படும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த மனக்கசப்பு விலகி, குடும்பம் ஒன்றுபடும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு தீபம் ஏற்றிவர நற்பலன் பெருகும்.

**சிம்மம் : ஜாமீனுக்குத் தடா** - கடன் சுமை அதிகரிக்கும். தேவைக்கு அதிகமான செலவு ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் போடாதீர்கள். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக் கும். வியாழன், சனிக்கிழமைதோறும் குரு, சனி பகவானுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

**கன்னி : சுபமான செலவுகள்** - மனசஞ் சலம் தீரும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். வீடு, மனை வாங்க நல்ல காலம். திருமணக் காரியம் கைகூடும். பண வரு வாய் பெருகும். செலவுகள் சுபமானதாக இருக்கும். சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.

**துலாம் : சுபமான பேச்சு** - உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் சுமை தீரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். சுபகாரியப் பேச்சு வார்த்தை பலன் அளிக்கும். வியாழன் தோறும் குருவுக்கு விளக்கேற்றி வழி பட்டுவர நற்பலன் பெருகும்.

**விருச்சிகம் : நல்ல தகவல் வரும்** - புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வீடு மாற்றம் ஏற்படும். அன்னிய நாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தை கள் வழியில் சுபகாரியம் கூடி வரும். சனிக்கிழமைதோறும் சனீஸ்வரருக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வரவும்.

**தனுசு : பயனுள்ள செலவுகள்** - மனதுக் குப் பிடித்த சம்பவங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். தடை விலகி திருமணம் கைகூடும். செலவுகள் பயன்

# நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

08.02.2009 முதல் 14.02.2009 வரை

உள்ளதாக இருக்கும். எதிர்ப்புகள் விலகும். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக் கசப்பு தீரும். ராகு/கேதுவுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வரவும். சங்கடங்கள் தீரும்.

**மகரம் : பிரச்னைக்கு ஃபுல் ஸ்டாப்-** கணவன் - மனைவிக்குள் இருந்த வந்த மனக் கசப்பு விலகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். நீண்ட நாள் முடிவு பெறாத பிரச்னை முடிவுக்கு வரும். வியாழன், சனிக்கிழமைதோறும் சனி, குருவுக்கு தீபம் ஏற்றி வழிபடவும். நற்பலன் பெருகும்.

**கும்பம் : மன பிரமை விலகும்-**தேவையில்லாத செலவுகள் அதிகரிக்கும். நீண்ட காலக் கடன் தொல்லை தீரும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன உளைச்சல் தீரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். மன பிரமை விலகும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வியாழன்தோறும் குருவுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வரவும்.

**மீனம் : இல்லறம் இனிக்கும்** - சுபகாரியம் கைகூடும். நண்பர் / உறவினர்கள் மூலம் நற்பலன் உண்டாகும். நீண்ட காலப் பிரச்னை முடிவுக்கு வரும். சொத்து சுகம் சேரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கடன் சுமை தீரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். தேவைக்கேற்ற பணம் கிட்டும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். ராகு / கேது வழிபாடு நலம் தரும்.










# அஞ்சா நெஞ்சரே... அதிரடி மன்னரே!

## ஜார்கண்ட்

இந்த வருடம் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனிக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கியதில், தோனி ரசிகர்களுக்கு ஏகக் கொண்டாட்டம். ராஞ்சி நகரின் ஆல்பர்ட் ஏக்கா மைதானத்தில் பட்டாசு வெடித்து, ஸ்வீட் விநியோகித்துக் கொண்டாடினார்கள் தோனி ரசிகர் மன்றத்தினர். அது மட்டுமா? ராஞ்சியில் தோனிக்கு பிரம்மாண்டமான சிலை வைக்கப் போகிறார்களாம்.

**(காக்கா உட்காராம பார்த்துக்கவும் ஆளைப் போட்டுடுங்க!)**

ஜார்கண்ட் மாநிலத்தில் கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறு முறை அரசாங்கங்கள் மாறி விட்டன. ''ஸ்திரமற்ற அரசாங்கங்களால் ஏற்கெனவே பின்தங்கிய மாநிலமான ஜார்கண்ட்டின் முன்னேற்றம் பெருமளவில் தடைப்பட்டிருக்கிறது'' என்று குடியரசு தின விழாவில் கொடியேற்றி வைத்துப் பேசிய மாநில கவர்னர் சையத் ராசி வருத்தப்பட்டிருக்கிறார். தற்போது, மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சிதான் நடைபெறுகிறது.

**(சுயேச்சையும், தலைமறைவு தலைவர்களும் முதலமைச்சர்**



*நாற்காலியில் அமர்ந்தால், மாநிலம் டாப் கியரிலா முன்னேறும்?)*

**சி**புசோரன் மட்டுமில்லாமல், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியே கலகலத்துப் போயிருக்கிறது. அரசியல் பேரத்தின் பலனாக முதலமைச்சரான சிபுசோரன் இடைத்தேர்தலில் தோற்று, ராஜினாமா செய்யும்படி ஆகிவிடும் என்று யாரும் கனவில்கூட நினைக்கவில்லை. முதலமைச்சர் பதவிக்கு சிபுசோரன் சிபாரிசு செய்தவரை, காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. அடுத்தபடியாக இன்னும் இருவரது பெயரைச் சிபாரிசு செய்திருக்கிறார். காங்கிரஸ் என்ன சொல்லப் போகிறது என்பது பெரிய சஸ்பென்ஸ்!

***(எங்க ஊருக்கு வந்து 'இடைத் தேர்தலில் ஜெயிப்பது எப்படி?'ன்னு டிரெய்னிங் எடுத்துக்கிட்டுப் போங்க! அமோக வெற்றி நிச்சயம்)***

**2007**ல், ஜார்கண்ட் மாநில அரசு, மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீதான துரித நடவடிக்கைகளுக்காக, மூன்றரை கோடி ரூபாய் கொடுத்து ஒரு ஹெலிகாப்டரை வாங்கியது. புத்தம் புது ஹெலிகாப்டர், ஓட்டுவதற்கு பைலட் இல்லாமல், பல மாதங்கள் இருந்தது. சென்ற ஆண்டில் ஒரு பைலட்டும், ஒரு துணை பைலட்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். ஆனால், கடந்த டிசம்பரில் தலைமை பைலட்டும், ஜனவரி முதல் வாரம் துணை பைலட்டும் இடைக்காலப் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். காரணம், வானூர்திகளுக்கான பறக்கும் விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காததும், தங்களுக்கு வேண்டியவர்களை அழைத்துக்கொண்டு ஹெலிகாப்டரில் சுற்றியதும்தான். மீண்டும் ஹெலிகாப்டருக்கு விட்டாச்சு லீவு!

***(சும்மா கிடக்கிற ஹெலிகாப்டரை தீவிரவாதிகள் ஹைஜாக் பண்ணிக்கொண்டு போகாமல் இருந்தால் சரி!)***

**ச**மீபத்திய பீகார் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் முப்பது லட்சம் பேர். ஏராளமானவர்கள் வீடு இழந்தார்கள். மரணமடைந்தவர்கள் எழுபது பேர். தவிர, பெற்றோர்களை இழந்து, அனாதைகளான குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகம். ராஞ்சியைச் சேர்ந்த ஒரு தொண்டு நிறுவனம், பீகாரின் நூறு அனாதைக் குழந்தைகளை தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, தங்குமிடமும், உடையும் அளித்து, படிக்க வைக்கப் போகிறார்களாம்.

***(நம் ஊர் அரசியல் அனாதைகளை யாராவது தத்து எடுப்பாங்களா?)***

**- பரத்ராம்**



சென்னை மாநகரில் உள்ள தமிழ் முஸ்லிம் சங்கத்தார் அடிக்கடி சில முக்கியமான நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

மேற்படி தமிழ் முஸ்லிம் சங்கத்தார் நபிகள் நாயகத்தின் ஜன்ம தின விழாவையொட்டிச் சென்னை ஹைகோர்ட் கடற்கரையில் பெருங்கூட்டம் கூட்டினார்கள்.

இதற்காக அவர்கள் மிகப் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள். பல கட்சித் தலைவர்களையும் ஒரே மேடைக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டார்கள். முக்கியமாக, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரையும் ஸ்ரீ ராமசாமிப் பெரியாரையும் ஒரு பொது மேடையில் கொண்டு வருவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி அபாரமானது. கடைசியில், வெற்றியும் அடைந்தார்கள்.

பழைய நண்பர்களான ராஜாஜியும் ராமசாமியாரும் பொது மேடையில் சந்தித்து பதினாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் கைகுலுக்கினார்கள்; அளவளாவிப் பேசினார்கள்; ஒருவரையொருவர் பாராட்டினார்கள்.

பெரியார் நாயக்கர் இப்பொதுக் கூட்டத்தில் ராஜாஜி அவர்களுக்கு, 'பெரியார் ஆச்சாரியார்' என்ற பட்டத்தையும் சூட்டினார்.

இரு பெரியவர்களும் இவ்விதம் ஒரே மேடையில் சந்தித்து அளவளாவிப் பாராட்டிக்கொண்ட காட்சியைக் கண்டு, அம்மாபெருங்கூட்டத்தில் கூடியிருந்த பொது மக்கள், சூரியனையும் சந்திரனையும் ஒரே சமயத்தில் வானத்தில் கண்ட சமுத்திரம் போல் ஆரவாரித்தார்கள். பலவிதங்களில் தங்கள் மகிழ்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டார்கள்.

இரண்டு தலைவர்களும் தனித்தனியே பெரும் ஜனக்கூட்டத்தைச் சேர்க்கக்கூடியவர்கள்தாம். இரண்டு பேரும் சேர்ந்து தோன்றுகிறார்கள் என்றால், கூட்டம் மேலும் அதிகமாகச் சேர்வதில் வியப்பு ஒன்றுமில்லை.

''உங்களைப் பார்ப்பதற்குத்தான் இவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் கூடியிருக்கிறது!'' என்றார் பெரியார் நாயக்கர்.

''இல்லை! நம் இருவரையும் சேர்ந்து பார்ப்பதற்காகவே இவ்வளவு பெரிய கூட்டம்!'' என்றார் பெரியார் ஆச்சாரியார்.

ராஜாஜி தமது சொற்பொழிவின் போதும் இதே கருத்தை வற்புறுத்தினார். ''வேறு பேச்சு எதற்காக? நாங்கள் இருவரும் சேர்ந்து இம்மேடையில் உட்கார்ந்திருப்பதே மிகப் பெரிய பிரசங்கத்துக்குச் சமமானது'' என்றார்.

ஸ்ரீ நாயக்கரோ, ''ஆச்சாரியார் இக்கூட்டத்துக்கு வரப் போகிறார் என்று தெரிந்ததும், எனக்கு உடம்பு சரியாயில்லாவிட்டாலும் இக்கூட்டத்துக்கு வந்தே தீருவது என்று வந்தேன். வைத்தியர்களின் யோசனையைப் புறக்கணித்துவிட்டு வந்தேன். நாங்கள் இருவரும் சேர்ந்து இம் மேடையில் தோன்றுவது மனிதத் தன்மைக்கு அறிகுறி. அவ்வளவுதான்!'' என்று கூறினார்.

''நாங்கள் இருவரும் மேடையில் தோன்றியதற்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் கற்பிக்க வேண்டாம்!'' என்று



# சூரியனும் சந்திரனும்!

ஈரோட்டுப் பெரியார் மேலும் எச்சரித்தார்.

ரொம்பச் சரி; ராஜாஜியும் நாயக்கரும் ஒரே மேடையில் தோன்றியதற்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லைதான். பொது ஜனங்கள் அத்தகைய தவறு எதுவும் செய்யவும் மாட்டார்கள்.

**பெ**ரியார் நாயக்கரும் பெரியார் ராஜாஜியும் ஒரே மேடையில் தோன்றியதையும், கைகுலுக்கியதையும் கண்டு மக்கள் அவ்வளவு குதூகலம் அடைந்த காரணம் என்ன?

பண்பாட்டில் சிறந்தவர்களான தமிழ் மக்கள் சண்டையை விரும்பவில்லை.

முக்கியமாக, தமிழ்நாட்டுப் பிரமுகர்களுக்குள்ளும் அரசியல் தலைவர்களுக்குள்ளும் பூசல்கள் ஏற்படுவதை மக்கள் விரும்பவில்லை.

இனத் துவேஷ, வகுப்புத் துவேஷப் பிரசாரங்களையோ, உத்தியோகப் போட்டி - பதவிப் பற்று காரணமான பூசல்களையோ, சொந்த விருப்பு, வெறுப்புக்கள் காரணமான மாத்சரியங்களையோ, ஆவேச மேடைப் பிரசங்கங்களின் வசை புராணங்களையோ தமிழ் மக்கள் விரும்பவே

**அமரர் கல்கி**

யில்லை.

அரசியல் தலைவர்களும் சமூகப் பிரமுகர்களும் சிநேகமாக இருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். தமிழகத்துத் தலைவர்கள் அனைவரும் ஒத்துழைத்து, தேசத்துக்குத் தொண்டு புரிவதை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

எக்காரணத்தினாலாவது ஒத்துழைத்து வேலை செய்ய முடியாவிட்டாலும், ஒருவர் மேல் ஒருவர் மாற்சரியங்கொண்டு ரஸாபாஸமாகச் சண்டை போடாமலாவது இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

கருத்து வேற்றுமை இருக்க முடியாத காரியங்களிலாவது தலைவர்கள் சிநேக பாவம் காட்டி நடந்து கொள்ளவேண்டும் என்றும், இதன் மூலமாக மனிதத் தன்மையை வளர்க்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் உண்மையான உள்ளம் இதுதான் என்பதைப் பற்றி நமக்கு எப்போதும் சந்தேகம் இருந்ததில்லை.

**- கல்கி, 27.12.1953**

பிரதாப் சிங் நார்மன்






# காதல் நிழற்சாலை

*"நீயும் நானும் காதல் குழந்தை!*
*மழலை மொழியில் எழுதும்*
*கவிதை!*
*நேசத்த, பச்சக்குத்தும் அழகான*
*வேப்பமரம்,*
*கருப்பட்டி காதலுக்கு திருகாணி*
*மாட்டவரும்,*
*இளவட்டக் கல்லுக்கு நிழல்*
*விரிக்கும் ஆலமரம்*
*பொக்கவாய் காதலுக்கு*
*மருதாணி வைக்கவரும்!"*

- என்கிற சுகவரிகள் பிரதாப் சிங் நார்மன் இசையில் கவிஞர் ரா. நாகப்பன் எழுதியுள்ளார். காதலர் தினச் சிறப்பு வெளியீடாக வரவுள்ள எட்டுப் பாடல்கள் அடங்கிய இசை ஆல்பம் 'காதல் நிழற்சாலை'. 'அடுத்த வீட்டுப் பெண்' திரைப்படத்திலுள்ள 'கண்ணாலே பேசிப் பேசிக் கொல்லாதே' பாடல் இதில் ரீ-மிக்ஸ் செய்யப்பட்டுள்ளதாம். பாடகிகளும் புதுசுதானாம். இந்த ஆல்ப முயற்சி இதிலுள்ள எல்லோருக்கும் சினிமாவில் காலூன்றுவதற்கான வாய்ப்பை அளிக்குமாம். காதல் சக்தி வாய்ந்ததெனில் எதுவும் சாத்தியம்தானே?

**- அமிர்தா**

# பன்முகப் பதிவுகள்!








**சிவாஜி - ஒரு வரலாற்றின் வரலாறு - தொகுப்பு : கே. சந்திரசேகரன், ஐ.டியூட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட், புதிய எண் - 20, முதல் அவென்யூ, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை - 20. விலை ரூ. 180.00**

பல்வேறு நூல்களில், பல்வேறு காலகட்டங்களில் நடிகர் திலகத்தைப் பற்றி வெளியான செய்திகள் மற்றும் தொலைக்காட்சி, வானொலிப் பேட்டிகளில் அவர் குறித்து இடம்பெற்ற செய்திகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. நடிகராக, அரசியல்வாதியாக, குடும்பத் தலைவராக, சிறந்த ரசிகராக, நண்பராக, அவரது பன்முகத் தன்மைகளை இந்நூல் வெளிப்படுத்துகிறது. உலகின் தலைசிறந்த நடிகர்களும் சிவாஜிகணேசனது நடிப்பைப் பார்த்து பிரமித்ததையும் அவர்களது கூற்றாகவே நூல் வெளிப்படுத்துகிறது. 'என்னைப் போல் உங்களால் நடிக்க முடியும்; உங்களைப் போல் என்னால் நடிக்க முடியாது' என்ற மார்லன் பிராண்டோவின் பாராட்டு ஒரு சான்று. இந்திய, உலகத் திரைப்படக் கலைஞர்கள் - பலருடனான புகைப்படங்களும், பல்வேறு தலைவர்களுடனான புகைப்படங்களும் காணற்கரிய வாய்ப்பு.




**கடவுளைத் தேடி... - கிருஷ்ணா கே.ஆர்.எஸ்., விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-02. விலை ரூ. 45.00**

விஞ்ஞானக் கூற்றையும், வேத விளக்கங்களையும் ஒப்பிட்டு இறைவனின் இயல்பு பற்றிய புரிதல்களை முன்வைக்கிறார் ஆசிரியர். இறைவனைத் தேடி ஓடுவதை விட, 'உன்னுள் இருக்கும் இறைவனைத் தேடு' என்கிறது நூல். ஆன்மிகத் தேடலில் ஈடுபட்டுள்ளோருக்கு, 'கடவுளைத் தேடி...' நல்ல துணை.

**கோபுரத்துப் பொம்மைகள் - கண்ணன் கிருஷ்ணன், சாந்தா பதிப்பகம், 13, ஸ்ரீபுரம் 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14. விலை ரூ. 90.00**

அதிகார வட்டங்களில் நிகழும் உட்பூசல்களும், அதன் மூலம் சொந்த வாழ்விலும், சமூகத்திலும் ஏற்படும் தாக்கங்களும் உள்ளடங்கிய நாவல். எளிய நடையில், ஆங்காங்கே இலக்கிய மேற்கோள்களுடன் கூடிய நாவலை, ஓரளவு சுருக்கியிருந்தால், விறுவிறுப்பு கூடியிருக்கும்.

**- நேயமுகில்**



# நல்ல அடையாளங்கள்!

'தன்னுடைய ஓவியங்களை எல்லாம் ஒரு கண்காட்சியாக வைக்க வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு ஓவியனின் ஆர்வமாகவும் இருக்கும். அந்த வகையில், தங்களின் முதல் ஓவியமே கண்காட்சியில் இடம்பெற்ற அதிர்ஷ்டசாலிகள் இந்த இளம் ஓவியர்கள்' என்றார் ஓவியர் மணியம் செல்வன்.

இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவி முதல், முதுகலைப் படிப்பு பயிலும் இளைஞர்கள் வரை பங்கேற்று வரைந்த ஓவியங்கள், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள விவேகானந்தர் இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அந்த ஓவியங்கள் அனைத்திலுமே முதன்மை பெற்றிருந்தவர் சுவாமி விவேகானந்தர். அவரது பிறந்த தினம் தேசிய இளைஞர் தினமாக நாடு முழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் பொருட்டு கடந்த சில ஆண்டுகளாக, சுமார் ஒரு லட்சம் பேர் கலந்துகொண்ட கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து இந்த ஆண்டு ஓவியப் போட்டி நடைபெற்றது. 20,300 பேர் கலந்து கொண்ட இந்த ஓவியப் போட்டியில், பதினைந்து பேர் தேர்வு பெற்றார்கள். தமிழகம் மட்டுமின்றி அந்தமான் உள்ளிட்ட, நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும், இலங்கை, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் இந்தப் போட்டியில் பங்குபெற்றுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

கைகள் இல்லாததால் வாயால் தூரிகை பற்றி வரைந்தது; கால்களால் தூரிகை பற்றி வரைந்தது; புள்ளிகளால் வரைந்தது; ரத்தத்தால் வரைந்தது; ஆலிலையில் வரைந்தது; விவேகானந்தர் என்ற எழுத்துகளாலேயே வரைந்தது; வாஷ் டிராயிங், போஸ்டர் கலர், கிரையான்ஸ், லைன் டிராயிங், கொலாஜ், சம்கி வொர்க்... என்று விதவிதமான கற்பனையில் வெளுத்து







● ம.செ., சுவாமி கௌதமானந்தா, கிரேஸி...

வாங்கியிருந்தார்கள் அனைவரும்! அதுவும் பென்சிலால் வரைந்த ஓவியங்களில் தென்பட்ட அழகும், நுணுக்கமும் ஆச்சர்யப்படுத்துகின்றன.

மாணவர்களின் கற்பனை மட்டுமல்ல; அவர்கள் விவேகானந்தரின் வரலாற்றை எவ்வளவு தூரம் படித்து அறிந்திருக்கிறார்கள் என்பதும் அந்த ஓவியங்களில் பளிச்சென்று தெரிகிறது. ஒரு தனி நபரின் வாழ்வைப் பற்றிய ஓவியப் போட்டி என்றாலும் சரி; ஒரு துறவியை முன்னிலைப்படுத்தி நடைபெற்ற போட்டி என்றாலும் சரி; இந்தியாவிலேயே முதல் முறையாக நடந்துள்ள போட்டி இதுதான். 'இந்துத் துறவி' என்கிற நிலையைக் கடந்தவர் சுவாமி விவேகானந்தர் என்பதற்கு, இந்தப் போட்டியில் கலந்துகொண்டுள்ள இஸ்லாமிய, கிறிஸ்துவ மாணவர்களுடைய ஓவியங்களே நல்ல அடையாளங்கள்!

இத்தனைப் போட்டியாளர்களைக் காணும்போது, பரிசுக்காக மட்டுமே இவர்கள் கலந்து கொண்டார்கள் என்று கூற முடியாது. குறிப்பாக, அவர்களின் ஓவியங்களில், விவேகானந்தரின் தீட்சண்யம் பொருந்திய விழிகள், கம்பீரமான பார்வையை வெளிப்படுத்துகின்றன. காந்தமாய் இவர்களைக் கவர்ந்திருக்கிறார் விவேகானந்தர் என்பதற்கு அடையாளமாக இது தோன்றுகிறது.

இருநூறு இளைஞர்களைக் கேட்டார் விவேகானந்தர்; போட்டியில் கலந்து கொண்டவர்கள் அதைவிட நூறு மடங்கு அதிகம்! இந்தியா உயர்வு பெறும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

**- ராகவன்**

# ஏனசெல்லாம் சங்கீதம்

ஆரண்யா கல்லூரியில் நுழைந்தவுட னேயே, ஆளும் கட்சி எம்.எல்.ஏ. அட்மிட் ஆன அரசு மருத்துவமனை போல், கல் லூரியே அல்லோலகல்லோலப்படும். எங் கெங்கோ சிதறிக் கிடக்கும் பையன்கள் வேகமாக வாசல் நோக்கி வருவார்கள். அவள் தவறிக் கீழே விட்ட கர்ச்சிப்பை எடுத்துக் கொடுப்பதற்காக, ஏறத்தாழ ஒரு விஜய் பட க்ளைமாக்ஸ் ரேஞ்சுக்கு சண்டை நடக்கும். காம்பவுண்ட் சுவரில் ஆரண்யா வைப் பற்றிப் புதிதாகக் கவிதைகள் முளைக் கும்.

இத்தனைக்கும் காரணம், ஆரண்யா மிகவும் அழகாக இருப்பாள். எனது வகுப்புதான். ஆனால் இவ்வளவு அழகான ஆரண்யாவுடன், நான் எவ்விதச் சலனமு மின்றி, கடைசி வரையிலும் ஆரோக்கிய மான நட்புடன் மட்டுமே பழகினேன். காரணம் : அவள் ஏறத்தாழ எனக்கு ஒரு குரு... வழிகாட்டி....

காஞ்சிபுரம் அரு கிலிருந்த கிராமத்தி லிருந்து, சென்னை கல்லூரியில் சேர்ந்ததும், ஃபிலிம்ஃபேர் விழாவுக்கு வந்த பிச்சாண்டிப்பட்டி பிச்சைமுத்து போல் நான் அரண்டு போனேன்.

பெண்கள் அபாயமான ஆடைகளில், ஆண்களை இம்சைப்படுத்தினார்கள். பையன்கள் அடிக்கடி... ஹே... ஹே... என்று கத்தினார்கள். லெக்சரர் கூறிய, 'சைலன்ஸ்' என்ற ஒற்றை வார்த்தை ஆங்கிலத்துக்கே எனக்கு அடிவயிறு கலங்கியது. இன் பண்ணாமல், எண்ணெய் வழியும் முகத்து டன் கல்லூரிக்கு வரும் என்னை அனை வரும் ஓரக்கண்ணால், ஓரமாக ஒதுக்கினார்கள். நானும் ஒதுங்கிக் கொண் டேன்.



ஒருநாள் மதியச் சாப்பாட்டுக்காக ஹாஸ்டலுக்குச் சென்று கொண்டிருந்த போது, என்னை நோக்கி வந்த ஆரண்யா, ''உங்க பேரு அறிவழகன்தானே?'' என்றாள்.

''ஆமாங்க...''

''என் பேரு ஆரண்யா... நானும் ஹாஸ் டல்லதான் தங்கிப் படிக்கிறேன்...''

''தெரியும்ங்க...''

''ஏன் யாருகிட்டயும் பழகாம, ஒதுங்கி ஒதுங்கிப் போறீங்க..?''

''அதென்னவோ தெரியலைங்க. நீங்கள் லாம் பேசறது, உங்க ட்ரெஸ்ஸு... இதை



யெல்லாம் பார்த்தாலே, ரொம்ப தாழ்வு மனப்பான்மையாயிடுது...''

''இங்க பாருங்க... இப்ப நீங்களே சொன்ன மாதிரி, அது உங்க மனசுக்குள்ள இருக்குற ஒரு மனப்பான்மைதானே தவிர, உண்மை அது கிடையாது. சரி விடுங்க... நான் ஏன் தெரியுமா உங்ககிட்ட பேச வந்தேன்? இருக்கிற பசங்கள்ல, நீங்கதான் என்னைப் பொருட்படுத்தாம, சாதாரணமா இருக்கீங்க... ஒவ்வொருத்தனும், எங்கிட்ட அசட்டு ஜோக் அடிச்சுக்கிட்டு, என்னையே சுத்தி வந்துக்கிட்டு... எல்லார் கண்ணுலேயும் ஒரு சபலம் தெரியுது. உங்ககிட்டதான் அது இல்ல.''

''நானும் ஒண்ணும் யோக்கியன் இல்ல. எனக்கு இந்த காலேஜ் பில்டிங் எல்லாம் பார்த்தாலே பயமா இருக்கு. இதுல எங்கேருந்து பொம்பளைங்கள எல்லாம் சைட் அடிக்கிறது? இதுவே நீங்க, எங்க ஊரு செங்கல் சூளைல வேலை செய்யற பொண்ணாயிருந்தா, நானும் உங்களைச் சுத்திச் சுத்தி வருவேன்...'' என்றதற்கு ஆரண்யா சத்தமாகச் சிரித்தாள்.

அன்றிலிருந்து ஒரு நட்புக்கான விதை ஊன்றப்பட்டது. ஒன்றிரண்டு மாதங்களிலேயே வா... போ... என்று பேசிக்கொள்ளும் அளவுக்கு நெருங்கிவிட்டோம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. நான் மட்டும் தனியாக ஹாஸ்டல் பார்க்கில் படுத்துக்கொண்டு, மெதுவாக பாடிக்கொண்டிருந்தேன்.

''தொட்டுத் தொட்டு உன்னை
பட்டாம்பூச்சிப் பெண்ணை...'' என்று

■ ஜி.ஆர். சுரேந்தர்நாத்

ஏதோ ஒரு மூடில் நான் முழுதும் பாடி முடித்தவுடன், படபடவென்று யாரோ கைதட்டும் சத்தம் கேட்டது. திரும்பினேன். ஆரண்யா.

''ஏய்... ரொம்ப நல்லா பாடறப்பா... வா நம்ம காலேஜ் கல்ச்சுரல் டீம்ல சேர்த்துவிடறேன்...'' என்று எனது கையைப் பிடித்து எழுப்பினாள்.

காலேஜ் ஆடிட்டோரியத்தில் நுழைந்தோம். உள்ளே அரங்கத்தில் சிலர் கிடார் வாசித்துக்கொண்டும், தபேலாவைத் தட்டிக் கொண்டும் அமர்ந்திருந்தனர். ஆரண்யாவைப் பார்த்தவுடன், கிடாரையும், தபேலாவையும் அம்போவென்று விட்டுவிட்டு ஓடிவந்தனர்.

''வா ஆரண்யா... என்ன திடீர்னு ஆடிட்டோரியத்துக்கு விசிட்...?'' என்றான் அந்தக் குழுவுக்குத் தலைவன் போல் தெரிந்தவன்.

''உன்னைப் பாக்கத்தான் வந்தேன் தினேஷ்... இவன் அறிவு. என் கிளாஸ் தான்...''

''தெரியும்... உன் ஃப்ரண்டு. இவனைப் பார்த்து காலேஜே காதுல புகை விட்டுட்டு திரியுது.''

''அதை விடு... இவன் நல்லா பாடறான். உன் குரூப்ல சேர்த்துக்கறியா?''

''நல்லா பாடறானா? இங்க பாரு ஆரண்யா.. வயக்காட்டுல நாத்து நடறப்ப பாடறதை எல்லாம், காலேஜ் ஆர்கெஸ்ட்ரால பாட முடியாதும்மா...''

''ஏய்... சும்மா கலாய்க்காத... லைட் மியூசிக்லாம் நல்லா பாடறான். அறிவு... நீ பாடிக் காமி...''

சில வினாடி அமைதிக்குப் பிறகு பாட ஆரம்பித்தேன். மீண்டும் அதே 'தொட்டுத் தொட்டு உன்னை...' பாடல்.

பாடி முடித்தவுடன், தினேஷ் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். ''பின்னிட்டான் ஆரண்யா... கொஞ்சம் பேசிக் பிராக்டிஸ் கொடுத்துட்டு, வர்ற இன்டிபென்டன்ஸ் டே ஃபங்ஷன்ல தம்பிய அரங்கேற்றிடலாம்'' என்றான்.



உன் காலணியை
கோவில் வாசலில்
விட்டுச் சென்றபின்
உன்னைச் சுமக்கும் அதை
தூக்கிச் சுமக்கச் சொல்கிறது
என் காதல்!

சுதந்திர தினத்தன்று மேடை ஏறியவுடன், எதிரே இருந்த கும்பலைப் பார்த்து கால்கள் நடுங்கின.

''இல்லை என்று சொல்ல ஒருகணம் போதும்...'' என்று நான் தொகையறாவை ஆரம்பித்த பிறகும், மாணவர்கள் விடாமல் ஊளையிட்டுக் கொண்டே இருந்தனர். நான் தயக்கத்துடன் ஆரண்யாவின் முகத்தைப் பார்த்தேன். அவள் சத்தம் போட்டு, ''பாடுறா...'' என்று கூற... தொகையறாவை முடித்துவிட்டு, ''சந்தனத் தென்றலை... ஜன்னல்கள் தண்டித்தல் நியாயமா? நியாயமா...?'' என்று உச்சக் குரலுக்குச் செல்ல, கூட்டம் அமைதியானது. சில வினாடிகளில் அரங்கில் பொட்டு சத்தம்கூட இல்லை. நான் பாடி முடிக்க, அனைவரும் தன்னை மறந்து வேகமாகக் கைதட்ட, எனக்குக் கண்கள் கலங்கி விட்டன. நான் நன்றியுடன் ஆரண்யாவை

நோக்கினேன்.

**ச**ட்டென்று வாழ்க்கை சந்தோஷ மானது. எதிரில் என்னைப் பார்க்கும்போது மற்ற மாணவர்கள் மரியாதையுடன் புன்ன கைத்தனர். இன்டர்காலேஜ் காம்படிஷனில் முதல் பரிசு வாங்கினேன்.

**க**ல்லூரி வாழ்க்கை முடிவுக்கு வர... வாழ்க்கையில் எல்லாமே அஸ்தமித்து விட்டது போல் இருந்தது. ஆரண்யாவை ரயில் ஏற்றி விடச் செல்லும் வழியெங்கும் நான் ஒன்றும் பேசவேயில்லை.

ரயிலில் ஏறியவுடன், ''என்ன அறிவு... பேசவே மாட்டியா?'' என்றாள்.

''ப்ச்... எல்லாமே வாழ்க்கைல முடிஞ்சு போன மாதிரி இருக்கு ஆரண்யா...''

''ஏய்... லூசு... எனக்கு வேணும்ன்னா சொல்லு... ஒத்துக்கறேன். இதோ இன்னும் மூணு மாசத்துல மாமா பையனோட கல்யாணம்... அப்புறம் குழந்தை, மூத்திரத் துணி, நாத்தனார் கல்யாணம், இது அதுன்னு... ஆனா நீ ஆம்பள. இனிமே தான்டா உனக்கு லைஃபே ஸ்டார்ட் ஆவுது. தினேஷ் தனியா ஆர்கெஸ்ட்ரா ஆரம்பிக் கிறதா இருக்கான். அவன் கூட டச்லயே இரு. நீ நல்லா வருவடா...'' என்ற ஆரண்யா வின் கண்கள் கலங்கின.

''என்ன ஆரண்யா?'' என்ற நான் சட் டென்று உடைந்து அழ ஆரம்பித்து விட் டேன். ரயில் ஏற்றிவிட வந்த கும்பல் மொத்தமும், ஆச்சர்யத்துடன் வேடிக்கை பார்க்க... அது எங்களை உறுத்தவே இல்லை.

**நா**ட்கள் வேகமாக ஓடின. நானும், தினேஷும் ஆர்கெஸ்ட்ரா ஆரம்பித்தோம். ஆரண்யா திருமணப் பத்திரிகை அனுப்ப, நானும், தினேஷும் சென்று வாழ்த்தி விட்டு வந்தோம். பிறகு ஆர்கெஸ்ட்ராவில் பிஸியானேன். கொஞ்சம், கொஞ்சமாக எங்கள் புகழ் பரவி, வெளி மாவட்டங் களுக்கு எல்லாம் செல்ல ஆரம்பித்தோம்.



என்
காதல் கவிதைக்கு வரும்
சன்மானத்தை
அனுப்பி வைக்கிறேன்
எழுத உட்காரும்
பொழுதெல்லாம்
உதவி புரிந்தவள் நீ!

ஒன்றிரண்டு முறை ஆரண்யாவிடம் தொலைபேசியில் பேசினேன். பிறகு அவர் கள் வீட்டில் லேண்ட்லைனை கட் செய்து விட்டார்கள் போல. மொபைல் நம்பரும் கிடைக்கவில்லை. ஒரே ஒரு கடிதம் போட் டேன். பதில் ஒன்றும் வராமல் போக, அப்படியே டச் விட்டுப்போனது.

ஒரு டீ.வி. சேனல் நடத்திய பாட்டுப் போட்டியில் நான் கலந்துகொண்டேன். படிப்படியாக முன்னேறி குவார்ட்டர் ஃபைனல் வரை வந்தவுடன், ஆரண்யாவை நேரில் சந்தித்துச் சொல்லவேண்டும் போலத் தோன்றியது.

**நா**ன் ஆரண்யாவின் வீட்டில் நுழைந்த போது, ஆரண்யா மட்டும் ஒரு கைக் குழந்



தையைக் கொஞ்சிக் கொண்டு அமர்ந்திருந்தாள். குழந்தை பிறந்து விட்டதா? சொல்லவே இல்லை... என்று நினைத்தபடி சந்தோஷமாக, ''ஆரண்யா...'' என்றேன்.

நிமிர்ந்து என்னைப் பார்த்த ஆரண்யா, ஒரு வினாடி கூட தாமதிக்காமல், ''அய்யோ.. நீ எங்கடா இங்க வந்தே?'' என்று வேகமாகக் கேட்க, நான் அதிர்ந்தேன்.

''என்ன ஆரண்யா..? ஒரு முக்கியமான விஷயம் சொல்லலாம்னு வந்தேன்...''

''இதெல்லாம் அவருக்குப் பிடிக்காது அறிவு... ஏற்கெனவே இங்க நிறையப் பிரச்னை. நீ ஃபோன் பண்ணினேன்னுதான் லேண்ட்லைனையே கட் பண்ணிட்டாரு. நீ கிளம்பு... ப்ளீஸ்...''

நான் துக்கத்தை விழுங்கிக்கொண்டு, ''என்ன குழந்தை ஆரண்யா?'' என்றேன்.

**இனிமேதான்டா உனக்கு லைஃபே ஸ்டார்ட் ஆவுது. தினேஷ் தனியா ஆர்கெஸ்ட்ரா ஆரம்பிக்கிறதா இருக்கான். அவன் கூட டச்லயே இரு. நீ நல்லா வருவடா.**

''பாழாப்போற பொம்பள.. போயிடு அறிவு. அவரு வர்ற நேரம். ஆண்-பெண் நட்பெல்லாம் காலேஜோட சரியாப் போச்சுடா... கல்யாணத்துக்குப் பிறகு, இங்க பெண்களோட வாழ்க்கை வேற மாதிரி அறிவு... காட்டுக்குள்ள வழி தெரியாம மாட்டிக்கிட்ட மாதிரி இருக்கு. உள்ள இருக்கவும் முடியல. வெளியே போகவும் முடியாது. ப்ச்... அதெல்லாம் பெரிய கதை... நீ சீக்கிரம் கிளம்பு அறிவு...'' என்ற ஆரண்யாவின் கண்களில் தெரிந்த வேதனையையும், பயத்தையும் பார்த்தபோது, யாரோ மனசை அறுப்பது போல் இருந்தது. நான் மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் திரும்பி நடந்தேன்.

சில காயங்களுக்கு மருந்தே கிடையாது. ●



## இசை யாத்திரை

**பா**த யாத்திரை, ரத யாத்திரைக்கு அடுத்து இசை யாத்திரையும் இப்போது சேர்ந்திருக்கிறது. பாடகர் யேசுதாஸ் இந்தியாவின் முக்கிய நகரங்களில் பொது மக்கள் முன்னிலையில் கச்சேரியைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டுள்ளார். தேச பக்தி மற்றும் வன்முறைக்கு எதிரான பாடல்களை மட்டுமே தமது குழுவினரோடு கட்டணம் ஏதும் பெறாமல் பாட இருக்கிறாராம். ஆக்கபூர்வமான சமூக அமைப்புகள் நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டால், இசை யாத்திரை இனிதாகத் துவங்கிவிடுமாம். 'நினைவு நல்லது வேண்டும் நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்று யேசுதாஸ் தோளில் கை போட்டு பாரதி பாடுவது போல் தெரிகிறது.

- அமிர்தா

குட்பட்ட தொகுதிகளுக்கு, மூன்று பெயர்களைப் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறாராம். ''தி.மு.க. தலைமை நிலையமே இரண்டாக பிரிக்கப்பட்டதைப் போல உணர்கிறோம். இனி தலைவர், தளபதி என்று பரணி பாடிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது... அஞ்சா நெஞ்சனின் உள்ளத்திலும் இடம் பிடிக்க வேண்டும்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் குமரி மாவட்டப் பிரமுகர் ஒருவர்.

- ஸ்ரீநி

# தொகுதி இழுபறி!

அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் தொகுதிப் பங்கீடுகள் கிட்டத்தட்ட முடிந்து விட்டன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு திருப்பூர், தென்காசி, நாகப்பட்டினம். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக்கு கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், வடசென்னை. ம.தி.மு.க.வுக்கு விழுப்புரம், பொள்ளாச்சி, திருச்சி, சிவகாசி.

ம.தி.மு.க. வடசென்னையையும் கேட்கிறது. அதை அந்தக் கட்சிக்குக் கொடுக்கும் வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையில் திண்டுக்கல் மார்க்ஸிஸ்டுகளுக்குக் கொடுக்கப்படலாம். கோவை மாவட்டத்தில் இருப்பது இரண்டு தொகுதிகள். அ.தி.மு.க. செல்வாக்கோடு இருக்கும் அந்தப் பகுதியில் உள்ள இரு தொகுதிகளையும் கம்யூனிஸ்டுகளுக்குக் கொடுப்பதில் உள்ளூர் அ.தி.மு.க. எதிர்ப்பு காண்பிப்பதால் இழுபறி இருக்கிறது. பா.ம.க.வுக்கு அரக்கோணம், தர்மபுரி, மயிலாடுதுறை, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, வந்தவாசி ஆகிய தொகுதிகளை ஜெ. ஒதுக்கி வைத்திருக்கிறார். ஆனால் பா.ம.க. பத்து கேட்கிறது. பெரம்பலூர் அல்லது கடலூர் கொடுத்து ஏழு வரை கொடுக்கவும் ஜெ. தயார். ராமதாஸ் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்தால் திருமாவும் அதில் இணைவார். அவருக்குச் சிதம்பரம். குறைந்தது இருபது தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.க. போட்டியிட வேண்டும் என்று ஜெ. நினைக்கிறார்.

தென் தமிழ்நாட்டில் இருக்கும் பத்து தொகுதிகளின் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை, அமைப்புச் செயலாளர் அழகிரிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டிய அழகிரி, ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் அவரது எல்லைக்



* மு.க.அழகிரி



* மு.க.ஸ்டாலின்

'குடி குடியைக் கெடுக்கும்' என்பது மக்களுக்குத்தான். 'குடி கோடி கோடியாக ஆட்சியில் இருப்போருக்கு வாரிக் கொடுக்கும் காமதேனு'. தமிழகத்தில் உள்ள அறு மதுபானத் தொழிற்சாலைகள் தரம் குறைந்த தயாரிப்பு, தீர்வை ஏய்ப்பு மற்றும் வேறு பல முறைகேடுகளுக்கு ஈடாக மாதா மாதம் கட்டும் கப்பம் மட்டும் நாற்பது கோடி என்பதாக வட்டாரத்து வண்டுகளின் ரீங்காரம்!

# ஐச்வர்யம் அருள்பவள்

அக்னி தேவன் புறப்பட்டான். அவனுக்கே ஜாத வேதஸ் என்று பெயர். எல்லாம் தெரிந்தவன்! புறப்பட்டவன், அந்தப் பிரகாசம் எங்கே இருக்கிறது என்று பார்த்துக் கொண்டே போகிறான். நாம் ஒரு பொருளை நோக்கிப் போகிறோம் என்றால், நம் கவனக் குவிப்பு முழுவதும் அதன் மேல் இருக்கும். அதுபோல் சென்ற அக்னி தேவன், அந்தப் பிரகாசத்தின் அருகே சென்று பார்த்தால், அதைக் காணோம்! அங்கும் இங்கும் சுற்றியும் திரும்பியும் பார்த்தால் ஓர் அழகான யக்ஷன் தென்பட்டான். 'யௌவனம்தான் நமது பலம்' என்று நினைத்த தேவர்களுக்கு முன்னால் ஓர் யௌவன புருஷன்! மிக அழகான ஸ்வரூபத்தோடு நின்றான். அழகும் யௌவனமும் தேவர்களான தங்களுக்கு மட்டுமே உண்டு என்று நினைத்துக்கொண்டிருந்த அக்னி தேவனுக்கு, அந்த யக்ஷனைப் பார்த்து என்ன கேட்பதென்றே தெரியவில்லை! தான் தேடி வந்த பிரகாசத்தை மீண்டும் தேட ஆரம்பித்தான். அந்த யக்ஷனிடம் கேட்கலாமா என்று அக்னி தேவன் யோசித்துக் கொண்டே இருந்த போது, யக்ஷன் பேச ஆரம்பித்தான்:

''நீ யார்?'' என்றான்!

''நான் யாரா? எங்கள் ஊருக்கே வந்து, என்னை யார் என்று கேட்கிறாயா? நீ யார்?'' என்று தான் அக்னி தேவன் திருப்பிக் கேட்டிருக்க வேண்டும். ஆனால், எப்போதுமே, எதிரிலே இருக்கக்கூடியவர்கள் நம்மைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்டால், நமக்கு மனசுக்குள்ளே ஒரு சின்ன பயம் உண்டாகும். 'ஓஹோ! இப்படிக் கேட்கிறானே, இவன் நம்மைவிட உயர்ந்தவனாக இருப்பானோ?' என்கிற அச்சம் ஏற்படும். 'பதில் சொன்னால் மாட்டிக் கொள்வோமோ?' என்கிற சந்தேகம் வரும்.

அக்னிதேவன் சற்று நிறுத்திவிட்டு, ''நான் ஜாதவேதஸ்'' என்று பதில் சொன்னான்.

''அப்படியானால் எல்லாம் தெரிந்தவனா நீ?'' என்றான் யக்ஷன். ''உன் ஸ்வபாவம் என்ன?'' என்று கேட்டான்.

''எல்லாவற்றையும் எரித்துவிடுவேன்!''

''எல்லாவற்றையும் எரிப்பாயா?''

''ஆம்! எல்லாவற்றையும்.''

''அப்படியா?'' என்ற யக்ஷன் திரும்பிப் பார்த்தான். அங்கே கொஞ்சம் புல் முளைத்திருந்தது. ஒரே ஒரு புல் கீற்றை எடுத்துத் தூக்கிப் போட்டான். போட்டுவிட்டு, ஜாத வேதஸ்ஸாக இருக்கக்கூடிய அக்னியை, எல்லாவற்றையும் எரிக்கக்கூடிய அக்னியைப் பார்த்து, ''எங்கே இதை எரித்துவிடு பார்க்கலாம்!'' என்றான்.

முயன்று முயன்று பார்த்த அக்னியால் புல் கீற்றை எரிக்க முடியவில்லை. நம்மால் செய்ய முடிந்த ஒன்றையே செய்ய இயலா

21 ஸ்ரீ லலிதா மூன்றாம் பாகம்


ஸ்ரீ கனக குஜாம்பிகை
சுதா சேஷய்யன்

மல் போகிறபோதும் பயம் வரும். அக்னிக்குப் பயம் வந்தது. அந்த இடத்தை விட்டு எப்படியாவது தப்பித்தால் போதும் என்று நேரே தேவேந்திரனிடம் ஓடி வந்தான்.

''அப்பா! நான் அங்கே போன போது அந்தப் பிரகாசத்தைக் காணோம். யாரோ ஒரு யக்ஷன் அங்கே இருந்தான். அந்த யக்ஷன் முன்னால் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. நான் வந்து விட்டேன்'' என்றான்.



**வாயுவின் தோல்வி!**

தேவர்களுள் அடுத்த பலசாலி யார்? வாயு. அவன் அனுப்பப்பட்டான். யக்ஷனிடம் போனான்.

''என்ன பண்ண முடியும் உன்னால்?'' - யக்ஷன் கேட்டான்.

''எல்லாவற்றையும் ஊதித் தள்ளுவேன்'' என்றான் வாயு.

''எங்கே, இதை ஊதித் தள்ளு பார்க்கலாம்'' என்று அதே புல் கீற்றை எடுத்துப் போட்டான் யக்ஷன்!

புல் கீற்றைப் புரட்டிப் புரட்டிப் போட முயன்றான் வாயு. ஆனால் முடியவில்லை. எல்லாவற்றையும் புரட்டிப் போடவல்ல வாயுதான் புரண்டு போனானேயொழிய, அந்தப் புல் கீற்றைப் புரட்ட முடியவில்லை. அங்கேயிருந்து திரும்பி வந்து தேவேந்திரனிடம் சொன்னான்.

**இந்திரன் கற்ற பாடம்!**

தேவேந்திரனுக்கு இப்போதுதான் ஒன்று புரிந்தது; 'வந்திருப்பது ஏதோ சாதாரண ஆள் இல்லை!' தானே போய் என்னவென்று பார்க்க முடிவு செய்தான். தேவேந்திரன் போய் நின்றபோது யக்ஷனைக் காணவில்லை. அந்த இடத்திலே உமா ஹைமவதி தோற்றமளித்தாள். பொன்னிறத்தவளாக, யௌவன ஸ்வரூபிணியாக, ஒரு பெண் தோற்றம் தந்தாள். தங்க நிறத்தில் இருந்ததால் ஹைமவதி என்று பெயர். அவள் தேவேந்திரனைப் பார்த்துக் கேட்டாள்:

''வந்தது யார் என்று உனக்குத் தெரியவில்லையா? உன்னிடத்தில் பலம் உண்டு, யௌவனம் உண்டு, தனம் உண்டு, அமுதம் உண்டு, கற்பக விருக்ஷம் உண்டு - எல்லாம் உண்டு! ஆனால், வந்து நின்ற பரம் பொருளை உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், உன் வித்தைக்கு என்ன மகத்துவம்?''

**தேவேந்தரன் என்பது ஓர் அடையாளம்தான். மனிதர்கள், தேவர்களாக உயரமுடியும்.**

- இப்படிச் சொல்லிவிட்டு, ஆத்ம வித்யையை தேவேந்திரனுக்கு உபதேசித்தாள் உமா ஹைமவதி.

தேவேந்திரன் என்பது ஓர் அடையாளம்தான். மனிதர்கள், தேவர்களாக உயர முடியும் என்றால், மனிதர்களுள் யாருடைய இந்த்ரியங்கள் சரியான வழியில் போகக் கூடியதாக இருக்கிறதோ, அவர்கள் தேவர்கள். தேவர்களின் தலைவன் தேவேந்திரன் என்றால், தேவேந்திரனுக்கு பிரம்ம வித்

யையை உபதேசம் செய்துவிட்டால் அது தேவர்களையெல்லாம் சென்றடையும் என்று பொருள். அப்படியானால் மனிதர் களுக்கும் அது இறங்கும்.

அப்படி தேவேந்திரனுக்கு பிரம்ம வித்யையை உபதேசித்தவள் **ஆத்ம வித்யா.** அவளே **ஸ்ரீவித்யா, மஹா வித்யா** ஆகியன வாகவும் இருக்கிறாள்.

உபாஸனை வித்யைக்கு மஹா வித்யை என்று பெயர். எப்படியெல்லாம் உபாஸ னைகள் செய்ய வேண்டும் என்று சொல் லக்கூடிய வித்யை மஹா வித்யை. மஹா வித்யை, ஸ்ரீவித்யை மூலமாக எதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், அம்பாளின் ஸ்வரூபத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### பிரிக்க முடியாதவர்கள்!

**காமஸேவிதா** - மன்மதனால் ஆராதிக் கப் படக்கூடியவள். மனத்தின் ஆசைகளால் ஆராதிக்கப்படக்கூடியவள். அதை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டும்



என்றால் **ஸ்ரீ ஷோடஷாக்ஷரி வித்யா.** பதி னாறு அக்ஷரங்களைக் கொண்டு அம்பாளை உபாஸிக்கிற வித்யை.

**த்ரிகூடா** - மும்மூன்றாக இருக்கக்கூடிய எல்லாவற்றிலும் நிலைபெற்று இருக்கக் கூடியவள்.

**காமகோடிகா** - காமகோடி என்கிற திருநாமம், ரொம்ப அழகான திருநாமம். காமகோடிகா என்றால், காமேசுவரராக இருக்கக்கூடிய சிவத்திலிருந்து பிளவுபடா மல், வேறுபடாமல், அபின்னமாக இருக்கக் கூடியவள். சிவகாமேசுவரரைத்தான் குறிக் கிறது காமன் என்ற திருநாமம். அவரது அபின்னமாக, ரூபமாக, குணமாக இருக்கக் கூடியவள் காமகோடி. இருவரையும் பிரிக்க முடியாது என்று குறிக்கிறது இத்திருநாமம்.

### கடைக்கண் நோக்கில்...

**கடாக்ஷ கிங்கரி பூத கமலா கோடி ஸேவிதா** - சிவத்திடமிருந்து பிரிக்கப்பட முடியாதவள் அம்பிகை. ஆனால், அவளைச் சுற்றியும் ஒரு பெருங்கூட்டம் திரண்டிருக் கிறது. ஒரு கோடி பேர் இருக்கிறார்கள். அத்தனை பேரும் - மஹாலக்ஷ்மி மாதிரி சர்வ ஐஸ்வர்யத்தோடு இருக்கிறார்கள். எல்லோரும் அம்பாளை வணங்குகிறார்கள். அம்பாள் அப்படி இலேசாகக் கண்ணைத் திருப்பினால் 'என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டுக் கொண்டு ஓடி வருகிறவர்கள்! - இவர்கள்தான் கடாக்ஷகிங்கரர்கள்.

கிங்கரன், கிங்கரி என்று சொல்வோம். 'கிம் கரோமி?' (என்ன செய்யட்டும்?) என்று கேட்டுக்கொண்டு பணிவிடை செய்யக் காத்துக் கிடப்பவர்களே கிங்கரர்கள். அதன் பெண் பால் கிங்கரி. **கடாக்ஷ கிங்கரீபூத கமலாகோடி ஸேவிதா**

இதற்கு இன்னொரு அர்த்தமும் சொல்ல லாம். அம்பாளுக்குப் பணிவிடை செய்யக் கூடியவர்கள் மஹாலக்ஷ்மிகளாகவே ஆகி விடுகிறார்கள்! சர்வ ஐச்வர்யங்களும் படைத்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

**(வளரும்)**

ஒன்றல்ல... இரண்டல்ல... ஆறு வருடங்களாய் ஜெயா டி.வி.யில் 'காமெடி பஜார்' மூலம் கலக்கி வரும் மாறன், ஜேக்கப் ஜோடியைப் பார்க்கப் போய் வசமாக மாட்டிக் கொண்டோம். மாறி மாறி கலாய்த்து காதில் இரத்தத்தை வரவழைத்து விட்டார்கள்.

''இந்த நிகழ்ச்சிக்கு நான்தான் ஸ்கிரிப்ட். ஒரே செட்டில் எபிசோடை முடிக்கிறதுதான் இதோட ஸ்பெஷாலிட்டி. செட்ல பீச்ச காமிச்சா ஆடியன்ஸுக்கு பீச்சுல இருக்கிற மாதிரியே இருக்கும். டிரெயின் காமிச்சா டிரெயின்ல இருக்கிற மாதிரியே இருக்கும்'' என்று காமெடி பஜார் பற்றி சீரியஸாக மாறன் சொல்லிக் கொண்டிருக்க...

''அப்போ கூவத்தைக் காட்ற மாதிரி சீன் வந்தா ஆடியன்ஸ் எப்படி பாஸ் ஃபீல் பண்ணுவாங்க?'' என்று குரல் வந்தது. திரும்பிப் பார்த்தால், ட்ரிபிள் எக்ஸல் சைஸில் ஜேக்கப் நின்று கொண்டிருந்தார்.

''உன்னோட வாய் மாதிரி ஃபீல் பண்ணுவாங்க, போதுமா'' என்று மாறன் ரிப்ளை தந்துவிட்டு நம்மிடம் தொடர்ந்தார்.

''இந்த காமெடி பஜாருக்கு மக்களிடம் நிறைய ரெஸ்பான்ஸ் இருக்கு. ஒரு சில எபிசோட் க்ளைமாக்ஸ்ல ஜேக்கப் எதுலயாவது மாட்டிக்கிட்டு அடிவாங்கற மாதிரி இருக்கும். வெளியில மீட் பண்ற ஆடியன்ஸ் 'அவரைப் பார்த்தா, கொழு கொழுன்னு குழந்தை மாதிரி இருக்கார், இப்படி அடிவாங்கித் தர்றியே, உனக்கு மனசாட்சியே இல்லையா'ன்னு என்கூட சண்டைக்கு வர்றாங்க'' என்றார்.

''ஆமா பாஸ், கள்ளம் கபடமில்லாமல் இருக்கிற நான் அடிவாங்கினா எல்லாருக்கும் கோபம் வராதா?'' என்றார் ஜேக்கப் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டே.

''அது என்னடா என்னை மாதிரி



காமெடி பஜார் இயக்குநர் சரவணராஜன் :

ஜெயா டி.வி.யில் அரசியல் தொடர்பான நிகழ்ச்சிகளைச் செய்து வருகிறேன். இதழியல் துறையில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளதால் அரசியல், பொருளாதார, சமூக விஷயங்களை இயக்குவதில்தான் எனக்கு ஆர்வம் அதிகம். அரசியல் நிகழ்ச்சியை ரசிக்க குறிப்பிட்ட வயதும், பக்குவமும் தேவை. ஆனால், காமெடியை அனைவரும் ரசிக்க முடியும். அதனால்தான் இதையும் செய்யறேன். பார்க்கிற ரசிகர்களுக்கு மட்டுமில்லாம எனக்கும் இது ரிலாக்ஸா இருக்கு. என்னை ரீ சார்ஜ் செய்துக்க உதவுது'' என்கிறார். இவர் அரசின் ஐந்தாண்டு திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் என்பது ஸ்பெஷல் நியூஸ்.

# மாமனார்




# வீட்டு சீதனம்!

ஒல்லியா அழகா இருக்கறவங்க கள்ளம் கபடம் உள்ளவங்க... உன்னை மாதிரி யானை சைஸ்ல இருந்தா கள்ளம் கபடம் இல்லாதவங்களா? யார்டா கண்டுபிடிச்சாங்க இந்த ஃபார்முலாவை?'' என்று கவுண்டமணி பாணியில் நக்கலடித்து விட்டு, ''சார், பொண்ணு பார்க்கப் போனா, பொண்ணு வீட்ல மாப்பிள்



உங்க வீட்டு வாசல் ரொம்பக் குறுகலா இருக்கு. அதை இடிச்சுப் பெருசா கட்டுங்கன்னு சொல்லி இருக்கான்.

ளைக்கு என்ன செய்யணும்னு கேட்பாங்க. அதே மாதிரி நம்ம ஜேக்கப் கிட்டேயும் அவர் மாமனார் கேட்டாராம்.

அதுக்கு ஜேக்கப் நீங்க எனக்குப் பெரிசா ஒண்ணும் செய்ய வேண்டாம்... உங்க வீட்டு வாசல் ரொம்பக் குறுகலா இருக்கு. அதை இடிச்சுப் பெருசா கட்டுங்கன்னு சொல்லி இருக்கான். அப்போ மிரண்ட மாமனார், இதுவரை மீளவே இல்லை'' என்று கலாய்த்தார் மாறன்.

''நான் ஜெயா டி.விக்காக சினிமா ஸ்டார்களைப் பேட்டி எடுக்க அவுட்டோருக்குப் போவேன். அப்ப அங்கே வேடிக்கை பார்க்க வர்ற ஊர் ஜனங்க, சினிமா ஸ்டார்களை விட்டுட்டு என்கிட்டே ஆட்டோகிராப் கேட்பாங்க. வீட்டுக்குச் சாப்பிட வாங்கன்னு கூப்பிடுவாங்க. எங்கே போறது? ஐயாதான் ரொம்ப பிஸியாச்சே'' என்று பில்டப் போட்டார் ஜேக்கப்.

''இப்படியே மாத்தி மாத்தி கலாய்க்கிறதை விட்டுட்டு உங்க புரோகிராமைப் பத்தி உருப்படியா ஏதாவது சொல்லுங்க'' என்று கேட்டோம்.

''எல்லா சேனல்களிலும் எத்தனையோ விதமான காமெடி புரோகிராம் வந்துட்டு இருக்கு. எங்களோட இந்த காமெடி பஜார் நானூறு எபிசோடைத் தாண்டியாச்சு. ஆனாலும் இதுவரை யார்கிட்டே இருந்தும் மிரட்டலோ, எதிர்ப்போ வந்ததில்லை. யாரையும் மறைமுகமா புண்படுத்தற மாதிரி எந்த இடத்திலும் எந்தக் காட்சியையும் நாங்க செய்யத தில்லை. இதைவிடச் சிறப்பா என்ன சொல்றது?'' என்றார்கள் கோரஸாக. சீரியஸாகப் பாராட்ட வேண்டிய விஷயம்தான்!

- ராகவ்குமார்



# அப்பாவின் காதலி!

- ராகவன்

''ஏய்!''

அப்பாவின் குரல் கேட்டது.

எழுபத்தைந்து வயதுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னமும் அந்த 'ஏய்'யும் கோபமும் கொஞ்சமும் மாறவில்லை. இதற்குத்தான் என்று இல்லை. அவரைப் பார்க்கும்போதே மனதோரம் ஒரு பயம் வரும்.

இப்போதெல்லாம் கை நீட்டுவதில்லை, வயதாகிவிட்டதால். முன்பெல்லாம் பளீரென்று கை நீளும். அம்மா உட்பட யாருமே அதற்கு விதிவிலக்கில்லை.



ஆறு குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி கல்யாணம் முடித்து... நினைக்கவே மலைப்பாக இருக்கிறது. எப்படித்தான் இந்த மனிதரைச் சகித்துக் கொண்டாளோ?

அம்மாவை நினைத்தால் ஆச்சர்யமாக இருந்தது.

இன்னமும் அப்பா சாப்பிட்ட இலையில்தான் அம்மா சாப்பிடுகிறாள். கூட்டு, கறி எல்லாமே மீதம் வைத்திருக்கிறார்.

''என்னம்மா இன்னும் இதெல்லாம்...?''

கேட்கும் போதே அம்மா சொன்னாள்:

''உனக்கு இதெல்லாம் புரியாது. விடு...''

நிஜமாகவே புரியாமல் பார்த்தேன்.

''அதே இலைல ஏன் சாப்பிடணும்? போட்டதை முழுசா சாப்பிடாம அவர் ஏன் மிச்சம் வைக்கணும்? இதானே கேக்கப் போற?''

நான் பேசாமலேயே பார்த்தேன்.

''டேய்... நீங்கல்லாம் அப்ப சின்னவங்களா இருந்தீங்க. உங்கப்பாவோட வருமானத்துக்குள்ள நாம சாப்பிட்டது, நீங்க படிச்சதெல்லாம் பெரிய விஷயம். சாப்பிடும்போது நீங்க கூட்டு, கறி கேட்டா, இல்லன்னு சொல்லாம போட்டுடுவேன். நான் சாப்பிடும்போது வெறும் சாதம்தான் இருக்கும். ஒரு நாள் அதை அப்பா பார்த்துட்டார்.

அப்ப ஆரம்பிச்சது இந்த வழக்கம்...!'' சொல்லும்போதே அம்மாவின் குரல் கரகரத்தது.

''அவர் கோபப்படுவார்; அடிச்சிருக்கார். காரணம், அவரோட இயலாமை. அதைத்தாண்டி, எனக்குத் தராம, உங்களுக்குத் தராம ஒரு துளி அவர் வாய்க்குப் போயிருக்குமா? உங்களுக்கு இதெல்லாம் புரியாதுடா... நீங்கள்லாம் காதலிக்கிறவங்க!''

எனக்குச் சுளீரென்று உறைத்தது.

அம்மா படிக்காதவளா?!

**ச.ந.கண்ணன்**



லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஆகிய இருவரும் தேர்ந்தெடுத்த பாதையில்தான் சானியாவும் செல்லக்கூடும் என்பது இப்போது தெள்ளத் தெளிவாகிவிட்டது. இத்தனை நாட்களாக ஒற்றையர் ஆட்டங்களில் மூன்று சுற்றுகளைத் தாண்டிச் செல்வதில் சொல்லொணாத் துயரங்களை அடைந்தார் சானியா. பல மாதங்கள் ஒய்வெடுத்துப் பார்த்தாலும் அதே முடிவுதான். ஒருவழியாக மகேஷ் பூபதியுடன் ஜோடி சேர்ந்து இரட்டையர் ஆட்டங்களில் ஆட ஆரம்பித்த பிறகுதான் அவரால் கௌரவமான வெற்றிகளை கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெறமுடிந்தது. சென்ற வருட ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் மகேஷ் பூபதியுடன் இணைந்து இறுதி ஆட்டம் வரை வந்த சானியா, இந்த முறை கோப்பையைத் தவறவிடவில்லை. நீண்ட நாள் கழித்து, தானும் சிரித்து எல்லோர் இதழ்களிலும் புன்னகையைத் தவழ வைத்திருக்கிறார். சானியா வாங்கியுள்ள முதல் கிராண்ட்ஸ்லாம் கோப்பை இது. ஏற்கெனவே ஜூனியர்



லக்ஷ்மிபதி பாலாஜியை மீண்டும் அதே புன்னகையோடு பார்க்க முடிகிறது. இந்திய அணி கூடாரத்தில். இன்று இஷாந்த் சர்மா எப்படியோ அதுபோல நான்கு வருடங்களுக்கு முன்பு பாலாஜி மீது எல்லோருக்கும் பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. பாகிஸ்தான் டூரில் முஷரப்பிடம் தனிப் பாராட்டு வாங்கியபோது, பாலாஜியின் புகழ் பல மடங்கு எகிறியது. ஆனால் அதன் பிறகு கண் வைத்தது போல மூன்று வருடங்கள் இந்திய அணிக்குள் நுழைய முடியாதபடி உடம்பு படுத்தி எடுத்து விட்டது. சென்ற ஐ.பி.எல். போட்டிகளின்போது மெல்ல எழுந்து வந்தார். இந்த வருட ரஞ்சிப் போட்டியில்தான் பழைய பாலாஜியைப் பார்க்க முடிந்தது. ஸ்ரீகாந்த் தேர்வுக்குழு தலைவராக இருக்கிற இந்தக் கணத்தில், எந்தத் தமிழக வீரருக்கும் அநீதி நடந்துவிட முடியாது. முனாப் காயம் அடைந்தவுடன் உடனே ஸ்ரீலங்காவுக்கு பாலாஜி அழைக்கப்பட்டுள்ளார். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சின் படை மெல்ல மெல்ல பலமாகி வருகிறது. அதன் இன்னொரு ஆயுதமாக நுழைந்திருக்கிறார் பாலாஜி. ●


# புன்னகை சானியா...



இரட்டையர் விம்பிள்டன் கோப்பையை வென்ற சானியா, இனி தொடர்ந்து இரட்டையர் ஆட்டங்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்துவார் என்று தனியாக எழுதிச் சொல்ல வேண்டியதில்லை. ●

# ...கண்ணீர் ஃபெடரர்!


சமகாலத்தின் சிறந்த டென்னிஸ் வீரர்களான ஃபெடரரும் நடாலும் மீண்டும் ஒருமுறை அதிஅற்புதமான ஆட்டம் ஒன்றை ரசிகர்களுக்கு வழங்கினார்கள். சமீபகாலமாக ஃபெடரரைத் தோற்கடிப்பதை வழக்கமாக மாற்றிக்கொண்ட நடால், இந்த வருட ஆஸ்திரேலிய ஓபன் போட்டி இறுதி ஆட்டத்தில் ஐந்து மணி நேரம் போராடிய பிறகே வென்றார். வேறு எந்த இரு வீரர்கள் ஆடினாலும் இத்தனை தரமான டென்னிஸை வழங்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு அமைந்தது ஆட்டம். டென்னிஸ் திறனின் உச்சத்தை எட்டியபடி இருவரும் ஆடினார்கள். 2008ல் ஃபெடரருக்குத் தண்ணி காட்டிய நடால், இந்த வருடமும் ஃபெடரரை நிம்மதியாகத் தூங்கவிட மாட்டார் போலிருக்கிறது. இந்த வருடத்துக்கு இன்னும் மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் மிச்சமிருக்கின்றன. ரசிகர்களுக்கு வேட்டை காத்திருக்கிறது. ●



* நடால்



* ஃபெடரர்




**“எனக்கு எதுக்கும்மா இந்த மலர்க்கொத்து... உன் மனமும் முகமும் எப்பொழுதும் மலர்ந்திருந்தா, அதுவே போதுமே” என்று தனக்கு மலர்க்கொத்து அளிக்க வந்த பெண்ணை நோக்கி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சொன்னதும் அரங்கமே**

அதிசயித்து அமைதியானது. இந்த அமைதிதான் உலகத்தில் உள்ள எல்லா உள்ளங்களும் பாரபட்சமே இல்லாமல் வேண்டுவது. அதைத் தேடித் தவிக்கும் மக்களுக்காக அண்மையில் சென்னைக்கு வந்தார் ஸ்ரீஸ்ரீரவிசங்கர். மனக

அமைதிப்பட்டால் போதும், நாம் எதை யும் சாதித்து விடலாம் என்பதே இந்த நிகழ்ச்சியின் சாரமாக இருந்தது.

''இசை நம் மனசை அமைதிப்படுத்தி விடக்கூடிய பெரும் சக்தி படைத்தது. கானம், தியானம், ஞானம். வாருங்கள் முதலில் கானங்களைக் கேட்டு நம் மனத் தில் இன்ப வெள்ளத்தை நிரப்பிக் கொள் வோம்'' என்றார் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்.

அருமையான பஜனை பாடல்களும், அபிராமி அந்தாதிகளும் இசைத்து முடிக் கப்பட்டவுடன், ''இசையைக் கேட்டு ரசிச்சாச்சு... இனி தியானத்துக்குப் போக லாமா?'' என கூட்டத்தினரைப் பார்த்து ஸ்ரீஸ்ரீ கேட்க, குழுமியிருந்தோர் அனை வருமே அவரோடு சேர்ந்து தியானத்துக்குத் தயாரானார்கள்.



# கானம்... தியானம்... ஞானம்!

தியானப் பயிற்சியை அவர் ஆரம்பிப் பதற்கு முன் கூட்டத்தினரைப் பார்த்து, ''உங்களில் எத்தனை பேருக்கு கை கால் வலி, மூட்டுவலி, முதுகு வலி இருக் கிறது?'' எனக் கேட்க, பல கைகள் உயர்ந் தன.

''கையை உயர்த்தியவர்களில் பலர் இளைஞர்களாக இருக்கிறீர்களே'' என்ற படியே தியானத்துக்கு தயார்ப்படுத்திக் கொண்ட குரு, ''முதல்ல கைகளைச் சிலிப் பிக்குங்க... மிருகங்கள், பறவைகள்லாம் கூட தூங்கி எழுந்தா இப்படி நல்லா சிலிப்பிக்கும் பார்த்திருக்கீங்களா? மனிதன் தான் இப்படி எல்லாவற்றையும் உதறி விட்டு சிலிர்த்துக் கொண்டு எழுந்திருக்க மறந்துவிட்டான். அதனால்தான் இவ் வளவு கஷ்டங்களும்'' என்றார்.

இந்த நிகழ்ச்சியில் டி.என்.சேஷன் மூலம் 'மௌனம் ஒரு கொண்டாட்டம்' என்ற பொருளிலான நூலை வெளியிட்ட குருஜி, ''சேஷன் சிறந்த பேச்சாளர். பலரை யும் ஊக்கப்படுத்தும் வகையில் பேசுபவர். இப்போது மௌனம் குறித்து உங்களிடம் பேசுவார்'' என்றார். ஆனால் சேஷனோ, ''அதிகம் பேசுவது பிரச்னையைத்தான் உண்டாக்கும். மௌனமே சிறந்தது என் பதை உணர்த்தவே இந்த நூலை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நான் பேச்சைச் சுருக்கமாக முடித்துக் கொள் கிறேன்'' என்றபோது கூட்டத்தில் சிரிப் பொலி எழுந்தது.

சென்னைக்குள் அடியெடுத்து வைப் பதற்கு இரண்டு நாட்களுக்கு முன், இலங் கைத் தமிழ் மக்கள் தங்கியிருந்த மண்டபம் பகுதிக்குச் சென்றிருக்கிறார். அங்கிருக்கும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களிடம் நம்பிக்கையையும், அவர் களின் உள்ளத்தில் அமைதியையும் ஏற் படுத்தும்விதமாய் 'ஒவ்வொரு அழிவுக்குப் பின்னும் தோன்றப் போவது நிச்சயம் ஒரு புது விடியலே' என்ற ஒரு கருத்தை அழுத்தமாக நிலைநாட்டி விட்டுத் திரும்பி யுள்ளார் ஸ்ரீஸ்ரீ. மண்டபம் பகுதிக்குச் சென்று வந்த முதல் ஆன்மிக குரு என்ற பெருமையும் இவரையே சாரும்

**- நளினி சம்பத்குமார்**

# ஆயிரத்தில் ஒருவன்



'மாஃபா' பாண்டியராஜன்

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பு வரை ஜப்பானியப் பொருட்களுக்கு உலக அளவில் மார்க்கெட் கிடையாது. அதற்குக் காரணம் தரமற்ற தயாரிப்புகள் தான். ஆனால் அணுகுண்டு தாக்குதலுக்குப் பின்பு, உலகப் போர் முடிந்தவுடன் ஃபீனிக்ஸ் பறவை போல் உயரே எழுந்தது ஜப்பான். தங்களது கடின உழைப்பால் ஒரு புத்தம் புது நாட்டை உருவாக்கிட முயன்ற ஜப்பானியர்கள் வெற்றியும் பெற்றனர். அப்போதைய ஆட்சியாளர்களின் இலக்கு, உலகில் எல்லா நாட்டிலும் ஜப்பானியப் பொருட்கள் கிடைக்கவேண்டும் என்பதுதான். எனவே ஜப்பானில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் தரக் கட்டுப்பாடு நிர்ணயிக்கப் பட்டது. அதற்கு 'ஜுராங்' கட்டுப்பாடு என்று பெயர். எக்காரணம் கொண்டும் தர விஷயத்தில் சமரசம் கிடையாது என்று அறிவுறுத்தப்பட்டது. விளைவு அற்புதமாக இருந்தது. உள்நாட்டில் விற்பனை உயர்ந்ததுடன், தரம் காரணமாக, சோனியும், சான்யோவும், சுசுகியும் உலக நாடுகளைச் சென்றடைந்தன. இன்றும் ஜப்பானியப் பொருட்களுக்கு சந்தையில் தனிமதிப்பு இருக்கிறது.

போட்டிகள் நிறைந்த இன்றைய உலகத்தில் தரமே தாரக மந்திரம். தரம் என்பது உற்பத்தியை மட்டும் சார்ந்ததல்ல. ஊழியர்களின் விடுப்புக் கடிதங்கள் முதற்கொண்டு வர்த்தக யுக்திகள் வரை தரக்கட்டுப்பாட்டின் பங்களிப்பு இருக்கிறது. ஒரு தயாரிப்பின் தரம் என்பது அந்த நிறுவனத்தின் தலைவர், யுக்திகள் நிறைந்த திட்டமிடல், செய்முறை நிர்வாகம், மனிதவள மேம்பாடு, நுகர்வோர் விருப்பம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

எனவே தரம் நிர்ணயிப்பு, அதைக் கடைப்பிடிப்பவர்களுக்கு விருது, சான்றிதழ் வழங்குவது என்பது அவசியம் தேவையான ஒன்று. அந்த அளவில் இந்தியாவில் தரக்கட்டுப்பாட்டுக் கழகம் (BSI) நமது தயாரிப்புகளின் தரத்தைக் குறித்த சான்றிதழை அளிக்கிறது. ஆனால் இதை விட இன்னமும் மதிப்புமிக்க, கௌரவமான விருதுகள் வழங்கப்படுகின்றன. நாமெல்லாம் அடிக்கடி கேள்விப்படும் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் ஒரு துவக்க கட்டம்தான். ஒரு பொருளின் தயாரிப்பு முறை, தொடர்ச்சியாக கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுமானால் ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் கிடைத்துவிடும். ஆனால் மால்கம் பாத்ரிஜ் தேசியத் தர விருது வாங்குவதற்கு, சீரான தயாரிப்பு முறையை மட்டும் கடைப்பிடித்தால் போதாது. அப் பொருளுக்குச் சந்தையில் நல்ல மதிப்பும், விற்பனையும், நிறுவனத்துக்கு லாபமும் இருக்க வேண்டும். இதைவிட சிக்ஸ் சிக்மா என்ற விருது இருக்கிறது. தர விருதுகளுக்கு இது மிக உயர்ந்த விருது. இதை ஒரு நிறுவனம் வாங்குவது மிகவும் கஷ்டம்.

இப்படிப் பெறும் விருதால் நிறுவனத்தின் விற்பனை கூடும். எஸ்.இ.ஐ., சி.எம்.எம். என்ற விருதுகள் மென்பொருள் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுபவை. ஜப்பானிய டெமிங் விருதும் கௌரவமானது. இந்த விருதை டி.வி.எஸ். குழுமத்தின் இரு தொழிற்சாலைகள் வாங்கியிருக்கின்றன என்பது தமிழ்நாட்டுக்குப்




# தாரக மந்திரம்!

பெருமை. இதற்குக் காரணம் அதன் தலைமை நிர்வாக அதிகாரி வேணு சீனிவாசன்.

**செ**ன்னையில் பொறியியல் படித்து, அமெரிக்காவில் எம்.பி.ஏ., முடித்தவர் வேணு. படிக்கும்போதே, நிறுவனத்தின் வாகனப் பழுது பார்க்கும் கேரேஜில் ஒரு மெக்கானிக்காகப் பயிற்சியைத் துவக்கியவர். பாரம்பரியப் பெருமையைத் தூக்கியடிக்கும் அதே சமயம், தர்ம நெறிகளையும் விடாமல் கடைப்பிடிக்கும் ஒரு சில நிறுவனங்களில் டி.வி.எஸ்.ஸும் ஒன்று. அந்தக் காலத்தில் டி.வி.எஸ். பஸ்ஸைப் பார்த்து நேரத்தைச் சரிசெய்து கொள்வார்களாம். அதே போன்ற கடமையுணர்வு இன்றளவும் அவர்களது தயாரிப்புகளில் இருக்கிறது. உழைப்புக்குச் சற்றும் தயங்காதவர் வேணு. அமெரிக்காவில் படிக்கும்போது, ஓய்வு நேரத்தில் பைபிள் விற்கும் பணியையும் செய்திருக்கிறார். 1977ல் தனது தந்தை சீனிவாசனிடம் இருந்து பொறுப்பை எடுத்துக் கொண்டபோது SWOT (Strength, weakness, opportunity, threat) என்ற நிர்வாகத் தத்துவத்தை அறிமுகப்படுத்தி, தர மேம்

* வேணு சீனிவாசன்



பாட்டுக்கான வரைபடத்தைப் போட்டுக் கொடுத்தவர் வேணு. ''எங்கள் நிறுவனத்தில் தயாரிப்பு முறை என்பது நிறுவனத்தை விடப் புனிதமானது. சிறப்பாக ஒரு பொருள் இல்லையென்றால் அது டி.வி.எஸ். தயாரிப்பு இல்லை'' என்கிறார் வேணு.

டி.வி.எஸ். போன்ற பல நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு, ஆய்வகம் ஆகியவற்றில் நல்ல வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன. தொழில்நுட்பப் படிப்பு, அறிவியல் ஆகியவற்றில் பட்ட மேற்படிப்புடன், இந்தியத் தொழிற் கூட்டமைப்பு நடத்தும் தரக்கட்டுப்பாடு பயிற்சி சான்றிதழ் இருந்தால், கைநிறைய சம்பளத்துடன் வேலை தயார்.

**(வெளிச்சம் வீசும்)**

எழுத்தாக்கம்: **ஸ்ரீநி**

# பாண்டி 'S BLOG



**வீ**ழ்ந்து கிடக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் ஒபாமா. 1971 மற்றும் 1972ம் வருடங்களில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீண்டு எழுந்து வெற்றிநடை போட்டது போல, மீண்டும் நடக்கும் என்று நம்பிக்கையூட்டுகிறார்.

நிறுவனங்கள், சிக்கன நடவடிக்கையாக ஊழியர்களுக்கு டாடா காட்டும்போது, ''முதலில் அனுப்பப்படுபவர்கள் வெளிநாட்டுக்காரர்களாக இருக்க வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார். ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு இது கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மிகுந்த சர்ச்சையை உண்டாக்கியிருப்பது ''அமெரிக்கப் பொருட்களையே மக்கள் வாங்க வேண்டும்'' என்ற அறிவிப்பு. இது தொடர்பாகச் சட்டமும் வரப்போகிறதாம்.

இதனால் ஏற்படும் சாதகங்களை விட, பாதகங்களே அதிகம் என்று எச்சரிக்கிறார்கள், அமெரிக்க தொழில் - வர்த்தகத்துறையினர். ''இப்படிச் செய்தால், மற்ற நாடுகளில் இருப்பவர்கள் அமெரிக்கப் பொருட்களை வாங்க மாட்டார்கள். உலகில் 95 சதவிகித நுகர்வோர் அமெரிக்காவுக்கு வெளியே அல்லவா இருக்கிறார்கள்? எங்கள் ஏற்றுமதி குறைந்து நிறுவனங்கள் மூடப்படும் எதிர்மறை நிலையே வரும்'' என்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி, எதிர்பார்த்ததை விட சுமார் நான்கு சதவிகிதம் குறைந்துவிட்டது. திவாலாக இருந்த வங்கி, காப்பீடு மற்றும் ஆட்டோமொபைல் நிறுவனங்களுக்கு சுமார் ஒரு லட்சம் கோடி டாலர் பணத்தைக் கொடுத்து, தூக்கி நிறுத்த உதவியிருக்கிறது அரசு. அரசாங்கம் இந்த அளவுக்கு உதவி செய்யும் கட்டத்தில், கொஞ்சமும் பொறுப்பற்று சில சி.இ.ஓ.க்களும் தொழிலதிபர்களும் நடந்து கொள்வதாகக் கடுப்பாகியிருக்கிறார் ஒபாமா. சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை அதிபர், டெட்ராய்ட்டிலிருந்து தனி விமானத்தில் வாஷிங்டனுக்கு வந்திருக்கிறார். சிட்டி வங்கி சி.இ.ஓ. புதிய ஜெட் விமானம் வாங்க முயல்கிறார்.

''பொறுப்பின்மையின் உச்சகட்டம், மக்கள் வரிப்பணத்தில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்'' என்று வெடித்திருக்கிறார் ஒபாமா!



''அன்னிக்கும் இன்னிக்கும் உன் பெண்டாட்டி கொஞ்சம் கூட மாறவேயில்லையா, எப்படிடா?''

''பெண் பார்த்த அன்னிக்கு என்னைப் பார்த்து 'பாட' ஆரம்பிச்சவதான், இன்னும் நிறுத்தவேயில்லே!''

– வெ. சீதாராமன்

# மாறாத மனைவி!





''இந்த வாரம் பூரா நீங்க விவாதம் பண்ணாம மௌனம் சாதிக்கணுமாம், உங்க ராசிபலன்ல போட்டிருக்கு!''

''நான் எப்ப விவாதம் பண்ணியிருக்கேன், இப்ப ஸ்பெஷலா மௌனம் சாதிக்க?''

– வெ. சீதாராமன்

''தலைவர் எப்பவும் கைது பயத்துலயே இருப்பார்னு தோணுது.''

''எப்படி....?''

''மிருகக் காட்சிச் சாலையில ஒரு ஊழியர் உங்களுக்குப் பிடித்த விலங்கு எதுன்னு கேட்டதுக்கு, 'கைவிலங்கு தவிர எல்லா விலங்கும் பிடிக்கும்!'னு சொன்னாரே!''

– சீர்காழி வி. ரேவதி



# கல்பாக்கம் : கேள்விக்குறியாகும்

**அணு உலை, கதிரியக்கம், அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கலக்கத்தோடு கல்பாக்கம் அணுசக்தி மற்றும் அணு நிலையத்தின் நிர்வாகிகளைத் தொடர்புகொண்டபோது ஒரு குழுவாக விளக்கமளித்தார்கள்.**

**இதோ அதன் தொகுப்பு:**

**அணு உலைகள் செயல்பட கல்பாக்கத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்?**

★ அணு உலைகள் செயல்படும் இடத்தைச் சுற்றி 1.6 கிலோ மீட்டர் தூரம் மக்கள் வசிக்கும் பகுதியாக இருக்கக் கூடாது. இந்த எல்லைக்குள், அணு உலைகளை இயக்குபவர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு.

★ 1.6லிருந்து 5 கிலோமீட்டர் வரை உள்ள பகுதியில் ஏற்கெனவே வசிப்பவர்கள் மட்டுமே வசிக்க அனுமதிக்கப்படுவார்கள். (அவர்களின் குடும்பம் விரிவடைந்தால் விலக்கு உண்டு.) புதிதாக வந்து குடியேற அனுமதி இல்லை. அணு உலைகளின் கன்டென்ஸர்களைக் குளிர்விக்க நிறைய நீர் தேவை என்பதால், கடலுக்கு அருகே இருத்தல்தான் வசதி. எனவே, கல்பாக்கம் தேர்வு செய்யப்பட்டது.

**கதிரியக்கம் குறித்த பயம் உள்ளதே?**

★ கதிரியக்கம் என்பது பீதியடையக் கூடிய ஒன்றல்ல. மின்சாரத்தைப் போல இதைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தும்போது உண்டாகும் நன்மைகள் அதிகம்!

★ கதிர்வீச்சு என்பது அணு உலைகளில் மட்டுமில்லை; காற்றில் கலந்துள்ள கதிர்




வீச்சுகளில் இயற்கையானவை 87 சதவிகிதம்! மண்ணில், கிரானைட்டில், செங்கல்லில் என்று பலவற்றிலும் கதிரியக்கங்கள் உண்டு. மனிதர்களால் உண்டாகக் கூடிய கதிரியக்க வகைகள் சுமார் 13 சதவிகிதம் மட்டுமே. இந்த 13 சதவிகிதத்தில் 12 சதவிகிதம் மருத்துவ சிகிச்சையாலும், 0.1 சதவிகிதத்துக்கும் குறைவான அளவில் மட்டுமே அணுவினால் உண்டாகுபவை!

★ இயற்கையான மண்ணிலேயே 2.5 சதவிகிதம் என்கிற அளவிலும் சாதாரண எக்ஸ்ரேவில் 0.2 சதவிகித அளவிலும் கதிரியக்கம் உள்ளது. அணு உலையினால் அனுமதிக்கப்பட்ட கதிரியக்கம் என்பது ஊழியர்களுக்கு 20 சதவிகிதம்; பொது மக்களுக்கு ஒன்று!

★ கல்பாக்கத்தில் அணு உலைகளைத் தொடங்குவதற்கு முன்பாகச் சுற்றுப்புற ஆய்வுச்சாலை (environmental survey laboratory) ஒன்று தொடங்கப்பட்டு அது தொடர்ந்து இயங்கி வருகிறது.

★ 1983 மற்றும் 1985ம் ஆண்டுகளில் யுரேனியத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காவ அணு உலைகள் தொடங்கப்பட்டன. 2011ல் 500 மெகாவாட் சக்தி கொண்ட அதிவேக ஈனுலை (Fast Breeder Reactor) இங்கு செயல்படத் தொடங்கும். 2020ல் 500 மெகாவாட் கொண்ட இரண்டு அணு உலைகள் இயங்கச் செய்யும் திட்டமும் உள்ளது.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்னென்ன?**

★ அணு உலைகளிலிருந்து கதிரியக்கம்



★ டேனியல் செல்லப்பா



★ டாக்டர் விஜயா

வெளியே பரவி மக்களைப் பாதிக்கும் வாய்ப்பு அறவே இல்லை. காரணம், இங்கு நிலவும் பல அடுக்குத் தடுப்பு முறைகள் (multiple barriers).

★ யுரேனிய அணுக்களிலிருந்து வெளிப்படும் ஆல்ஃபா கதிர்கள் வெளியே வர வாய்ப்பு இல்லை. இவற்றை ஒரு சாதாரண பேப்பர்கூடத் தடுத்துவிடும்; பீட்டா கதிர்களை ப்ளாஸ்டிக் தடுத்துவிடும்; காமா கதிர்கள் கான்க்ரீட்டைக் கூட ஓரளவு ஊடுருவக் கூடிய தன்மை கொண்டவை. இதை ஈயம் தடுக்கவல்லது.

**"அணு உலைகளிலிருந்து கதிரியக்கம் வெளியே பரவி மக்களைப் பாதிக்கும் வாய்ப்பு அறவே இல்லை"**

★ அணு உலையை இயக்க கட்டுப்பாட்டு அறையும், அதன் இயக்கத்தை நிறுத்த வசதியாக கூடுதல் கட்டுப்பாட்டு அறைகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. அணு உலைக்கு இரட்டைப் பாதுகாப்புச் சுவர்கள் உள்ளன. அணு உலைக் கழிவுகளிலிருந்து வெளியாகும் கதிரியக்கப் பொருட்கள் சிறப்பு வடிகட்டிகளால் வடிகட்டப்படுவதால், இங்கேயே கழிவுகள் 99.99 சதவிகிதம் சுத்தமடைகின்றன. பிறகு தாமதிப்பு, அழுகுதல் (delay, decay) போன்றவற்றால் முழுவதுமாகவே கழிவுகளின் கதிரியக்கப் பொருட்கள் வெளியேறாமல் தடுக்கப்படுகின்றன.

★ 2006ல் அணு உலைக்கு ஐந்து கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள மக்களை ஆய்வு செய்த ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோய் பாதிப்பின் வாய்ப்பு, மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ளவர்களுக்கு உள்ள அளவே இருக்கிறது என்கிறது.

★ 2004 சுனாமிக்குப் பிறகு காரைக்கால் கடற்கரைப் பகுதியில் கதிரியக்கம் அதிகமாகியிருப்பதாகவும், மீனவக் குப்பங்களில் வசிக்கும் மக்களுக்கு கருச்சிதைவு, பிறவிக்குருடு, புற்றுநோய், இறந்தே பிறக்கும் குழந்தைகள்... என ஆபத்துகள் அதிகமாகி உள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. கல்பாக்க அணு உலைகளின் கழிவுப் பொருட்களைக் கடலில் கலப்பதால் இது ஏற்பட்டிருக்கலாம்தானே? என்பது உங்கள் அச்சம். இதற்கும் பதில் உண்டு.

★ டெல்லி துரை



★ ராஜகோபால்



சில வருடங்களுக்கு முன் தமிழகத்தைத் தாக்கிய சுனாமியால் காரைக்கால் பகுதியில் மிக அதிக அளவில் வந்து சேர்ந்த மோனொசைட் காரணமாகத் தான் மேற்படி நிலை என்று நாளிதழ்களில் செய்திகள் வெளியாகின. குறைவான அளவு கதிரியக்கத்தில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பு இல்லை.

★ அணு உலைகளைப் பற்றிய கவலைகள் மிகவும் பெரிதுபடுத்தப் படுகின்றன. போபால் விஷவாயு விபத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். அது அணுசக்தி தொடர்பானதா? இல்லை. அங்கு வெளியான மீதைல் ஐசோசயனேட் வாயுதான் காரணம். மூக்கில் ஈரத் துணியை வைத்துக் கொள்வதன் மூலம், அதன் நஞ்சை வடிகட்டி ஆபத்திலிருந்து தப்பியிருக்க முடியும். அது தெரியாத அறியாமையினால் தான் அவ்வளவு பெரிய ஆபத்து! கல்பாக்கம் அணு உலைகளைச் சுற்றி உள்ளவர்களுக்கு 'ஏதேனும் ஆபத்து நேர்த்தால், என்ன செய்ய வேண்டும்' என்பதும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அணு உலைகளைச் சுற்றி 16 கிலோ மீட்டர் பரப்பில் உள்ளதை 'அவசரகாலத் திட்டப் பகுதி' என்கிறோம். இது பல வருடங்களாக சிக்கலின்றி இயங்கி வருகிறது.



★ ரமணா



★ டாக்டர் கல்லானை

## நமது பயத்தின் பின்னணி

★ அணுசக்தியைப் பற்றி அணு ஆயுதங்கள் என்கிற கோணத்தில்தான் அறிமுகமாகி இருக்கிறது! 1945ல் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின்மீது விழுந்த அணுகுண்டுகள் தான் பரவலாக அறியப்பட்டவை.

★ அதற்குப் பல வருடங்களுக்குப் பிறகு 1951ல்தான் அணுக்களின் மூலம் மின்சாரத்தைப் பெறலாம் என்பது நமக்குத் தெரிய வந்தது. அதற்குள் அணு ஆராய்ச்சி நிலையங்களின் முக்கிய நோக்கு பேரழிவு ஆயுதங்கள்தான் என்ற எண்ணம் நிலைபெற்று விட்டது. இதனால் அணுமின் சக்தி குறித்தும் கூடுதல் அச்சம்!

★அணுக் கதிரியக்கத்தின் விளைவுகள்

## ஒரே காமினி...

சென்னையிலிருந்து எண்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்பாக்கத்தில், சென்னை அணுசக்தி நிலையம் மற்றும் அணுசக்தித் துறையின் கீழ் இயங்கும் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை இயங்குகின்றன. பலவித அணு ஆராய்ச்சிகள் மேற்படி மையத்தில் நடைபெற்றாலும் அதன் அதிவேக ஈனுலைதான் (fast breeder test reaction) மிகவும் பிரபலம். இங்குள்ள காமினி என்ற பெயர் கொண்ட அணு உலை, தோரியம் - 234லிருந்து கிடைக்கும் யுரேனியம் - 233 வகை எரிபொருளைப் பயன்படுத்தும் உலகின் ஒரே அணு உலையாகும்.





✱ சின்ஹா



✱ சுவாமிநாதன்

**கதிரியக்கத்தைப் பொறுத்தவரை பாதுகாப்பான அளவு (safe dose) என்பதே கிடையாது**



✱ ஸ்ரீநிவாசன்

தொடர்பான ஐ.நா. அறிவியல் குழுவின் அறிக்கை ஒன்று, 'பூச்சி மருந்தில் அனுமதிக்கப்பட்ட அளவு (permissible level) உண்டு. ஆனால் கதிரியக்கத்தைப் பொறுத்தவரை பாதுகாப்பான அளவு (safe dose) என்பதே கிடையாது' என்கிறது. அப்படியானால், வெளிவரும் ஒவ்வொரு கதிரும் அபாயகரமானதல்லவா!

★மற்றொருபுறம் சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கப் பொது சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில் எக்ஸ்ரே, நியூட்ரான், காமா கதிர்கள் ஆகியவை கார்சினோஜின்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. (கார்சினோஜின் - புற்றுநோயை உண்டாக்கும் காரணி.)

★ மேன்மேலும் அணு உலைகள் கல்பாக்கத்திலேயே அமைவது ஆராய்ச்சிகளுக்கும் செயல்பாடுகளுக்கும் ஏற்றதாக இருக்கலாம். ஆனால், இயற்கைச் சீற்றங்கள் அல்லது போரில் எதிரியின் தாக்குதல் நேர்ந்தால் அங்கு ஏற்படக்கூடிய விபரீதம்?

★ கனடாவில் அணு உலைகளில் பணிசெய்பவர்கள் உள்வாங்கும் கதிர் வீச்சின் அளவு வருடத்துக்கு இருமுறை எல்லோர் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. அதேபோன்று வெளிப்படையாக இங்கும் இயங்கலாமே.

★அணு உலைகளின் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் கதிரியக்கப் பாதிப்புகள் குறித்து ஓர் ஆழ்ந்த ஆய்வு செய்யப்படலாமே(?!). இதற்கான குழுவில் அரசு சாராத, நீண்ட அனுபவம் கொண்ட விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்களும் இடம் பெற்றால் ஓர் வெளிப்படைத் தன்மை கிடைக்குமே! செய்வார்களா?

## நமது சந்தேகங்களுக்குப் பதில் அளித்த நிபுணர்கள் குழு :

✱ ஜி.ஸ்ரீநிவாசன் - உலை செயல்பாடு, பராமரிப்புக் குழு இயக்குநர்...
✱ ஜே.டேனியல் செல்லப்பா - ஊடக மேலாண்மை தொழில்நுட்பக் குழு தலைவர்...
✱ டெல்லி துரை - சென்னை அணு சக்தி திட்ட பயிற்சி மேலாளர் ✱ பி. சுவாமிநாதன் - பாதுகாப்புக் குழுத் தலைவர் ✱ டாக்டர் விஜயா - மருத்துவ மேலதிகாரி
✱ டாக்டர் பி.கே.சின்ஹா - கழிவுகள் மேலாண்மைப் பிரிவு தலைவர்
✱ ஜி.வி.ரமணா - பொதுச் சேவைகள் அமைப்பின் முதன்மை நிர்வாக அதிகாரி
✱டாக்டர் வி.கண்ணன் - சுற்றுப்புற சோதனைச் சாலை அதிகாரி
✱ வி.ராஜகோபால் - கதிரியக்கப் பாதுகாப்புப் பிரிவு விஞ்ஞானி

**ரிஷபன்**



# கதை எழுதப் போறேன்!

'ஏற்காடு அய்யா சாமி' என்கிற பெயரில் தான் முதலில் துணுக்குகள் எழுத ஆரம்பித்தேன். ஏற்காடு, தாத்தாவின் சொந்த ஊர். அய்யாசாமிதான் தாத்தாவின் பெயர். 'பொழுது காட்டும் கருவி பழுது பார்க்கும் இடம்' - கடிகார ரிப்பேர் ஷாப்பில் பார்த்த வரியை ஏ.அ. பெயரில் எழுதிப் போட, பிரசுர இதழும் சன்மானமும் வந்தன.

அப்புறம் ரெண்டு வரிக் கவிதைகள், தபால் கார்டு கதை, நாலு பக்கக் கதை என்று வளர்ந்து இப்போது வலைத்தளம் வரை வந்தாச்சு.

என்ஜினீயரிங் முடித்த அண்ணன் விட்டுப் போன கம்ப்யூட்டரில் நேரடியாய் கதை தட்டும் அளவு வளர்ச்சி. எழுதி அடித்துத் திருத்தி படி எடுத்த காலம் மலையேறி, கணினி உதவியில் என்ன வேண்டுமானாலும் திருத்தி, இடைச் சொருகி, ஒரே நேரத்தில் ரெண்டு தீம் வந்தால்கூட அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம் என்று எழுதும் 'இஷ்டாவதான'த் திறமை... முதல் (மகாபாரத) எழுத்தாளரின் (கணேஷ்!) வாகன (மௌஸ்) புண்ணியத்தில். கூடவே திமிரும், சோம்பேறித்தனமும்.

'என்ன ரொம்ப நாளாச்சு... உன் கதையையே காணோமே...' என்று தொலைபேசி அழைப்புகளும், குறுஞ்செய்திகளும் வர ஆரம்பித்தன.

வயிற்றெரிச்சலின் உச்சம் எழுத்தாள நண்பனின் ஃபோன்.

''இந்த வார ஜிகினா பார்த்தியா... என்னோட கதை வந்திருக்கு.''

நம்ம கதை வரும் சந்தோஷத்தைவிட, அடுத்தவன் கதை பிரசுரம் பார்த்து வரும் போட்டி உணர்வுதான் நிஜ ஃபீலிங்! எனக்குள் இருந்த விட்டில் ஜான் முழுமாகி எழுந்தான்.

'இப்ப பார் என் திறமையை.' கணினியை உயிர்ப்பித்து எதிரில் அமர்ந்தேன். முதல் வரி... அல்லது முதல் வார்த்தை வந்துவிட்டால் போதும். கதை தானாகவே வளர்ந்து விடும். கை பரபரத்தது. ஐம்புலன்களும் குவிந்து தியான நிலை. 'வா... வா...' ஜபம் ஓடிய அதே நேரம். பவர் கட்! அடக் கடவுளே!

அரை மணி... ஒரு மணி... நேரம்தான் ஓடியது. ஒன்றரை மணி நேரம். ஊஹூம்... வரும் வழியாய்த் தெரியவில்லை. குறுக்




"நேசம், கண்ணீர், காமம்... இந்த மூன்று உணர்வுகளையும் சமமாகக் கலந்து வாழ்வின் அச்சில் இடுகிறபோது அந்த வாழ்வு சுகப்படும். இந்த மூன்றும் எப்போது சாத்தியமெனில் 'அன்பு' செய்கிறபோதுதான். உறவுகளுக்கிடையே நெகிழ்ச்சியையும், உண்மைத் தன்மையும் உழுது விதைக்கிறபோது கெட்டிப்பட்டு எட்டி நிற்கும் உறவுகள் கிட்டவரும். வாழ்தலின் அடையாளமே அன்புதான். எனவே 'அன்பு' செய்தலை வலியுறுத்தி ஏப்ரல் 14ந் தேதி 'அன்புக்காக ஓர் ஓட்டம்' என்ற விழிப்புணர்வு ஓட்டத்தை நடத்துகிறோம்'' என்கிறார் டாக்டர் காமராஜ்.

இந்த அன்பு ஓட்டம், ஏப்ரல் 14ந் தேதி காலை 8 மணிக்கு அண்ணா சதுக்கத்தில் துவங்கி காந்தி சிலை வரை தொடரவிருக்கிறது. சென்னை வடபழநி 'ஆகாஷ் பெர்ட்டிலிட்டி சென்டர் அண்ட் ஹாஸ்பிட்டல்ஸ்' ஏற்பாடு செய்திருக்கும் இதில், ஏறக்குறைய பத்தாயிரம் பேர் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். இதில் அரவாணிகளும் அடக்கமாம். இதை சென்னை மேயர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

கும் நெடுக்கும் நடந்து கால் ரேகை தேய்ந்ததுதான் மிச்சம்.

''என்னவாம் அவனுக்கு... குட்டி போட்ட பூனை மாதிரி அலையறான்'' அம்மாவின் கரிசனம் பிளஸ் எரிச்சலூட்டும் விமர்சனம் கேட்டது. மூன்று மணி நேரமாய் கட்டிக் காத்த பொறுமை பறிபோனது. வள்ளென்று விழுந்தேன்.

''கொஞ்சமாச்சும் அக்கறை இருக்கா... அவனவன் நிம்மதியா கதை எழுதறான். உக்கார்ந்து எழுத முடியாம தவிக்கறதைப் பார்த்து ஆறுதல் சொல்லாட்டியும் தொலையுது. இங்கே நம்ம வீட்டுல ஆளுக்காளு குத்திக் காட்டத்தான் தெரியுது.''



அத்தனை பேர் முகமும் சுண்டிப் போனது. சைகை செய்து ஆளுக்கொரு பக்கம் நகர முற்பட்ட அதே நிமிடம், மின்விசிறி வேகமாய் சுழலத் தொடங்கியது. இறுக்கம் விலக எனக்குள்ளும் உறுத்தல். ஏன் இப்படி கத்தினேன்?

''ஸாரி.''

மனைவியின் தோளைப் பற்றித் திருப்ப கை நீட்டியபோது மகன் கேட்டான்.


''ஏம்பா... கரண்ட் இல்லே... சரி. கம்ப்யூட்டர் யூஸ் பண்ண முடியலே... உங்க கை இருக்கே... மாடியில போய் இந்த மூணு மணி நேரம் நிம்மதியா எழுதியிருக்கலாமே... எழுதணும்னு தீவிரமா நினைச்சிருந்தா...''

நீட்டிய கை அப்படியே நின்று விட்டது அதிர்ச்சியில்!

இந்த இதழில் இடம்பெற்றுள்ள காதல் கவிதைகளை எழுதியவர்:
**எம்.ஜி.கன்னியப்பன்**

## நீங்கள் கேட்டவை - தராசு

# அழகிரி மிரட்சித் தலைவராமே?





● அ. அஹமது இர்ஷாத், அதிராம்பட்டினம்

? வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசியக் கட்சியுடன் மட்டும்தான் கூட்டணி என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியிருக்கிறாரே?

! படிப்படியாக இறங்கி வருகிறார். ஆரம்பத்தில்: 'மக்களுடன்தான் கூட்டணி.' அடுத்து: 'எழுதி வாங்கிக் கொண்டுதான் கூட்டணி'; இன்று: 'தேசியக் கட்சியுடன்தான் கூட்டணி'. நாளை...?

● ஆர். ராம்சுப்ரமணி, திருவாரூர்

? சமீபத்தில் தராசுவை அதிர்ச்சியடைய வைத்த நிகழ்வு...?

! பாடியாலா (பஞ்சாப்) அரசு மருத்துவமனையில் கணப்புக் கருவியில் வைக்கப்பட்ட ஐந்து பச்சிளம் குழந்தைகள் தீ விபத்தில் கருகிப் போன கொடுமை!

● இறங்கும் படிகள்!

சுகாதாரத்துறை அமைச்சர் திக்ஷன் சூத் தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருப்பது வரவேற்கத் தக்கது. மருத்துவமனைகளின் அலட்சியப் போக்குக்கு முடிவு கட்ட வேண்டியதை உணர்த்தும் சம்பவம்.

● இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி

? ஜனாதிபதிக்குரிய செலவுகளை அரசே ஏற்கும் போது, ஒன்றரை லட்சம் ரூபாய் சம்பளம் எதற்கு?

! தங்கக் கூண்டென்றாலும் சிறையிருக்க வேண்டுமல்லவா! எல்லா வசதிகளும் செய்யப்பட்ட வாழ்க்கை என்றாலும் மிகப் பெரிய பொறுப்பைச் சுமக்க வேண்டுமல்லவா? அதற்கான ஊதியம்தான்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? காங்கிரஸ் கட்சியின் தயவு இல்லாமல் ஈழத்தமிழர் பிரச்னையை ஒரு நாளும் தீர்க்க முடியாது என்று சவால்

❏ ரூ.100 பரிசு பெறுபவர்: எஸ். பக்கிரிசாமி, திருவாரூர்.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்: திருச்செந்தூர் முருகன், விருதுநகர்.

**விடுகிறாரே பீட்டர் அல்போன்ஸ்?**


! ஈழத் தமிழர் பிரச்னை என்பது பிரபாகரன், இலங்கை அரசு, ஈழத் தமிழர் என்ற மும்முனைப் போராட்டம். வேறு யாராக இருந்தாலும் யோசனைகள் கூறலாம்; சமாதானத்துக்கு முயற்சி செய்யலாம். தீர்வு, மும்முனைகளில் உள்ளோர் கையில்தான் இருக்கிறது.



சப்பை சவால்!



தங்கக் கூண்டு!



ஆபத்து ஐடியா!

● **எஸ். பக்கிரிசாமி, திருவாரூர்** ❑

**? சினிமாவில் புகை பிடிக்கும் காட்சிக்குத் தடை விதித்து மத்திய அரசு வெளியிட்ட உத்தரவை, டெல்லி உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது பற்றி?**

! சட்டத்தை ஆராய்ந்து அதன் அடிப்படையில் அளிக்கப்பட்ட தீர்ப்பு என்றாலும் சமுதாயத்தின் நலனை ஆராய்கிறபோது, அதற்குச் சாதகமில்லாத தீர்ப்புதான். நம் நாட்டில் உள்ள சினிமா மோகம், வேறெந்த நாட்டிலும் உள்ளதைக் காட்டிலும் அதிகமானது; அழுத்தமானது. புகைப்போர் எண்ணிக்கையைக் கூட்டும். எனவே படத் தயாரிப்பாளர்களே தங்களுக்குள் கட்டுப்பாடு விதித்துக் கொள்வது நல்லது.

● **எல்.எம்.அபிதா, திருவண்ணாமலை**

**? ''ஆஸ்கார் விருது என்பது இறுதியான அங்கீகாரம் ஆகாது'' என்ற அமிதாப் பச்சனின் கருத்து சரியா?**

! இறுதியான அங்கீகாரம் இல்லாவிட்டாலும் உலகம் ஏற்கும் பெருமிதத்துக்குரிய ஓர் அங்கீகாரமாகும். இறுதியான அங்கீகாரம் என்பது ஒவ்வொரு ரசிகனின் மனநிலையையும் சார்ந்துதான் இருக்கிறது.

● **கே.எஸ். கோவர்த்தனன், சென்னை-42**

**? நேர்மையும் திறமையும் மிக்க மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி உமாசங்கர், கடந்த ஆறு மாதங்களில் நான்கு முறை மாற்றப்பட்டுள்ளது குறித்து தராசு கருத்து என்ன?**

! அதான் நீங்களே சொல்லிட்டீங்களே நேர்மையான அதிகாரின்னு; போதாக்குறைக்கு, சுமங்கலி கேபிள் விஷனை அரசுடைமையாக்கணும்னு ஐடியா வேற கொடுத்திருக்காரு... மாலையா போடுவாங்க அவருக்கு?

● **ஜி. மாரியப்பன், சின்னமனூர்**

**? இலங்கையில் தமிழர்களுக்கு சுயாட்சி கோருவதே நியாயமானது என்கிறாரே ஜெயலலிதா?**

! அடிப்படையில் சரியான சிந்தனை. ஆனால், 'சுயாட்சி' என்ற சொல்லுக்குள், 'எத்தகைய சுயாட்சி?' என்ற கேள்வி அடங்கியிருக்கிறது. அதற்குப் பக்கம் பக்கமாக விடையெழுதி, ஒப்பந்தமாக மாறி, கையெழுத்தாக வேண்டும். இந்த விஷயத்தில்தான் நமது மத்திய அரசும் முனைப்பு காட்ட வேண்டும்.

● **ச. நாகரத்தினம், திருப்பூர்**

**? கேட்டீரா சேதி? ஒபாமா பதவி ஏற்பு விழாவுக்கு 833 கோடி செலவாமே?**

! அதில் பெரும் பகுதி, லட்சக்கணக்கில் குழுமிய மக்களைக் கவனிக்கவும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குமே என்கிறபோது, ஆடம்பரத்தை விட எச்சரிக்கை உணர்வு அதிகமாக இருந்துள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

● வி.பி.கே. சரவணன், சின்னமனூர்

? திரை இசைக்குக் கிடைக்கும் வரவேற்பு கர்நாடக இசைக்கு இல்லையே, ஏன்?

! உருளை சிப்ஸுக்கு இருக்கிற வரவேற்பு சுட்ட அப்பளத்துக்கு இருக்கா? ருசி பழகணும். அப்போதான் பகட்டில்லாத பண்டத்தோட நயமும் மணமும் சேர்க்கையும் அதுக்குப் பின்னால இருக்கிற உழைப்பும், அதன் பழைமையின் மகிமையும் புரியும்; அனுபவிக்க முடியும்.

● வி.எம். செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? தென் மண்டல அமைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்ட மு.க. அழகிரி 'மிரட்சித் தலைவரா'மே?

! புரட்சியைப் புரட்டிப் போட்டு மிரட்சியாக்கலாம். ஆனால் சிந்தனையில் வறட்சி தெரிகிறதே! அஞ்சாநெஞ்சரை மிரளச் செய்யலாமா!

● பி. இராஜேந்திரன், வேலாயர் அணைக்கட்டு.

? இலங்கையில் போர் நிறுத்தம் கோரி தீக்குளித்து உயிர்நீத்த முத்துக்குமார் குடும்பத்துக்கு, அரசு வழங்க முன்வந்த இரண்டு லட்சம் ரூபாயை வாங்க, அவரது சகோதரி மறுத்துவிட்டாரே?

! மறுத்ததில் குடும்பத்தினரைப் போலவே நமக்கும் பெருமிதம்தான். ஆனால் தீக்குளித்ததில் மிகுந்த வருத்தம். பிரச்னையை எவ்வகையில் தணித்தது? இத்தகைய உணர்ச்சி மிகுதியைத் தூண்டும் அரசியல்வாதிகள், குற்றஉணர்வு இன்றி, உயிர் துறந்தவர்களை ஹீரோவாக்குவது மேலும் கொடுமை!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? தற்பொழுது தமிழ்நாட்டில் சிறந்த ஹீரோ, ஹீரோயின் யார்...?

! ஹீரோ மகேஷ் பூபதி. ஹீரோயின்... தேடிக்கிட்டேயிருக்கேன்!

● அ.ச.நாராயணன், பாளையங்கோட்டை

? தமிழ் ஈழம் கேட்பது சரியா? தவறா? பொட்டில் அடித்தாற்போல் கூறுங்கள்?

! தவறு! நாட்டைத் துண்டாட வேண்டும் என்று கேட்பதால் தார்மிக ரீதியில் தவறு. பிரித்தால், நடைமுறையில் ஏக சிக்கல்கள் தொடரும் என்பதால் யதார்த்த ரீதியிலும் தவறு.



★ பட்டப் பொருத்தம்!

● திருச்செந்தூர் முருகன், விருதுநகர் ★

? இலங்கைத் தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், மு.க. அழகிரி தமது பிறந்த நாளைக் கோலாகலமாகக் கொண்டாடியிருப்பது பற்றி...?

! சும்மாவா பட்டம் சூட்டினாங்க அஞ்சா நெஞ்சர்னு?!



★ கரன்ட் கதாநாயகர்

● பி.ஆர். மஹேந்திரநாத் ராவ், புதுடெல்லி

? கும்பகோணத்தில் தங்களைக் கவர்ந்த இடம்?

! சாரங்கபாணி கோயிலின் ஆராவமுதன் சன்னிதி. குடைவரை அற்புதத்தில் பெருமாள் ஒயில் துயில் இருந்தபடி, ''என்ன சேதி?'' என்று நம்மை விசாரிக்கிறபோது அப்படியே புளகாங்கிதம் ஆகிவிடுவோம். ஆராவமுதனின் மாறாத நினைவுகளைச் சுமந்துதான் திரும்ப முடியும். ●



★ மறுத்த உதவி!

# கிண்டல் காலனி

# ஈழத் தமிழனுக்கு இந்தா கவிதை!

(கலைஞர் புதிய தெம்புடன் அவரது அறையில் அமர்ந்து பேரனுடன் விளையாடிக் கொண்டிருக்க, ஸ்டாலின் உள்ளே நுழைகிறார்.)

**ஸ்டாலின்:** அப்பா ரொம்ப தலைபோற முக்கியமான விஷயமா வந்திருக்கேன்.

**கலைஞர்:** இலங்கைத் தமிழர் பிரச்னையா?

**ஸ்டாலின்:** ச்சீச்சீ... அதைவிட ரொம்ப முக்கியம்.

**கலைஞர்:** ஓ... பாராளுமன்றத் தேர்தல் கூட்டணி பற்றியா?

**ஸ்டாலின்:** அதுவும் இல்லை... சன் டீ.வி. ரஜினியை வெச்சு 'எந்திரன்' படம் பண்றாங்கல்ல... தினம் அதை பேப்பர்ல படிச்சுட்டு, உதயநிதி ரொம்ப அப்செட்டா இருக்கான். உடனே ஜாக்கிசானையும் - மல்லிகா ஷெராவத்தையும் வெச்சு மூவாயிரம் கோடியில் படம் எடுக்கணும்னு அடம்பிடிக்கிறான். நீங்கதான் ஜாக்கிகிட்ட கால்ஷீட் வாங்கிக் கொடுக்கணும்.

**கலைஞர்:** (சற்று யோசித்து விட்டு) யாரங்கே...? (என்றதும் மத்திய அமைச்சர் ராஜாவும், மாநில அமைச்சர் துரைமுருகனும் 'டக்'கென்று வந்து நிற்கின்றனர்). உடனே ஏற்பாடு செய்யுங்கள் (என்றதும் அவர்கள் பணிந்து வெளியேறுகின்றனர். அப்போது மு.க.அழகிரி உள்ளே வருகிறார்) வாப்பா... அழகிரி...

**அழகிரி:** வருஷா வருஷம் 'சங்கமம்'னு விழா நடக்குதில்ல... அடுத்த வருஷம் எம் பொண்ணு கயல்விழி நடத்த ஆசைப்படுது... வாங்கிக் கொடுங்க.

**கலைஞர்:** அதை கனிமொழிக்குக் கொடுத்தாச்சே. வேணும்னா 'சிங்கமம்'னு புதுசா ஆரம்பிக்க தமிழ் கைத்தாங்கலா எந்திரிச்ச நாள்னு கொண்டாடச் சொல்லுங்க.

**அழகிரி:** நான் பார்த்துக்கறேன்... குத்தாட்டத்தையும்... வீச்சருவா... வேல் கம்பு ஆட்டத்தையும் கலந்துகட்டி 'ரண்டக்க ரண்டக்க'ன்னு தூள் பண்ணிடறேன்.

(அப்போது தயாநிதி மாறனும்- கலாநிதி மாறனும் உள்ளே வந்தபடி கோரஸாக...)

மாமாக்களுக்கும், தாத்தாவுக்கும் அடித்தாலும், உதைத்தாலும் கொன்றே போட்



டாலும், ஆயுள் காலம் முழுதும் தி.மு.க.வின் அடிமட்டத் தொண்டனாக உழைக்கும் உண்மை ஏழை விசுவாசிகளின் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

**கலைஞர்:** *(மனத்துக்குள்)* அச்சச்சோ ரொம்பப் புகழ்றாங்களே எதுக்குன்னு தெரியலையே... (சத்தமாக) என்ன விஷயம்..?

**தயாநிதி:** உலக கிரிக்கெட் போட்டியை நேரடியா ஒளிபரப்ப உரிமம் வாங்கிக் கொடுக்கணும்.

**கலாநிதி:** குடைச்சல் கொடுத்துட்டு இருக்கிற ஜெயா, ராஜ், விஜய் டீவியை எங்களுக்கு விற்கச் சொல்லணும்.

**அழகிரி:** அப்பா... தென்மண்டல அமைப்பாளர் பொறுப்பு மட்டும்தானா?

**கலைஞர்:** ஏன்... இதோ பாராளுமன்றத் தேர்தல் வருதுல்ல... பூந்து வெளையாடு நீதான் தேர்தல் பணிக்குழு தலைவர்.

**ஸ்டாலின்:** அப்ப... எனக்கு?

**கலைஞர்:** உனக்குத்தான்... மாநகராட்சி... உள்ளாட்சி... வெளியாட்சி... சந்து பொந்து இண்டு இடுக்கெல்லாம் கொடுத்துட்டேனே.

**ஸ்டாலின்:** அப்பா... அந்த ஒன்றுவிட்ட சித்தப்பாவோட நாத்தனார் மகனோட பேரனுக்கு?

**கலைஞர்:** வாழ வழி பண்ணிட்டேன்.

**ஸ்டாலின்:** இலங்கைத் தமிழர்களுக்கு..?

**கலைஞர்:** கவிதை எழுதி வெச்சிருக்கேன்... இன்னுயிர் நீக்கியேனும் ஈழத் தமிழர்களைக் காப்பேன்னு வழக்கம் போல நா தழுதழுக்க... கவிதை பாடிட்டா முடிஞ்சது.

*(எல்லோரும் மகிழ்ச்சியுடன் கிளம்புகிறார்கள். கலைஞர் தொடர்ந்து பேரனைக் கொஞ்சுகிறார்)*



# மலேசியா மகாராஜன்



"தலைமுறைகளுக்கிடையே உள்ள இடைவெளியை அன்பாலும் தியாகத்தாலும் இட்டு நிரப்பக் கூடிய ஒரு மனிதனின் கதைதான் மகாராஜா'' என்கிறார் இயக்குநர் டி.மனோகரன். இவருக்கு இது முதல் படம் என்றாலும் ஏற்கெனவே அர்ஜுன், பரமேஸ்வரன் இருவரிடமும் இணை இயக்குநராகப் பணியாற்றியவர். ஜெய்ராம் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்தைப் பற்றி அவர் கூறுகையில்...

''இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னைகளில் முக்கியமானது தலைமுறை இடைவெளிதான். முதியவர்கள், 'இளைஞர்கள் எங்கள் பேச்சைக் கேட்பதில்லை' என்று தொடர்ந்து குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் அதே வேளையில், இளைஞர்கள், 'முதியவர்கள் எங்களைச் சுதந்திரமாகச் செயல்பட விடுவதில்லை' என்ற ஆதங்கத்தையும் முன் வைக்கிறார்கள். இந்த இரண்டு தலைமுறைக்குமான இடைவெளியை, தன் அன்பாலும் தியாகத்தாலும் ஒருவன் சரிசெய்கிறான் எனில், அவன்தான் மகாராஜன். அந்த மகாராஜனாக நம் மனதை வசீகரிக்கப் போகிறார் கதாநாயகன் சத்யா. சத்யாவுக்கு இணையான வேடத்தில் நாசர் நடிக்கிறார். 'இந்த ஒரு படத்தை, நானும் சினிமாவில் நடித்திருக்கிறேன் என்று என் பேரக் குழந்தைக்குப் போட்டுக் காட்டுவேன்' என்றார். அவருடைய வார்த்தை பலிக்கட்டும்'' என்கிறார். பாடல் காட்சிகளுக்கு எந்த நாடு என்று கேட்டால், ''மகாராஜனுக்கு மலேசியா!'' என்று பஞ்ச் அடிக்கிறார்!

# விக்கல் தத்துவம்



'வெண்ணிலவு ஜன்னலில் பூக்க
பின்னிரவில் மெல்லிசை கேட்க
கண்ணிரண்டில் காதல் எட்டிப் பார்க்க
உன்னை நானும் அடைந்
தேனே...'

புதுமுகப் பாடலாசிரியர் லலிதானந்த் எழுத, முதன் முறையாக இசையமைப்பாளராக அறிமுகமாகிறார் பிரேம்ஜி அமரன் (அதாங்க, என்ன கொடுமை சார் புகழ் பிரேம்ஜிதான்). 'அதே நேரம் அதே இடம்' படத்தில் இடம்பெறும் இந்தப் பாடல் கண்டிப்பாக சேனல்களின் செல்லப்பிள்ளையாக வலம் வரும் என்கிறார் பிரேம்ஜி.

''ஹீரோ ஜெய், தேவா குடும்பத்து வாரிசு. பிரேம்ஜி கங்கை அமரன் குடும்பத்து வாரிசு. ஏன் இந்த வாரிசு ஆதிக்கம்?'' என்று கேட்டால் சிரிக்கிறார் இயக்குநர் எம்.பிரபு.

''சார் இதுக்காக நாங்க எந்தத் திட்டமும் போடலை. தற்செயலாக அமைஞ்சது. ஆனால், படம் கலக்கலா வந்திருக்கு! 'சென்னை-28' க்குப் பிறகு ஜெய் - விஜயலட்சுமி காம்பினேஷன்ல காதல் வைற ரெசல்யூஷன்ல கலக்கியிருக்கு! 'முந்தானை முடிச்சு' முருங்கைக்காய் மாதிரி, ஒரு விக்கல் மேட்டர் வருது. படம் வரட்டும். அந்தக் காட்சி வரும் காலங்களில் கலாய்க்கப் பயன்படும். படம் ஜாலியோ ஜாலி'' என்கிறார் இயக்குநர் எம்.பிரபு.

**- கண்மணி**



# வெண்ணிலா கபடிகுழு

சினிமாவிலிருந்து சினிமா; வாழ்விலிருந்து சினிமா... என இரண்டு கோஷ்டி கோடம்பாக்கத்தில் இயங்கிக் கொண்டிருக்க, இரண்டாவது கோஷ்டியிலிருந்து கோதாவில் குதித்திருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன். கபடியும் காதலும் கலந்து கட்டி வந்திருக்கும் படத்தில், பாத்திரங்களுக்கு ஏற்ற நபர்களைத் தேர்ந்தெடுத்ததில் பாதி வெற்றியையும், தம் திரைக்கதை உத்தியால் மீதி வெற்றியையும் நிறுவியிருக்கிறார் இயக்குநர். கூடவே, விளையாட்டு சம்பந்தமான படம் என்பதால் கதை நெடுக மனசு ஒட்டிக் கொள்வதை மறுக்க முடியாது.

ஹீரோ விஷ்ணு, அப்பாவி கிராமத்து இளைஞர்களின் அசல். கபடிக்காக உருகுவதும், காதலுக்காக மருகுவதுமென தடதடக்க வைக்கிறார். அதுவும் அம்மா சாப்பிட வேண்டும் என்பதற்காக, தான் சாப்பிட்ட அசைவ உணவை ருசி சரியில்லை என்று எரிந்து விழுவதும், அதை அம்மா சாப்பிடும்போது சந்தோஷப்படுவதும் நடிப்பின் நெகிழ்வான பக்கங்கள்.

ஹீரோயின் சரண்யா மோகன் தாவணி போட்ட குல்ஃபி ஐஸ். அவருடைய கண்களும் புன்னகையும் அழகான காதல் கவிதையை மீட்டுகின்றன. ஹீரோவின் நண்பர்கள் அப்புக்குட்டி, நிதின், வைரன், சுந்தர், சூரி... அனைவருமே படத்தில் மிரட்டுகின்றனர். நிதின், சாப்பாட்டுப்பிரியராக வரும் நபர், அப்புக்குட்டி... பாத்திரங்களில் அழுத்தம் அதிகம். பந்தயம் போட்டு புரோட்டா சாப்பிடும் சீனில் தியேட்டர் முழுக்க லகலக.

கபடி கோச்சராக வரும் கிஷோர் தன் கட்டுச்சிட்டான நடிப்பில் கவனம் பெறுகிறார். வசனங்களின் உச்சரிப்பில் கவனம் செலுத்தினால் இன்னும் பாராட்டலாம்.

''சாமியும் சாதியும் நம்மை அழுத்தும் பாரங்கள். அதை இறக்கி வெச்சாதான் வெரசா நடக்கலாம்'' என்பது போன்ற வசனங்களில் பாஸ்கர் சக்தியின் பேனா முனையில் கூர்மை அதிகம்! செல்வகணேஷின் இசையில் பின்னணி இசை முன்னணிக்கு வருகிறது. லக்ஷ்மணனின் ஒளிப்பதிவு, காசி விஸ்வநாதனின் எடிட்டிங், படத்துக்குப் பக்கபலம்.

வலிந்து திணிக்கப்பட்ட க்ளைமாக்ஸ்; மனத்தில் ஒட்டாத ஹீரோவின் மரணம்; நம்பமுடியாதபடி நண்பர்களுக்குள் நடக்கும் கலவரம்... என குறைகள் குறைவு. நிறைகள் அதிகம்!

வெண்ணிலா கபடி குழு - நாட் அவுட்!

- மகிமைராஜன்

'ஸ்லம்டாக் மில்லியனர்' போட்ட ஆஸ்கார் சத்தத்தில் 'ஸ்மைல் பிங்கி' ('Smile Pinkie') பற்றிய செய்தி அமுங்கிப் போய் விட்டது. இந்த ஆங்கில (டாகுமெண்டரி) குறும்படமும் ஆஸ்காருக்கு முன்மொழி யப்பட்டிருக்கிறது - மேலண்ணப் பிளவுடன் பிறக்கும் இந்தியக் குழந்தை களுக்கு அறுவை சிகிச்சை மூலம் அழகிய முகமும் அர்த்தமுள்ள வாழ்க்கையும் வழங்க முடியும் என்ற விழிப்புணர்வு ஏற் படுத்துகிறது ஸ்மைல் பிங்கி. இதனைத் தயாரித்தியக்கிய மேகன் மைலன், இசை யமைப்புக்குப் பிரசன்னாவை அழைத்தார்.

அமெரிக்கா வாழ் இந்தியர் பிரசன்னா கிடார் கலைஞர். இங்கே, கிடாரில் கர்நா டக இசைக் கச்சேரிகள் வழங்கி பெயர் பெற்றவர். இப்போது, அங்கே முழு நேர இசைக் கலைஞராக வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்.

முன் அறிமுகம் இல்லாத மேகன் மைலன் பிரசன்னாவை அழைத்தபோது அவருக்கு இனிய ஆச்சர்யம். ''படத்தின் எந்தக் கட்டத்துக்கு எத்தகைய இசை வேண்டும் என்பதை ரொம்பத் தெளிவாகச் சொல்லிவிட்டார் மேகன். ஹிந்துஸ்தானி இசையை அடிப்படையாகக் கொண்டு, கிடார், ஸிதார், குழல், தபலா ஆகிய கருவி களைப் பயன்படுத்தி மெட்டு அமைத்துக் கொடுத்தேன். நாற்பது நிமிடப் படத்தில் சுமார் 15 நிமிடங்களுக்கு இசை ஓடுகிறது. அந்த அளவுக்கு இசைக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது'' என்று பிரசன்னா சந்தோஷ ஜிங்கிள் போல் பேசுகிறார். போனில் மட்டுமே மேகனுடன் பேசிய பிறகு இரண்டே நாட்களில் இசையமைத் துத் தந்திருக்கிறார்! குழந்தைகளின் உணர் வோடு ஒன்றி, அதை எதிரொலித்த ஸ்மைல் பிங்கியின் இசை, சம்பந்தப்பட்ட எல்லோர் முகத்திலும் திருப்திப் புன்னகை ஏற்படுத்திவிட்டது! இயக்குநரும் இசைய மைப்பாளரும் சந்திக்காமலே சாதனை!

''கிடாரில் கர்நாடிக் வாசித்தால் மடி சாரில் கேட் வாக் மாதிரி ஒட்டாமல் இருக் குமே?'' எனக் கேட்டால், பிரசன்னாவிடம் சிம்பிள் பதில் இருக்கிறது: ''என் ஒரு மாதப் பெண் குழந்தைக்கு கிடாரில் கர்நாடிக் வாசித்தால் கேட்கப் பிடிக்கிறது; அதனால் அந்த இசை நன்றாக இருக்கிறது என்று நம்புகிறேன்!''

''கிடாரைத் தேர்ந்தெடுத்ததால்தான் அமெரிக்காவில் போய் செட்டில் ஆனீர் களா? ஒரு வயலின் கலைஞராக இங்கே ஆரம்பித்திருந்தால் இந்தியாவிலேயே தொடர்ந்திருப்பீர்களா?''

''இசையில் மேற்படிப்புக்காக அமெரிக்கா வந்து, இங்கேயே செட்டில் ஆகிவிட்டேன். வயலின் வாசித்திருந்தால் நிச்சயம் இந்தியாவிலேயே இருந்திருப் பேன் - அமெரிக்காவில் வயலின் யானை விலை! வாங்கவே கட்டுப்படி ஆகாது!'' என்று ஜோக் அடிக்கிறார் பிரசன்னா.

– சாயா


✱ ஸ்மைல் பிங்கி

# புன்னகையின்



'ஸ்மைல் பிங்க்'
இசையமைப்பாளர்
பிரசன்னா

# சாதனை!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.